
Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

டிசம்பர் 11 – 17, 2014

# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1096



## தமிழர்களை விற்கும் கறுப்புச் சந்தை



## இந்தியா தெற்காசியாவின் பெரியண்ணா?



## கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## திருவருள்

இறைவனின் திருவருள் என்பது அவனுடைய கிருபையைக் குறிக்கின்றது. மனிதமனம் இறைவன்பால் நாட்டம் கொண்டு, அவனுக்காக தன் வாழ்நாட்களை அர்ப்பணிப்பவர்களுக்கும், அவனின்றி ஓர் அணுவும் அசையாது! எல்லாம் அவன் செயலென இறைவன்மீது பற்றுதலாய் இருப்பவர்களுக்கும் திருவருள் கிடைக்கின்றது எனலாம்.

மனிதவாழ்வில் ஏற்படும் துன்பதுயரங்களைத் தாங்கி, அவைகளைக் கடந்து போகவேண்டுமானால் இறைவனின் திருவருள் பூரணமாகக் கிடைக்க வேண்டும். இல்லையேல் மனம்சலித்து விரக்தியின் உணர்வுகளை நாடிச் சென்றுவிடும்.

இறைவனுடைய திருவருளால் அளவற்ற ஞானத்தைப் பெறுவதோடு, நிறைவான அமைதியையும் பெறமுடியும். மனதில் தடுமாற்றம் இருக்காது. சஞ்சலங்கள் இருக்காது.

**அனந்த நாராயணன், கைவேலி**

## ஆன்மீகம்

## இயேசுவின் வருகை

"இதோ, என் தூதனை உமக்குமுன் அனுப்புகிறேன். அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார். பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்ஷஷ என்கிற இந்த இறைவார்த்தை மலாக்கி 3: 1 ல் காணப்படுகிற வார்த்தைகள். மலாக்கி இறைவாக்கினர் காலத்தில், குருக்கள் தங்கள் கடமையில் தவறினார்கள்.

பலிப்பொருட்கள் இரண்டாம் தரமானதாகவும், குறைபாடு உள்ளதாகவும் இருந்தது. ஆலயப்பணி அவர்களுக்கு களைப்பை தருவதாகவும், சுமையாகவும் இருந்தது. எனவே, தூதர் வந்து, இந்த வழிபாட்டு முறைகளின் குறைபாடுகளை அகற்றி, மீட்பர் வருவதற்காக வழியை ஆயத்தம்செய்வார் என்று, இறைவாக்குரைக்கப்பட்டது.

அதாவது, மீட்பரின் வருகைதகுந்த தயாரிப்போடு இருக்க வேண்டும் என்ற செய்தியை நாம் இதிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். திருவருகைக்காலம் என்பது, கடவுளின் வருகைக்காக நம்மையே தயாரிக்கின்ற காலம். கடவுளை எதிர்கொள்ள, கடவுளை நம்முள் வரவேற்க ஆயத்தமாக இருக்கக்கூடிய காலம். அத்தகைய காலத்தில் நாம் நம்மையே ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்து, அவரை வரவேற்க ஆயத்தமாவோம்.

## பொருளாதாரத்தை பங்கிடுவோம்

எம் வறுமையை போக்க வழியிருக்கிறது. அது இஸ்லாமிய பொருளாதார பங்கீட்டு முறையில் உள்ளது. எம்மில் எவரும் தம்மிடமுள்ள பெருமளவு பொருளாதாரத்தை இவ்வுலகில் விட்டு விட்டு மரணிப்பவராக இருந்தால் அதற்காக அவர் மரண சாசனம் எழுதிவைக்கட்டும். அது அவரது பொருளாதாரம் அவரின் மறைவுக்குப்பின் பலருக்கும் பயன்பட வழிவகுக்கும்.

மாறாக தனது பொருளாதாரத்தையே சிந்தையிலும், செயலிலும் பேச்சிலும், மூச்சிலும் குடியேற்றி அதனையே தன்னுடைய பாதுகாவலனாகக் கொண்டு வாழ்ந்து மரணிப்பது ஈருலகிற்கும் ஏற்புடையதல்ல.

இமாம் கஸ்ஸாலீ(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். பொருளாதாரத்தை நேசிக்கும் ஒருவன் தலைகீழானவனாக, புத்திமாறியவனாக, பொருளாதாரத்தின் உண்மைத் தன்மையை உணராதவனாக இருக்கின்றான்.

பொருளாதாரம் என்பது நல்ல பாம்புக்குச் சமமானது. அதில் நஞ்சும் இருக்கிறது. நல்லதொரு சஞ்சீவியும் இருக்கிறது. சஞ்சீவியில் இருந்து நஞ்சை நாம் பிரித்தறியாத வரையில் அதைப் பற்றிய அறிவும், அதன் அந்தரங்கமும் எமக்குப் புரியாது என்று. எனவே நாம் இதனை பொருளாதாரத்தை புரிந்துணர்வுடன் பங்கிடுவோம்.

**எம்.சி.கலீல், கல்முனை -05**

## கவிதைப்போட்டி 1093



● பாராட்டுக்குரியது ●

### தன்மானம்

அம்மாவும் இல்லை – எனக்கு
அப்பாவும் இல்லை – இந்த
அம்மண மேனியால் – இங்கு
அவமானத் தொல்லை
என் மானம் காக்கவோ – இங்கு
எவருக்கும் கருணை இல்லை – என
அவமானம் போக்கவே
தைக்கின்றான் உடை
தன்மானம் காக்கவே.

யோகன்,
புத்தளம்.

### நிர்வாணம்


மானம் மறைக்க
இருப்பதோ அரையாடை
அதுவும் ஓட்டைகளுள்ள
பன்னாடை.
ஒட்டுப் போட்டுதவ
எவருமற்ற இச்சிறுவன்
கடுந்தவத்தால் எய்தவேண்டிய
நிர்வாணத்தைத் தானே
தைக்கும் முயற்சியால்
எய்திவிட்டான்.

அ.சந்தியாகோ,
கண்டி.

## கவிதைப் போட்டி இல 1096

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.12.2014

கவிதைப் போட்டி இல. 1096 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



### பாராட்டுக்குரியது

மானம் மறந்து (பெண்கள்)
அரைகுறை ஆடை அணியும்
இக்காலங்களில்...
மானம் காக்க எடுக்கும் முயற்சி
சிறுவனே...!
பாராட்டுக்குரியது.

ஜவின், கண்டி.

### என் கௌரவத்தை...

தாயின்றி, உணவின்றி...
ஆடையின்றி நடைப்பிணமாக...
வீதியிலே, வாழ்ந்த காலம் போதுமே!
இதையாவது, இனியாவது அணிந்து
என் கௌரவத்தை...
காத்துக் கொள்கின்றேன்.

A.செல்வராணி, வத்துகாமம்.

### திடநம்பிக்கை

உன் கந்தை துணியை
உன் முயற்சியிலே தைத்து
அணியும் ஆர்வம்
உன் வாழ்க்கையின்
திடநம்பிக்கையை
பிரதிபலிக்கின்றதே...

யே.ஒகஸ்ரா, கண்டி.

### கவனயீர்ப்பு

ஆடைகளின் விலையேற்றத்தை
அகிலத்திற்கு எடுத்துச் சொல்லும்
சிறுவனின் சிந்தனையில் எழுந்த
கவனயீர்ப்பு
காட்சி இது.

எம்.சி.கலீல்,
கல்முனை-05

### இப்படத்தைப் பார்க்க...

அரையிலே கட்ட அரையடித்
துணியுமில்லை...
என் கையே, எனக்குதவியென்று...
இத்துணியை தைத்து...
என் மானம் காக்க...
என் முயற்சி கை கூடுமோ?
என் நிலைமை புரியுதா?
உங்களுக்கு
இப்படத்தைப் பார்க்க...

ராணி,
வத்துகாமம்.

### யார் அறிவார்?

ஆடையது நிர்வாணம் மறைக்கவே...
ஆடையினூடே தெரியுதே வானமது.
இன்று வானத்தில் வதியும் அம்மா
அன்று தைத்த பாங்கு தெரியும் எனக்கு.
ஊசி நூல் கொண்டு இணைக்கிறேன்
கிழிசலை
என்வாழ்வின் விரிசலை
இணைப்பவர் யாரோ?

ஏ.எம்.கமால், புத்தளம்.

### என்று தணியும்...

கல்விக்கூடம் சென்று கல்வி பயின்று பார்
போற்றும் பாவலனாய் பவனி
வரவேண்டிய பாலிய வயதில்
பாதையோரம் கிடந்து தையல் ஊசி
கொண்டு தன் அணியைத் தானே
சீர்செய்து அணியும் இக்காலக்
கொடுமை என்றுதான் மாறுமோ...

பி,எஸ்.ஏ.தாஹிர்,
காத்தான்குடி - 03

### இறையாட்டம்

உன் கையில் நீ
நூல்கொண்டு என் கைகள்
ஆட்டுவிக்கிறாய்...
இறைவா உன் ஆட்டம்கண்டு
நான் நிலை பெறுகிறேன்
மனிதனாய் இவ்வையகத்தில்!

க.ஈஸ்வரஜனனி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் பக்கம்

### ஸ்கந்தபுரம் வீதி புனரமைக்கப்படுமா?

ஸ்கந்தபுரம் ஊடாக இராசேந்திர குளம் செல்லுகின்ற வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். நாகர் இலுப்பைக் குளம், ஸ்கந்தபுரம், இராசேந்திரகுளம், பொன்னரசன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வவுனியா செல்வதற்கு இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது பருவகால மழை ஆரம்பித்துள்ளதால் ஏற்கனவே குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் மழைநீர் தேங்கி நிற்கின்றது. குளத்துமண்ணும் இவ்வீதியில் கொட்டப்பட்டுள்ளதால் சேறும் சகதியுமாக இவ்வீதி அலங்கோலமாகக் காணப்படுகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் சேறும் சகதியுமாகக் காணப்படும் இவ்வீதியால் செல்வதால் சீருடையில் அழுக்குப் படிவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வூர் மக்களும் பிரயாணம் மேற்கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் மின்விளக்குகளும் இல்லாத காரணத்தினால் இரவில் பிரயாணம் மேற்கொள்ளும் பயணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே இவ்வீதியை புனரமைப்பதற்கும், மின்விளக்குகள் பொருத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**பாதிக்கப்பட்ட மக்கள்**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

## அமைதியின் சொற்கள்

விஞ்ஞானிகள் விண்ணிலே உயிர்கள் இருக்கின்றனவா?, இல்லையா? என்று தேடிக்கொண்டிருக்கின்றார்கள். இருக்கின்றனவா? இல்லையா? என்று நான் சொல்லவில்லை. இதுவரை அவர்கள் ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லை. கோடான கோடி மைல்களுக்கு எம்மைத் தவிர எவருமில்லை.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்





## வாசகர்சாலை

### இருள் ஒழியவேண்டும்

இன்னோரன்ன பல சுவாரசியங்கள் முரசில் களை கட்டுகின்றது. முரசின் வளர்ச்சி பாராட்டுக்குரியதே. அறிவை வளர்க்கக்கூடிய பலவற்றை முரசுவாரி வழங்குகின்றது.

நாகரிகங்களின் மோதல் மற்றும் மூன்றாம் பாலினம் ஆகிய கட்டுரைகள் சிறப்பானவை. அதாவது 1094 முரசில் வெளிவந்த மூன்றாம் பாலினம் என்ற கட்டுரையை அனைவரும் படிக்கவேண்டும். சமூகத்தில் உள்ள அறியாமை எனும் இருளை களைய இக்கட்டுரை சாலப் பொருத்தமானது.

சு.சாமந்தி, யாழ்ப்பாணம்.

### தனி ரகம்

வாரத்தின் வண்ண மலர் நீ எனக்கு தினமும் என் முகம் மலர – நான் ரசிக்கும் சுவையைத் தேன் சொட்டாக எனக்குச் சொத்தாக என்னுள்ளே கொட்டுகிறாயே இந்த வாரத்தின் பின் அடுத்தவாரம் வரை அடக்கமுடியாத தவிப்பால் என்னைத் தவிக்க வைப்பதிலும் நீதரும் இன்பச் சுவையோ ஒரு தனி ரகம்.

இளம்பிறை யோகன்,
புத்தளம்.

### 'சூப்பர்'

வாரம் வாரம் வசந்தம்வீசிக் கொண்டிருக் கின்றாய். அனைத்துப் பக்கங்களும் சூப்பரோ சூப்பர். தினமுரசு இன்னுமின்னும் பலவற்றை சுமந்து வரவேண்டும். அதுவே கனதியாக இருக்கும். அதை முரசு நிறைவேற்றவேண்டும்.

க.சுதா, திருகோணமலை.

### நெஞ்சம் கனக்கிறது

விளையாட்டுச் செய்திகள், சினி விசிட், 2ஆம் பக்கம் ஆகியவை பிரமாதம். தேன்கிண்ணப் பகுதியில் இடம்பெறும் கவிதைகள் சூப்பர். பக்க வடிவமைப்பு சிறப்பு.

சந்தித்தவேளை... எனும் கட்டுரை பார்க்கும்போது என் நெஞ்சம் கனக்கிறது. அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் ஹியூஸின் மரணம் உலக விளையாட்டு ரசிகர்களை துக்கத்துக்கு உள்ளாக்கியுள்ளது. நாமும் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்போம். இதுபோன்ற தவறுகள் விளையாட்டு அரங்குகளில் இடம்பெறாமல் இருப்பது ஒவ்வொரு விளையாட்டு வீரரதும் கடமையாகும்.

எம்.தனுஷன்,
வவுனியா.

# பொருத்தமான நேரத்தில் தேவையானதை செய்பவர்

# — அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா —

**மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் உறவுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பொருத்தமான நேரத்தில் தேவையான உதவிகளை வழங்கியுள்ளார். இது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என பதுளை ஹல்துமுல்ல பிரதேச சபையின் பிரதி தவிசாளர் சிங்கமுத்து அசோக்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.**



கொஸ்லாந்த, மீரியபெத்த பகுதிகளில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சேகரிக்கப்பட்ட உலருணவுப் பொருட்களை பூனாகலை மாவத்தை தேயிலை தொழிற்சாலையில் தங்கியுள்ள அந்த மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், எங்கள் பகுதி மக்கள் மண்சரிவினால் பாதிப்புக்குள்ளான மறுநிமிடமே எங்களுடைய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களிடம் தொடர்பு கொண்டு நான் என்ன செய்ய வேண்டும்? என்ன உதவிகள் தேவை என கேட்டிருந்தார். அவரிடம சொன்னோம் தற்போதைக்கு எதுவும் தேவையில்லை. ஆனால் நிச்சயம் உங்களின் உதவி தேவை என்று அதற்கு அமைவாக நாங்கள் தற்போது கேட்டுக்கொண்டமைக்கு அமைவாக இன்றைய தினம் இந்த உதவிப்பொருட்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உண்மையிலேயே இது மகிழ்ச்சியான விடயம் எந்த நேரத்தில் மக்களுக்கு எந்த உதவி தேவையோ அதன்ன அமைச்சர் அவர்கள் வழங்கிவைத்துள்ளார். மக்கள் பாதிக்கப்பட்டுள்ள சமயம் ஏராளமான உதவிகள் கிடைத்தன. ஆனால் அது கும்பலில் கோவிந்தா மாதிரி போய் விட்டது. இந்த நிலையில் தற்போது கிடைத்துள்ள இந்த உதவிப் பொருட்கள் மக்களுக்கு முழுமையான பயனை வழங்கும் எனக்குறிப்பிட்ட அவர், பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை வெறும் கையுடன் வந்து பார்வையிட்ட வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிமார்கள் மலையக மக்களுக்கு நாங்கள் எந்த அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை என்றும், இந்த மக்களுக்கு வடக்கில் காணிகளை வழங்கவுள்ளதாக குறிப்பிட்டுச் சென்றனர். இது ஒரு நகைப்பிற்குரிய விடயம். வடக்கில் வாழ்கின்ற மக்களுக்கு குறிப்பாக மலையகத்தில் இருந்து சென்று வாழ்கின்ற மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தியவர்கள், அவர்கள்மீது பாராபட்சங்களை காட்டியவர்கள் இங்கு வந்து பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்காக நீலிக்கண்ணீர் விடுகின்றனர், என கூட்டமைப்பின் செயற்பாடுகளையும் சாடினார்.

# உணர்ச்சிகரமான அரசியல் பிழைப்பு பலிக்காது!

## என்கிறார் திகாமடுல்லை எம்.பி

இனத்தின் பெயரால் அரசியல் கட்சிகளை வைத்து, இனவாதத்தை வளர்த்து, மக்களை உணர்ச்சிவசப்படுத்தி அரசியல் செய்பவர்களின் பிழைப்பு இனி ஒருபோதும் பலிக்கப் போவதில்லை என்று திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன தெரிவித்தார்.

அம்பாறை பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட சுழல் காற்றினால் 15 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் "30 வருடகால கொடிய யுத்தம் மற்றும் பயங்கரவாத சூழ் நிலையிலிருந்து தற்போது நாம் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ்கின்றோம். பயங்கரவாதம் மற்றும் கொடிய யுத்தத்துக்கு முடிவு கட்டி, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் பாராபட்சமின்றி அபிவிருத்தி செய்கின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே, வாக்களிப்பதற்கு மக்கள் சித்தமாகவுள் ள்னர்.

இனத்தின் பெயரால் அரசியல் கட்சிகளை வைத்து, பிழைப்பு நடத்துபவர்களின் முகத்திரையை கிழித்து எறிவதற்கான சந்தர்ப்பமாக எதிர்வரும் ஜனாபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

மேலும், பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஜனாதிபதி ஆசைகாட்டி அவரது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு எதிரணியினர் முயற்சி செய்துவருகின்றனர்.

இந்த நாட்டு மக்கள் ஒரு போதும் நன்றி மறக்கமாட்டார்கள். இன்று கிராமங்களையும் நகரத்துடன் இணைத்து சகலருக்கும் சமமான அபிவிருத்திகளையும் நெடுஞ்சாலைகள், காப்பெற் வீதிகள் மற்றும் கல்வி, சுகாதார அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ள எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவை அதிகளவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வதன் மூலம் இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்க. மக்கள் தயாராகவுள்ளனர்" என்றார்.

# சமூக ஒருமைப்பாடும் சகவாழ்வு எண்ணக்கருவும் பயிற்சி நெறி

சமூக ஆர்வலர்களுக்கு சமூக ஒருமைப்பாடும் சகவாழ்வு எண்ணக்கருவும் எனும் தொனிப்பொருளிலான மூன்று நாள் பயிற்சி நெறி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

நாடாளாவிய ரீதியில் பல்வேறு சமூக அமைப்புக்களில் பணியாற்றும் சுமார் 30 சமூக ஆர்வலர்கள் எழுத்தாளர்கள், சமாதான சகவாழ்வுச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

செவ்வாய்க்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை நடத்தப்பட்ட பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய பிலிக்ட் திட்டத்தின் இணைப்பாளர் விஜிதா ரெங்கநாதன், "பண்பாடு பற்றிய எமது சிந்தனையில் மாற்றம்வேண்டும். இச்சிந்தனை மாற்றம் இன்று அவசியமானது. பிளவுகளோடும் மோதல்களோடும் பண்பாடு கொண்டுள்ள உள்ளார்ந்த தொடர்புகளையும் பிரச்சினைகளின் தீர்வுக்கு பண்பாடு வழங்கக்கூடிய ஆக்கபூர்வமான பங்கையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும், பிலிக்ட் அமைப்பும் நன்குணர்ந்துள்ளதால் இலங்கையில் வாழும் பல்லின கலாசார பண்பாடுகள் நிறைந்த மக்களிடையே சமூக ஒருமைப்பாட்டையும் சகவாழ்வையும் ஏற்படுத்த விரும்புகின்றது" என்றார்.

# ஈராக் இராணுவத்தில் விண்வெளி மனிதர்கள்!

ஈராக்கில் சுமார் 23,000 'மர்ம' இராணுவ வீரர்கள் மற்றும் தளபதிகளுக்கு, கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்பட்ட மாத ஊதியம் சுமார் 1 பில்லியன் டொலர் அளவை எட்டியுள்ளது. ஆனால், இன்றுவரை ஊதியம் பெற்றுவரும் இந்த மர்ம வீரர்கள் எங்கே உள்ளார்கள் என்பதுதான் தெரியவில்லை என ஈராக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

மர்ம இராணுவ வீரர்கள் மற்றும் தளபதிகள் என நாம் குறிப்பிட்டதன் காரணம், இந்த தளபதிகள் மற்றும் வீரர்களை இதுவரை யாரும் கண்ணால் கண்டதில்லை. நாட்டில் உள்ள எந்த இராணுவ முகாமிலும் அவர்கள் இல்லை. அவர்களது வீட்டு முகவரிகளும் போலி!



ஈராக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மிஷான் அல்-ஜுபோரி, "மிகவும் அபாயகரமான கோப்பு ஒன்றுடன் நான் இப்போது டீல் பண்ணி வருகிறேன். ஈராக்கிய இராணுவத்தின் சுமார் 23,000 பேர், யாரென்றே தெரியாமல் நாம் கடந்த 5 ஆண்டுகளாக மாதாமாதம் ஊதியம் வழங்கி வருகிறோம். (அட கடவுளே ஈராக்கிலும் கோப்புக்களால் பலருக்கு தலையிடிதான்...!)

இராணுவ அதிகாரிகளிடம், இந்த ஆட்களெல்லாம் யார் என்று கேட்டால், அவர்கள் '.'.பாதையூன்கள்' என்று கூறிவிட்டு மர்மமாக சிரிக்கிறார்கள்" என்கிறார். அரபு மொழியில் '.'.பாதையூன்கள்' என்பதன் தமிழ் அர்த்தம் 'விண்வெளி மனிதர்கள்'.

சில தினங்களுக்கு முன் ஈராக்கிய பிரதமர் ஹைதர் அல்-அபாத் தெரிவித்த ஒரு விஷயம், சர்வதே ஊடகங்களின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தது.

"எமது இராணுவத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையை பார்த்தால், தீவிரவாதிகளுக்கு சரியான முறையில் பதிலடி கொடுக்கமுடியும் வகையில் உள்ளது. ஆனால், அதில் ஆயிரக்கணக்கான ஆட்கள் எங்கே உள்ளார்கள் என்பதுதான் தெரியவில்லை" என்றார் அவர்.

அதன்பின் அந்த விவகாரத்தை ஆராய நாடாளுமன்ற விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவினருக்குத்தான், ஈராக்கிய இராணுவ அதிகாரிகள், தமது இராணுவத்தில் விண்வெளி மனிதர்கள் உள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

உண்மையில் இந்த விவகாரம் என்னவென்றால், அமெரிக்க இராணுவம் ஈராக்கில் இருந்து வெளியேறுமுன் ஈராக்கிய இராணுவத்தை பலப்படுத்தவேண்டும் என்ற திட்டத்தை செயற்படுத்தியது. இலட்சக்கணக்கில் உள்ளூர் ஆட்களை இராணுவத்தில் இணைத்துக்கொண்டனர். அதில் பல ஆயிரம் ஆட்கள் போலி.

இந்த ஆயிரக்கணக்கான ஆட்களுக்கு (23,000 என்பது ஒரு உத்தேசக் கணக்குதான். நிஜ எண்ணிக்கை அதைவிட இருமடங்கு இருக்கலாம். ஈராக்கிய பிரதமர் 50,000 என்கிறார்) இன்றுவரை ஊதியம் மாதாமாதம் வழங்கப்படுகிறது.

ஊதியத்தை பெற்றுக் கொள்பவர்கள் யார் என்பதுதான் இன்றுவரை தெரியவில்லை. ஈராக்கிய வங்கியின் விண்வெளி கிளைக்கு பணம் அனுப்புகிறார்களோ!

தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# உணர்ச்சியூட்டும் பிரசாரங்கள்!

ஜனாதிபதித் தேர்தலில் "யாருக்கு வாக்களிக்கவேண்டும்" என்பதை முஸ்லிம் மக்கள் ஏற்கெனவே தீர்மானித்துவிட்டார்கள் என்று ஒரு அபிப்பிராயத்தை உதிரிகளான சில முஸ்லிம் அமைப்புக்கள் தோற்றுவித்து வருகின்றன.

அதற்குக் காரணம் மைத்திரிபால சிறிசேனா மீதான நம்பிக்கையோ, அவரின் அரசியல் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாக அர்த்தமாகாது. பொதுபல சேனாவினர் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டபோதும், பள்ளிவாசல்களை உடைத்து நொருக்கியபோதும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு அதைத் தடுக்க முற்படவில்லை என்றும், அது போதாதென்று பொதுபலசேனா வினருடன் பாதுகாப்புச் செயலாளர் நெருக்கமாக இருந்ததும் முஸ்லிம் மக்களை ஆத்திரமடையச் செய்தது.

எல்லா விடயங்களிலும் முடியுமான-வரை நேரடி விஜயம்செய்து ஆராய்ந்து ஆறுதல்கூறும் ஜனாதிபதி.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களில் அவ்வாறு செய்யவில்லை என்ற கோபம் பொதுவாகவே முஸ்லிம்கள் மத்தியில் இருப்பது உண்மை.

ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தலைதூக்கி ஆடிய போது மத்திய அமைச்சராக இருந்த மைத்திரிபால அதற்கு எதிராக ஒரு வார்த்தைகூட பேசவில்லை. உடைக்கப்பட்ட பள்ளிவாசல்களையோ, கோயில்களையோ தனது பயணங்களின் போதுகூட எட்டிப் பார்த்ததில்லை.

தற்போது முஸ்லிம் மக்கள் மைத்திரிக்கு ஆதரவளித்து இந்த அரசு மீதான தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆட்சி மாறிவிட்டால் இந்த நாட்டில் பொதுபல சேனாவினரோ, ஹெல உறுமயவினரோ நடமாடவே அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை யாரும் பெற்றுக் கொடுக்கமுடியாது.

ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறப்போவதில்லை என்பதுதான் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக தென் இலங்கை அரசியலில் அரங்கேறிவரும் அரசியலாக இருப்பதை நாம் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது.

தென்னிலங்கை ஆட்சியாளர்களின் குணாதிசயங்களை சரியாக மதிப்பிட்டு, அவர்களை எவ்வாறு அணுகுகின்றமோ அதில்தான் சிறுபான்மை இனங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெற்றிகளைப் பெற்றுள்ளன. அதேபோல் தற்போதைய தென்னிலங்கை அரசியல் சூறாவளியையும் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் புத்திக்கூர்மையோடு எதிர்கொள்ள வேண்டும்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை பேசக்கூடிய துணிச்சலும், முடிவான்றை எடுத்து செயற்படுத்தக்கூடிய ஆற்றலும் மகிந்தவுக்கா, மைத்திரிக்கா இருக்கின்றது? என்று கேட்டால் அரசியலை ஆழமாக ஆராய்ந்து பார்க்கக்கூடிய எவரும் மைத்திரியை நோக்கி விரலை நீட்டமாட்டார்கள். ஆதரவை வழங்கி நமது நியாயத்தை ஜனாதிபதி மகிந்தவோடு பேசுவதுதான் சாத்தியம். தவறுகளை திருத்துவதற்கு விருப்பம் இருந்தால் இன்னொரு தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் ஒரு இனம் சிந்தித்து எடுக்கவேண்டிய முடிவு அதுவாகத்தானே இருக்கமுடியும். சிந்திப்போம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# தமிழர்களை விற்கும் கறுப்புச் சந்தை

**தூரநோக்க கொள்கையும், தேர்தலுக்குப் பின்னான பொது வேலைத் திட்டத்துக்கான இணக்கமும் இல்லாமல், மகிந்த ராஜபக்ச என்ற தனிமனிதனுக்கு எதிராக அடிப்படையற்று கூட்டுச் சேர்ந்திருக்கும் மைத்திரிபால அணியினருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கூட்டமைப்பு கூறுமாக இருந்தால் அது முன்னர் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கூறியதைப்போலவே இருக்கும்.**

தேர்தல் திருவிழா ஆரம்பமாகிவிட்டது. தாய்க் கட்சிகள் இன்று எவர் இருப்பார்? நாளை எவர் போவார்? என்ற அச்சத்தோடு இருக்கின்றன. சிறிய கட்சிகளோ இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறு பணம் உழைத்துக் கொள்வது என்ற ஓட்டத்தில் கள்ளச்சிரிப்பும், பொய்யுமாக பலபேருடைய கதவையும் தட்டிக்கொண்டிருக்கின்றன.

அரசியலில் கொள்கை, தன்மானம் என்பதெல்லாம் இன்றைக்கு இல்லை. நேற்று எதிரிகளாக இருந்தவர்கள் இன்று கட்டித்தழுவி சிரித்தபடி போட்டோக்களுக்கு போஸ் கொடுக்கின்றார்கள். தொண்டர்களோ அரசியலில் நடக்கும் மாயநிகழ்வுகளை புரிந்து கொள்ளமுடியாமல் திணறிப்போய் இருக்கின்றார்கள்.

பரம எதிரிகளாக இருந்த பச்சையும் நீலமும் இப்போது தமது கலர்களையே கைவிட்டு அரசியல் பழிவாங்கலுக்காக பொதுக்கலருக்கு மாறிவிட்டார்கள். வாக்காளர்கள் பச்சையும் இல்லாமல், நீலத்தில் எந்த நீலம் என்று தெரியாமல் குழம்பிப்போய் இருக்கின்றார்கள்.

அரசியல் தலைமைகள் தமது சுயஇலாபங்களுக்காக தம்மை பகடைக்காய்களாக பயன்படுத்துகின்றன. என்பதை வாக்காளர்கள் இப்போது தெரிந்துகொண்டுள்ளார்கள். தலைமைகளிடம் மக்களுக்கான கொள்கைகளும் இல்லை. அதற்கான அர்ப்பணிப்புக்களும் இல்லை. பணம் மட்டுமே யார், எந்த அணியில் இருக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினுள்ளும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினுள்ளும் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம் கட்சிகளுக்கும், ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய, போன்ற கட்சிகளுக்கும், மலையக மற்றும் கொழும்பு தமிழ் கட்சிகளுக்கும்கூட பணப்பேரப் பேச்சில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் பிரகாசமாக இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி எட்டாம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஜனவரி ஏழாம் திகதி வரையும் கூட கட்சிவிட்டு கட்சி மாறும் காட்சிகள் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளது.

இந்த நிலையில் சில திரைமறைவு பேச்சுக்களும், ஒப்பந்தங்களும், பணப் பரிமாற்றங்களும்கூட நடைபெற்றுவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் முடிவு செய்யவில்லை என்றும், கிராமங்கள்தோறும் சென்று தமிழ் மக்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்ட பின்னரே யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுக்கப் போவதாக மாவை சேனாதிராஜா கூறிவருகின்றார்.

மறுபக்கம் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களோ, எந்த வேட்பாளர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு தொடர்பில் தம்மோடு பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றாரோ அவருக்கே ஆதரவளிப்பது தொடர்பாக தீர்மானிக்கமுடியும் என்று கூறிவருகின்றார்.

கூட்டமைப்பில் டிசம்பர் ஏழாம் திகதிவரை வலியுறுத்தப்பட்டு வந்த விவகாரம் தற்போது காலாவதியாகி உள்ளது. அதாவது நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தென் இலங்கையைச் சேர்ந்த எந்தவொரு வேட்பாளருக்கும் தமிழ் மக்கள் ஆதரவளிக்கக் கூடாது. தமிழ் வேட்பாளர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவருக்கே வாக்களிக்கச் செய்யவேண்டும் என்ற கருத்து புலம்பெயர் புலி ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்டது.

தமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு கூட்டமைப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாக இருந்தால் அதற்கான செலவுக்கான பணத்தை தாம் தந்துதவத் தயார் என்றும் கூறப்பட்டிருந்ததோடு, கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமாகாண சபையின் உறுப்பினர்கள் பலருக்கும் பெருந்தொகைப் பணம் கை மாறப்பட்டுள்ளது.

எனினும், கூட்டமைப்பின் தலைமைகளுக்கும் எதிர்க்கட்சிகளின் பொது கூட்டணித் தலைவர்களுக்குமிடையே இடையே இரகசியமாக நடைபெற்றுவந்த பேச்சுக்களின் அடிப்படையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக களம் இறங்கும் வேட்பாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவது என்பதும், அதற்காக பெருந்தொகைப் பணம் வழங்கப்படவேண்டும் என்பதும் முடிவுசெய்யப்பட்ட தீர்மானமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெளிப்படையான உறவை வைத்துக்கொண்டால் சிங்கள மக்களிடையே இனவாத பிரசாரம் எடுபட்டுவிடும் என்பதால் இரகசியமாகவே உறவை வைத்துக் கொள்வதென்பதே முடிவாகும். தேர்தல் இறுதி நேரம்வரை கூட்டமைப்பு தனியான பிரசாரத்தை மேற்கொண்டு வந்தாலும் இறுதியில் மைத்திரிபாலவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கேட்பதே கூட்டமைப்பின் தந்திரோபாயமாகும்.

அரசாங்கமோ கூட்டமைப்பின் ஆதரவு தமக்குத் தேவையில்லை என்பதை வெளிப்படையாகவே கூறிவிட்டது. எதிரணியோ வெளிப்படையாக கூட்டமைப்பின் ஆதரவைக் கோருவதற்குத் தயாராக இல்லை. அதாவது தென் இலங்கை தலைமைகள் கூட்டமைப்பை அரவணைக்கத் தயாராக இல்லை. கூட்டமைப்பின் கபடத்தனமான அரசியல் அணுகுமுறையானது, தமிழ் மக்களின் வாக்குகளை செல்லாக் காசாக மாற்றியுள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு தாம் அனுபவிக்கும் அரசியல் சுகபோகங்களை கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில்லை. தேசிய அரசியலில் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு இருக்கக்கூடிய வலிமையை உணர்த்துகின்ற தந்திரோபாயமும் கூட்டமைப்பினரிடம் இல்லை.

ஆனால், கூட்டமைப்பினரின் சுயஇலாபங்களுக்காக தமிழ் மக்களின் தலையெழுத்தை சிதைத்துவிட முடியாது. கடந்த காலங்களைவிடவும் தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டி கடுமையாக இருக்கும் என்றே ஆருடங்கள் கூறப்படுகின்றது. வெற்றிபெறுவதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் முக்கிய பங்குவகிக்கப்போகின்றது. ஆகவே, தமிழ் மக்களின் வாக்குகளை வெற்றிபெறுகின்ற போட்டியாளரின் வெற்றியில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

தூரநோக்க கொள்கையும், தேர்தலுக்குப் பின்னான பொது வேலைத் திட்டத்துக்கான இணக்கமும் இல்லாமல், மகிந்த ராஜபக்ச என்ற தனிமனிதனுக்கு எதிராக அடிப்படையற்று கூட்டுச் சேர்ந்திருக்கும் மைத்திரிபால அணியினருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு கூட்டமைப்பு கூறுமாக இருந்தால் அது முன்னர் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கூறியதைப் போலவே இருக்கும்.


கூட்டமைப்பு மைத்திரிபால அணியினருடன் இரகசியமாக செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் என்ன? என்பதை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். கூட்டமைப்போடு செய்து கொண்டதைப்போல் ஜாதிக ஹெல உறுமையவுடனும் மைத்திரிபால இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கூட்டமைப்பும், ஜாதிக ஹெல உறுமயவும் இரு வேறு துருவங்கள் என்பது நாடறிந்த உண்மை. அப்படி என்றால் இருதரப்பினருடனும் இரகசிய ஒப்பந்தம்செய்து அதை நாட்டு மக்களுக்கு தெரிவிக்காமல் மறைத்து வைத்துக் கொண்டுள்ள மைத்திரிபால யாரை ஏமாற்றப் பார்க்கின்றார். வாக்காளர்களையா? இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள கட்சிகளையா? அல்லது தன்னைத்தானேயா? மைத்திரிபாலவும் அவரோடு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள கட்சித் தலைமைகளுமே இதற்கு பதிலளிக்கவேண்டும்.

சரத் பொன்சேகா ஆதரவு தருவதால், ஜனாதிபதியாக தெரிவானதும், பறிக்கப்பட்ட வரப்பிரசாதங்கள் அத்தனையையும் சரத்பொன்சேகாவுக்கு 48 மணி நேரத்துக்குள் பெற்றுக் கொடுப்பேன் என்று கூறியிருக்கும் மைத்திரிபால, தமிழ் மக்களுக்கு என்ன செய்வதாக கூறியிருக்கின்றார்.

இன்று மைத்திரிக்கு வாக்களிக்குமாறு கூறும் கூட்டமைப்பு, சிலவேளை மைத்திரி ஜனாதிபதியானால், மைத்திரியை கடும் போக்குவாதியாகவும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மறுக்கும் சிங்களத் தலைமையாகவும்கூறி எதிர்த்து அறிக்கைகள் விடுவார்கள். தமிழ் மக்களும் கூட்டமைப்பின் இதுமாதிரியான கோமாளித்தனங்களுக்கு எடுபட்டு செயற்பட்ட காலம் தற்போது இல்லை என்பதை உணர்த்தவேண்டும்.

திரைமறைவுக்குப் பின்னால் நடந்த கறுப்புச் சந்தையில் தமிழ் மக்களை கூட்டமைப்பினர் நல்ல விலைக்கு பேரம்பேசி விற்றுவிட்டு பணம் ஏற்கெனவே அவரவர் கைகளுக்கு வந்துவிட்டது. இப்போது தமிழ் மக்களுக்கு அபிப்பிராயம் கேட்கப்போவதாகவும், வேட்பாளரோடு பேசப்போவதாகவும், கதை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இம்முறை கூட்டமைப்பினருக்கும் தமிழ் மக்கள் அதிர்ச்சிகளை கற்பிப்பார்கள் என்பதையே கூட்டமைப்புக்குள்ளே நிலவும் கோஷ்டிப் பூசல்கள் உணர்த்துகின்றன.





# புலிகளின் வதை முகாமில்

வதை 143

மணியம்

இன்று தமிழ் தலைமை கூடிக்குலாவும் ஐக்கிய தேசியக் கட்சிதான் அன்று ஆட்சி அதிகாரத்தில் இருந்தது.

அந்த ஐ.தே.க-தான் 1977இல் பதவிக்குவந்த பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தது என்பதையும் இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கமாட்டார்கள் அல்லது வசதியாக மறந்துபோய் இருப்பார்கள். அந்த ஐ.தே. கட்சி ஆட்சியுடன் புலிகள் கூடிக்குலாவி இந்திய அமைதி காக்கும் படையை வெளியேற்றியபின்னர், தமது சாணக்கியத்தை தாமே மெச்சிக்கொண்டு, அந்த ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் இரண்டாவது ஈழப்போரையும் ஆரம்பித்திருந்தனர். இந்த இரண்டு ஏகாதிபத்திய சார்பு வலதுசாரிப் பிற்போக்கு சக்திகளிடத்தில்தான் தமிழ் மக்கள் சிக்கி துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர்.

எனவே எமது இரண்டாவது பிரயாண முயற்சியையும் பற்றியும் இங்கு சொல்வது அவசியமானது.

இம்முறை இரண்டு மூன்று தனியார் பஸ்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம். ஆனால் வவுனியாவைக் கடந்து செல்வது அங்கு தீவிரமாகப் போர் நடைபெறுவதால், சாத்தியமில்லை என்றபடியால், மதவாச்சி சென்று, அங்கிருந்து மன்னார் சென்று, பின்னர் பூநகரிக்கூடாக அல்லது விடத்தல் தீவிலிருந்து படகுகள்மூலம் யாழ்ப்பாணம் செல்ல முயற்சிப்பது என முடிவாயிற்று.

அதிகாலையிலேயே கொழும்பிலிருந்து புறப்படுவது என முடிவாகி இருந்தபோதிலும், எம்முடன் பயணம் செய்பவர்கள் பல இடங்களிலுமிருந்து வந்துசேர நண்பகலாகி விட்டது. எனவே பிற்பகலில் தான் புறப்பட முடிந்தது.

எமது பஸ்கள் புத்தளம் நகரை அண்மிக்கும்போது பொழுதுசாய ஆரம்பித்து விட்டது. எனவே இரவு நேரத்தில் பயணத்தைத் தொடர்வது உசிதமல்ல என்ற அபிப்பிராயத்தைப் பலரும் வெளியிட்டனர். அதற்குக் காரணம், நாட்டில் அன்று நிலவிய சூழ்நிலை அப்படி இருந்தது. நாம் புறப்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் அனுராதபுரம், மிகிந்தலை போன்ற பாதைகளில் வைத்து வடக்கு நோக்கிச் சென்ற சில பயணிகள் பஸ்கள் தாக்கப்பட்டிருந்ததுடன், புத்தளத்திலும் சில சம்பவங்கள் பெற்றிருந்தன.

எனவே புத்தளத்தில் இரவு தங்கிச் செல்வது என ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது. ஆனால் இவ்வளவு தொகையான ஆட்கள் புத்தளத்தில் எங்கு தங்குவது என்பதுதான் பிரச்சினையாக இருந்தது. அத்துடன் எமது பிரயாணத்தின் போது வழியில் இரண்டொரு இடங்களில் எம்மை வழி மறித்து விசாரித்த பொலிசார், நாம் வடக்குநோக்கிச் செல்வது பாதுகாப்பும் சாத்தியமும் அற்றது என்று தெரிவித்ததுடன், கொழும்புக்குத் திரும்பிச் செல்லுமாறும் அறிவுறுத்தியிருந்தனர். ஆனால் அவர்கள் எம்மை நிர்ப்பந்திக்காதபடியால், நாம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தோம்.

நாம் எமது தங்குமிடம் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னரே எமது பஸ்கள் புத்தளம் நகரை அடைந்து விட்டன. எமது பஸ் சாரதிகளுக்கும், உடன் பயணித்தவர்களுக்கும் புத்தளம் நகரில் சில முஸ்லீம் சகோதரர்களைத் தெரியுமாகையால், அவர்களிடம் சென்று தங்குவதற்கான வசதிகள் குறித்து விசாரித்தனர். ஆனால் அந்த நண்பர்களும் சரி, சில பள்ளிவாசல் நிர்வாகிகளும் சரி எமது நிலை குறித்து அக்கறைப்பட்ட போதிலும், வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் இன்றைய சூழலில் புத்தளம் நகரில் தங்குவது அவ்வளவு பாதுகாப்பானது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்தனர். அத்துடன் புத்தளம் பகுதியில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் கற்பிட்டி போன்ற கிராமங்களுக்குச் சென்று அன்றைய இரவைக் கழிப்பது பாதுகாப்பானது என்றும் ஆலோசனை கூறினர்.

ஆனால் கற்பிட்டி போன்ற கிராமங்களில் வாழ்பவர்கள் தமிழ் மக்கள்தான் என்ற போதிலும், வடபகுதித் தமிழர்களுக்கு கிழக்குத் தமிழர்களுடன் உள்ள அளவு தொடர்பு, இலங்கையின் மேற்குப் பகுதியில் வாழும் (மன்னார் பகுதி தவிர்த்து) தமிழர்களுடன் இல்லாதிருந்ததுடன், அன்றைய சூழ்நிலையில் அவ்வாறு திடீரென வடபகுதியைச் சேர்ந்தவர்களை வரவேற்றுத் தங்க வைப்பார்களா என்ற சந்தேகமும் எம்மில் பலருக்கு இருந்தது.

இந்த நிலையில் எம்முடன் பயணம் செய்த கோப்பாயைச் சேர்ந்தவரும், விசுவமடு படித்த வாலிபர் திட்டத்தில் விவசாயம் செய்தவருமான ஒருவர் (அவர் எனக்கும் தெரிந்தவர்) ஓர் ஆலோசனையை முன்வைத்தார். அதாவது தனக்குத் தெரிந்த 'எம்.பி.எஸ்' என்ற பெயருடைய பெரும் வர்த்தகர் ஒருவர் கற்பிட்டிக்குச் செல்லும் வழியிலுள்ள முஸ்லீம் கிராமம் ஒன்றில் இருப்பதாகவும், அவரிடம்சென்று உதவி கோரினால் பெரும்பாலும் உதவி செய்வார் என்றும் கூறினார். ஆனால் அப்பொழுதெல்லாம் இப்பொழுது இருப்பது போன்ற தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத காரணத்தால், முன்கூட்டியே அந்த வர்த்தகருடன் தொடர்பு கொண்டு எமது வருகையை அறிவிக்க முடியவில்லை. எனவே நேரடியாகவே செல்வதென முடிவாயிற்று.

சிறிதுநேரப் பயணத்தின் பின்னர் எமது வாகனங்கள் அந்தக் கிராமத்தை அடைந்து, அவரது வீட்டைநோக்கி நாம் சென்றோம். பெரும் தென்னந்தோட்டம் ஒன்றில் அவரது இல்லம் அமைந்திருந்தது. வீட்டிற்குமுன்னால் இருந்த தென்னந்தோட்டத்திற்குள் பெரும் களஞ்சியசாலைகள் காணப்பட்டன. எம்.பி.எஸ் என்றபெயருடன் பல லொறிகளும் நின்றுகொண்டிருந்தன. இரவுநேரம் என்றாலும் பல வேலையாட்களும் ஓடியாடித் திரிந்து கொண்டிருந்தனர். அந்த வர்த்தகர் கொழும்பிலிருந்த சிகரெட், குளிர்பானம், பால்மா போன்றவை உட்பட பலவிதமான பிரபல வர்த்தக நிறுவனங்களுக்கு புத்தளம் பகுதிக்கான முகவராக இருந்தார் என்பதை அறிந்துகொண்டோம்.

திடீரென அவரிடம் போய் இறங்கிய எம்மைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்த அவர், தன்னை நாடிவந்த எம்மை இன்முகத்துடன் வரவேற்றார். எமது விசுவமடு நண்பர் சொன்ன விபரங்களை அறிந்து கொண்டு, துரிதமாகச்செயற்பட்டு நாம் அன்றிரவு தங்குவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துதந்தார். எம்முடன் வந்த பெண்களை தனது வீட்டிலேயே தங்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆண்களை தனது வெறுமையாக இருந்த களஞ்சிய சாலைகளில் தங்க ஏற்பாடு செய்தார். தேநீரும் குளிர்பானங்களும் சிற்றுண்டியும் தந்து உபசரித்தார். புத்தளம் பகுதியில் அவர் மிகப்பெரிய வர்த்தகர் என்றபடியால், பொலிசாரின் செல்வாக்கும் அவருக்கு இருந்தது. எனவே அன்றைய இரவை நாம் மிக நிம்மதியாக அவரது இடத்தில் கழித்தோம். அநேகமானோர் இரவுதூங்காமல் பல்வேறு விடயங்கள் குறித்தும் உரையாடுவதிலேயே அன்றைய இரவைக் கழித்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று சில மாதங்களில்தான் புலிகள் வடக்கில் வாழ்ந்துவந்த முஸ்லீம் மக்களை இரண்டு மணித்தியால அறிவித்தலில் உடுத்த துணியுடன் அங்கிருந்து விரட்டியடித்தார்கள். புலிகளின் இந்த காட்டுமிராண்டித்தனமான இனச்சுத்திகரிப்பைப் பற்றி எண்ணும் நேரங்களில் எல்லாம், முன்பின் தெரியாத எமக்கு அன்றிரவு அடைக்கலம் கொடுத்த அந்த முஸ்லீம் வர்த்தகரின் முகம் என் மனக்கண் முன் தோன்றுவது ஒரு வழமையாகிவிட்டது.

(வதை தொடரும்...)



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை

இந்தச் சட்டவிரோதத் துப்பாக்கிகளுக்கு இரும்பில் தோட்டா செய்து கொடுக்கும் ஆட்கள்தான் ஈல் ஸ்கின்னர்.

1855ஆம் ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் மான்செஸ்டர் நகரில் இருந்த ஈல் ஸ்கின்னர் ஒருவரை பெரிய மனிதர் ஒருவர் வந்து சந்தித்தார்.

"துப்பாக்கித் தோட்டா வேண்டும். எவ்வளவு தோட்டாக்கள் உங்களிடம் இருக்கின்றன"

"உங்களுக்கு ஒரு வருடத்துக்குத் தேவையான சப்ளை என்னிடம் இருக்கிறது. ஐம்பது தோட்டாக்கள் போதுமா"

"இல்லை. அதைவிட அதிகமாக"

"அதைவிட அதிகமாகவா. எழுபது. எண்பது?"

"ஐயாயிரம்"

"என்ன" திகைத்துப் போனார்.

"ஐயாயிரம் தோட்டாக்கள் தேவை. அதுவும் ஒரு மாதத்தில் தரவேண்டும். பணம் பிரச்சினையில்லை"

"பொறுங்கள். பொறுங்கள். 6 தோட்டாக்கள் ஒரு அவுன்ஸ். ஐயாயிரம் தோட்டாக்கள்..."

"உங்களுடைய கணக்கை நீங்கள் போட்டுப் பாருங்கள். தரமுடியுமா அல்லது நான் வேறு ஆளைப் பார்க்கவா. மான்செஸ்டரில் ஆயிரம் ஆட்கள் இருக்கிறார்கள்"

"இல்லை. நான் தரமாட்டேன் என்று சொல்லவில்லை. ஐயாயிரம் தோட்டாக்கள் செய்ய அதிக நாள் எடுக்கும். விலையும் அதிகம். ஐம்பது பவுண்ட்ஸ் செலவாகும்."

"அறுபது பவுண்ட்ஸ் வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு மாதத்தில் தரமுடியுமா"

"அறுபது பவுண்ட்ஸுக்கு துப்பாக்கித் தோட்டா வேண்டுமா?" அவ்வளவு பணம் கொடுத்துத் துப்பாக்கித் தோட்டாக்கள் வாங்கிய ஒருவரை அந்த ஈல் ஸ்கின்னர் தனது வாழ்நாளில் கண்டதில்லை.

"இந்தாருங்கள். அட்வான்ஸ் பத்து பவுண்ட்ஸ். ஒரு மாதத்தில் தயாராக வேண்டும்"

"தயாராகிவிடும். எங்கே கொண்டு வந்து கொடுக்கவேண்டும்"

"நானே வந்து பெற்றுக் கொள்கிறேன்" சொல்லிவிட்டு அந்த நபர் வெளியேறி விட்டார்.

அடுத்த சில தினங்களில் அதே பெரிய மனிதர் பெர்மிங்ஹாம். லிவர்பூல். லண்டன் ஆகிய மூன்று நகரங்களில் வெவ்வேறு ஆட்களிடம் இதேபோல 5000 துப்பாக்கித் தோட்டாக்களை ஓர்டர் செய்தார்.

இவ்வளவு அதிகமான அளவில் துப்பாக்கித் தோட்டாக்கள் அவருக்கு எதற்கு என்பது யாருக்கும் புரியவில்லை. ஓர்டர் பண்ணிய நபர் யார் என்றும் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை... உங்களைத் தவிர!

ஆம். உங்களுக்குத் தெரிந்த ஆள் அவர்... எட்வேர்ட்!

அந்த நாட்களில் லண்டனில் காலைப் பத்திரிகைகள் என்று பார்த்தால். 6 காலைச் செய்தித்தாள்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. ஜனவரி மாதத்தில் எல்லா பத்திரிகைகளிலும் புலி ஒன்றைப் பற்றிய பரபரப்பான செய்தி வெளியாகிக் கொண்டிருந்தது.

இந்தியாவின் வடபகுதியில் காட்டுக்குள் இருக்கும் புலி ஒன்று பற்றிய செய்தி? அது. சுமார் 40 பேரை அந்தப் புலி கொன்று தின்றுவிட்டது என்ற செய்தி லண்டனில் பரபரப்பாகப் பேசப்பட்டது... காரணம். லண்டனில் புலிகளைப் பார்ப்பது அபூர்வம். பெரிய புலிகள் இருக்கும் காடுகளும் பிரிட்டனில் இல்லை.

ஈஸ்ட் இந்தியா கம்பனியைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் வியாபார விஷயமாக இந்தியா சென்று திரும்பியபோது தன்னுடன் புலிச்சிலை ஒன்றை எடுத்து வந்திருந்தார். அந்தச் சிலையைப் பார்ப்பதற்கே பெரும் கூட்டம் கூடியது.

(சிலை இப்போதும் பிரிட்டனில். விக்டோரியா அல்பர்ட் மியூசியத்தில் இருக்கிறது)

இப்படி புலி என்றால் பிரிட்டிஷ்காரர்கள் த்ரில் அடையும் நாட்களில் ஒருநாள். பெப்ரவரி 17ஆம் திகதி 1855ல் லண்டன் பிரிட்ஜ் ரயில்வே ஸ்டேஷனுக்கு வித்தியாசமான விருந்தாளி ஒருவர் வந்து சேர்ந்தார்.

ஒரு புலி!

கூட்டில் அடைக்கப்பட்ட புலி. கூட்டுக்குள் உறுமியபடி இருந்தது. ட்ரெயினில் லண்டன் பிரிட்ஜ் ஸ்டேஷனில் இருந்து லண்டன... ஃபோக்ஸ்டோன் ட்ரெயினில் எடுத்துச்செல்வதற்காக புலி கொண்டுவரப்பட்டிருந்தது.

புலியும் புலிக்கூண்டும் ஸ்டேஷனுக்குள் வந்தபோது பயணிகள் அன்றைய தினத்தில் இரண்டாவது முறையாக கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தார்கள்.



(கொள்ளை தொடரும்...)




எந்தவிதமான முன்னேற்பாடுகளும் கிடையாது. திடீரென்று அடிக்க ஆரம்பித்தார்கள். மும்முனைத் தாக்குதல்கள். இங்கே சினாய். அங்கே கோலன் குன்றுகள். மேற்கே வெஸ்ட் பேங்க். கிழக்கே காஸா என்று முந்தைய காலத்தில் இழந்த பகுதிகள் அத்தனையையும் அந்த ஆறு நாள் யுத்தத்தில் அள்ளிக் கொண்டுவிட்டது இஸ்ரேல். என்ன நடக்கிறது என்று சுதாகரித்துக்கொள்ளும் முன்னதாகவே யுத்தம் முடிந்துவிட்டது. இஸ்ரேல் என்பது எத்தனை அபாயகரமான தேசம் என்பது வெளிச்சமானது.



இஸ்ரேல் இந்த யுத்தத்தைத் தொடங்கியதற்கான காரணங்கள் மிகவும் நுணுக்கமானவை. 1956ஆம் ஆண்டு நடைபெற்ற சூயஸ் யுத்தத்தின்போது இஸ்ரேல் தன்வசப்படுத்திய சினாய் பகுதியை அத்தேசம் மீண்டும் எகிப்துக்கே விட்டுத் தரவேண்டி வந்ததன் விரிவாக்கப்பட்ட தொடர்ச்சி என்று இதனைக் கொள்ளலாம்.

அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனின் அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாகத்தான் சினாயை மீண்டும் எகிப்துவசம் அளித்தது இஸ்ரேல். என்னதான் இராணுவரீதியில் அந்த யுத்தத்தில் எகிப்து தோல்வியடைந்து இருந்தபோதிலும், இஸ்ரேல் அந்தப் பகுதியைத் திருப்பிக் கொடுத்ததை உலகம் முற்றிலும் வேறுவிதமாகவே பார்த்தது. அதாவது, நாசரின் இராஜதந்திர வெற்றி எது என்பதாக ஒரு பிரசாரம் மிகத் தீவிரமாக நடந்தது. இது இஸ்ரேலுக்குப் பெரிய தன்மானப் பிரச்சினையாக இருந்தது. அமெரிக்க நிர்ப்பந்தம் இல்லாவிட்டால் நிச்சயமாக சினாயை விட்டுக் கொடுத்திருக்க மாட்டோம் என்று எங்காவது குன்றின் மீது ஏறிநின்று உரக்கக் கத்தலாம் போலிருந்தது அவர்களுக்கு.

ஆனால், அமெரிக்காவை அவர்களால் பகைத்துக்கொள்ள முடியாது. அதற்கு அரசியலைத்தாண்டிய பொருளாதாரக் காரணங்களும் நிறைய இருந்தன. ஆகவே, வாகான ஒரு சந்தர்ப்பத்துக்காக இஸ்ரேல் காத்திருந்தது.

மறுபுறம், சூயஸ் யுத்தத்தைத் தொடர்ந்து எகிப்து, சிரியா, ஜோர்டன் ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஒரு மாதிரியான நேசம் வளர ஆரம்பித்திருந்தது. இராணுவம் முதல் வர்த்தகம்வரை பல்வேறு விதங்களில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிகள் செய்துகொண்டும் ஒத்துழைத்துக் கொண்டும் நிஜமான சகோதரத்துவம் பேண ஆரம்பித்திருந்தார்கள்.

இஸ்ரேலுக்கு இது பெரிய ஆபத்தாகப் பட்டது. ஏனெனில், எகிப்து, சிரியா, ஜோர்டன் மூன்றுமே இஸ்ரேலின் மூன்று எல்லைப்புற தேசங்கள். மூன்றும் அரபு தேசங்களும்கூட. இந்த மூவர் கூட்டணியை வளரவிட்டால் எந்த சமயத்திலும் தனக்குப் பிரச்சினை வரக்கூடும் என்று இஸ்ரேல் பயந்தது. தோதாக, இந்த மூன்று தேசங்களுமே சூயஸ் யுத்தத்தைத் தொடர்ந்து சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்ளத் தொடங்கியிருந்தன. ஜோர்டனுக்கு வேறு பல மேற்கத்திய நாடுகளுடனும் தனியே அப்போது நல்லுறவும் இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தங்களும் இருந்தன.

ஏற்கெனவே எந்த அரபுதேசமும் இஸ்ரேலுக்கு எந்தவகையிலான ஒத்துழைப்பையும் தருவதில்லை என்று முடிவு செய்திருந்த நிலையில், இந்த மூன்று தேசங்களின் நேசக்கூட்டணி இஸ்ரேலுக்கு அச்சம் தந்தது இயல்பான விஷயமே.

தவிரவும் சோவியத் யூனியனின் குறித்த நியாயமான பல அச்சங்களும் இஸ்ரேலுக்கு இருந்தன. சூயஸ் யுத்தத்தை உடனடியாக நிறுத்தாவிட்டால் பிரிட்டனின் நாணய மதிப்பைக் குறைந்துவிடுவதாக அமெரிக்கா மிரட்டியது போலவே, சோவியத் யூனியனும் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தின்மீது அணு ஆயுத யுத்தம் தொடங்குவேன் என்று மிரட்டியது.

இதுபோன்ற மிரட்டல்களால் தான் பிரிட்டனும் பிரான்ஸும் சூயஸ் யுத்தத்தைக் கைவிட்டன. இதே காரணத்தால்தான் இஸ்ரேலும் தன் நோக்கம் முழுவதும் நிறைவேறுவதற்கு முன்னதாகவே யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டிவந்தது. அந்தக் கோபம் அடிமனத்தில் இருந்ததால் தான் பதினொரு வருடங்கள் காத்திருந்து 67 இல் அடிக்க ஆரம்பித்தது.

இவற்றையெல்லாம் தாண்டி இன்னொரு முக்கிய காரணமும் இந்த யுத்தத்துக்கு உண்டு.

சிரியாவிலிருந்து இஸ்ரேல் வழியாகப் போய் கலிலீ கடலில் கலந்துகொண்டிருந்த டான் மற்றும் பனியாஸ் நதி நீரைத் திசை திருப்பி மேற்கே ஓடவிட்டு ஜோர்டன் நதியில் கலக்கும்படியாக மாற்றியமைக்க சிரியா ஒரு திட்டம்போட்டது. இது அப்பட்டமாக, வயிற்றில் அடிக்கும் காரியம்தான் சந்தேகமே இல்லை. இஸ்ரேலுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு வரவேண்டும் என்கிற பரந்த நோக்கத்துடன் தீட்டப்பட்ட திட்டம்தான். கோடிக்கணக்கில் செலவழித்தாவது இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் சிரியா மிகுந்த ஆர்வம் செலுத்தியதைக் கண்ட இஸ்ரேல், தன் கோபத்தைக் காட்ட ஒரு வழி தேடிக் கொண்டிருந்தது அப்போது.

அந்தக் கோபத்தை மேலும் அதிகரிக்கும் விதமாக 1966ஆம் ஆண்டு எகிப்தும் சிரியாவும் ஒரு இராணுவ ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இருதேசங்களில் எந்த தேசத்தை யார் தாக்கினாலும் அடுத்தவர் உடனே உதவிக்கு ஓடி வரவேண்டும் என்பதே அந்த ஒப்பந்தம்.

இதற்குமேல் ஸ்ரேலால் பொறுமை காக்க முடியவில்லை. 1967, ஏப்ரல் 7ஆம் திகதி சிரியாவின் ஆளுகைக்கு உட்பட்ட கோலன் குன்றுப் பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் வழக்கமான எல்லை தாண்டும் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார்கள். இருபக்கங்களிலும் மெல்லிய துப்பாக்கிச் சூடுகளுடன் வழக்கமாக முடிந்துவிடும் வைபவம்தான் அது. அப்படித்தான் சிரியா நினைத்தது.

(தொடரும்...)




உண்மையில் இரு உள்ளத்திலும் வெவ்வேறான எண்ணம்தான். ஆனால், விடுதலையின் இதயத்தில் காதலிருந்தாலும் புஸ்பாவின் இதயம் அதை நினைக்கவில்லை!

அதன்பின் ஒரு கிழமைக்கு மேலாக குறுந்தகவல் தொடர்பாடலில் தோய்ந்தார்கள். இறுதியாக வந்த குறுந்தகவல் இப்படி கூறியது.

"புஸ்பா எனக்கு எல்லாமே தெரியும். எங்கட அம்மாட விருப்பத்தோட தான் உங்களிடம் என் காதலை கூறினேன். இன்று ஏற்றுக்கொண்டால் நாளையே தாலி கட்டுவேன்" அந்த குறுந்தகவலை பல தடவை வாசித்த புஸ்பாவின் மனசில் ஒரு மாற்றம் வந்தது! அவன் காதலை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை பிறந்தது.

கைபேசியை கையில் எடுத்தவள் படபடவென்று இப்படியொரு குறுந்தகவலை உருவாக்கினாள். "நான் உங்கள் காதலை ஏற்றுக் கொள்கிறேன் அண்ணா. ஆனால் உங்க அம்மாவுக்கு முன்னாலே தான் அதற்குரிய நிரந்தர நியமனம் கிடைக்கும்" என்று தொடர்ந்து செல்லும் குறுந்தகவலை நோட்டமிட்டுக் கொண்டுபோன விடுதலையும் அவளின் கட்டளைக்கு தலைவணங்கி ஆமோதித்தான்.

அன்று முதல் அவர்களுக்குள் காதல் பரிமாறாமல் வாழ்க்கையை பரிமாறினார்கள்! அதாவது தாங்கள் சந்தித்த அனுபவங்கள். அதில் முக்கிய இடத்தை புஸ்பாவின் படலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்து.

அவளுடைய வாழ்க்கை வரலாறுகளை கவிதைகளாகவும் தொடராகவும் சிறுகதையாகவும் விடுதலை எழுத ஆரம்பித்தான். நாட்கள் ஒரு மாதத்தை விழுங்கியபின் ஒரு வெள்ளிக்கிழமை. ஐந்து நாள் விடுமுறையில் சித்திவீட்டே செல்லாமல் அத்தை தமிழரசியின் வீடுநோக்கி மல்லாகத்திற்கு சென்றாள் புஸ்பா!

சித்தியைவிட அத்தை அன்பை வாரி வழங்கினாள். அந்த அன்புதான் அங்கே அழைத்திருக்கவேண்டும்.

தமிழரசியிடம் தன் இதயத்தை மொழிபெயர்த்தாள் புஸ்பா!

அன்றுவரை நடந்தவற்றை என்றும் இல்லாதவாறு புல்லாங்குழல் இசைத்தாள். மௌனமாக மலர்ந்த முகத்துடன் குதூகலிப்பில் கலந்து போனாள் தமிழரசியும்.



புஸ்பாவின் உணர்வுகளையும் ஆசைகளையும் மதித்த தமிழரசி மறுநாள் விடுதலையின் இல்லம்நோக்கி செல்ல அனுமதித்தாள். கூடவே அவளும் தயாரானாள்.

மறுநாள் காலையாகும்வரை புஸ்பாவை ஏதோ ஒரு உணர்வு ஆட்கொண்டது!

பொழுது பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இருவருக்காகவும் விடிந்ததுபோல் மலர்ந்தது. புஸ்பாவையும் விடுதலையையும் அப்படி இராப்பொழுது வதைக்க, இரவை அவர்கள் வதைத்தார்கள்.

பழவகைகள் வாங்கிக்கொண்டு புஸ்பாவும் தமிழரசியும் காலை பத்து மணியிருக்கும்... விடுதலையின் வீட்டைச் சென்றடையும்போது, அவர்களின் வருகைக்காக காத்திருந்த பொன்னம்மாவும் விடுதலையும் பேரூந்து தரிப்பிடம் சென்று அழைத்துவந்தனர்.

அவர்கள் இருவருக்கும் இவர்கள் இருவராலும் அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

அன்றைய உபசரிப்புகளால் உள்ளம் குளிர்ந்த புஸ்பா கேட்கப்போன எதையும் கேட்காமலே இருந்துவிட்டாள். அந்தளவிற்கு நம்பிக்கையும் இனம்புரியாத பாசமும் விடுதலையின் குடும்பம்மீது உதயமானது.

அன்று தொலைபேசியில் உரையாடிய எதையும் இருவரும் பேசவில்லை! புஸ்பா மௌனமாகவே மலர்ந்த முகத்துடன் இருந்தாள்! புஸ்பாவின் மௌனத்தை ரசித்த விடுதலையின் மனதில் இன்னுமின்னும் காதல் ஊறியது.

பொன்னம்மா கேட்கும் கேள்விகளுக்கு தமிழரசியே பதிலளித்தாள். ஆனால் இடை இடையேபுஸ்பா தலையசைத்து விடுதலை மணம்செய்ய தயார் என்பதை மௌன மொழியால் உணர்த்தினாள்!

(ஊழல் தொடரும்...)





வே.அர்ச்சுணன்

**இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை அல்லது தோல்வியின் வாசலில்நின்று கொண்டிருந்தவேளையில் இவர்களை மீண்டும் பேச்சுமேசைக்கு அழைப்பது என்பது ஒரு வீணான வேலை எனவும் இதில் நேரத்தை செலவிடுகின்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் ஜப்பானின் சிறப்பு சமாதான தூதுவர் யசூசி அகாசி போன்றோர் தங்களது நாடுகளில் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் கவனத்தை செலுத்தினால் பிரயோசனமாக இருக்கும் என்று பல ஆய்வாளர்களும் தமது ஆதங்கத்தை வெளியிடத் தவறவில்லை.**

# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 19

பேச்சுவார்த்தை மேசையில் புலிகளும் இலங்கை அரசாங்கத் தரப்பும் முரண்டுபிடித்தமை ஒரு புதிய விடயமல்ல. ஏற்கனவே இருதரப்பும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே பல இராஜதந்திரிகள் இலங்கை அரசாங்கத் தரப்பும் புலிகளும் பேச்சுமேசையில் சந்தித்தாலும் இருதரப்புமே ஒரு முடிவிற்கு ஒருபோதும் வரமாட்டார்கள் மற்றும் இலங்கை அரசாங்கமும் தமது இறுக்கமான பிடிகளில் இருந்து தளரப்போவதில்லை என்றும், அதேபோன்று புலிகள் கேட்கின்ற தீர்வை வழங்கப்போவதில்லை என்றும், அதேபோன்று புலிகளும் தமிழ் ஈழம் மாநில சுயாட்சி உள்ளிட்ட தீர்வுகளை விட மாற்று யோசனைகள் எதனையும் ஏற்கப்போவதில்லை என்றும், தமது ஆயுதக் கட்டமைப்பை கலைக்க மாட்டார்கள் என்றும், ஆய்வாளர்கள் உறுதிபட தமது ஆரூடங்களை பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னரே தெரிவித்து இருந்தனர்.

அவ்வாறு இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை அல்லது தோல்வியின் வாசலில்நின்று கொண்டிருந்தவேளையில் இவர்களை மீண்டும் பேச்சுமேசைக்கு அழைப்பது என்பது ஒரு வீணான வேலை எனவும் இதில் நேரத்தை செலவிடுகின்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் ஜப்பானின் சிறப்பு சமாதான தூதுவர் யசூசி அகாசி போன்றோர் தங்களது நாடுகளில் அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் கவனத்தை செலுத்தினால் பிரயோசனமாக இருக்கும் என்று பல ஆய்வாளர்களும் தமது ஆதங்கத்தை வெளியிடத் தவறவில்லை.

அதாவது புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத் தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாகப் புலிகள் வலியுறுத்திக் கொண்டிருந்த இடைக்கால நிர்வாக சபை என்பது இலங்கை அரசாங்கத்தால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டது. அதாவது பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் இருதரப்புக்கும் இடையில் நல்லிணக்கம். விட்டுக்கொடுப்புக்கள் மற்றும் மக்களின் அன்றாட தேவைகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் என்பனவற்றை இனங்கண்டு அவை தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டை கண்டு அதில் ஏற்படும் முன்னேற்றங்களை தொடர்ந்து. இடைக்கால நிர்வாக சபை மற்றும் இறுதித்தீர்வுகள் தொடர்பில் தீர்மானிக்கலாம் என இலங்கை அரசாங்கத் தரப்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்ட பொழுது இவ் யோசனைகளை முற்றுமுழுதாக நிராகரித்தனர் புலிகள்.

"தமது கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்கத் தவறினால் தாங்கள் பேச்சுவார்த்தையில் இனிமேல் கலந்து கொள்ளமாட்டோம்" எனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இதனால் குழப்பமடைந்த நோர்வே மற்றும் ஜப்பானிய சிறப்புத் தூதுவர்கள் முரண்டுபிடித்த இருதரப்புக்களையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு செல்வதற்காக கடுமையான முயற்சியில் ஈடுபட்டனர். இந்த முயற்சியின் முன்நகர்வுகளாக நோர்வே மற்றும் ஜப்பானிய தூதுவர்கள் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

அதாவது சிறியளவிலான விட்டுக்கொடுப்புக்களையாவது நீங்கள் செய்வீர்களாக இருந்தால் நாங்கள் புலிகளையும் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கவேண்டாம். பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள் என வலியுறுத்த முடியும்" என்று இவர்களால் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கூறப்பட்டபோது இதற்குப் பதிலளித்த இலங்கை ஜனாதிபதி, இலங்கை அரசாங்கம் ஒருபோதுமே பேச்சுவார்த்தைகளை குழப்பாது என்றும், அரசாங்கம் நிபந்தனைகளை முன்வைக்கவில்லை எனவும் புலிகளே நிபந்தனைகளை முன்வைக்கிறார்கள்.

எனவே, "அவர்களை ஒரு வழிக்குக் கொண்டு வந்து பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவீர்களாயின் நாங்களும் பேச்சுவார்த்தை மேசையில் அமரத் தயாரென" இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பால் கூறப்பட்டது. ஆனால் புலிகளை சந்திப்பதற்காக வன்னிக்குவந்த சமாதான குழுவினரிடம் புலிகள் தமது தரப்பு நிலைப்பாடுகளை வலியுறுத்தியதுடன், "காலம் காலமாக ஆட்சிப்பீடம் ஏறுகின்ற இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உருப்படியான தீர்வுகள் எதனையுமே முன்வைப்பதில்லை எனவும் திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் தமிழர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள் எனவும் சிங்களத் தேசத்தில் ஆட்சிப்பீடம் ஏறுகின்ற எந்த ஒரு சிங்களத் தலைவரும் தமிழர்களுடைய தேசியப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். தமிழர்கள் தங்களைத் தாங்களே தமிழ்ப் பிரதேசத்தில் ஆட்சி செய்வதற்குரிய ஆட்சிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு சிங்கள அரசுகள் தொடர்ச்சியாக தடையாக இருந்து வருகின்றன.



இவ்வாறு தற்போதைய இலங்கை அரசும் பேரினவாத சிந்தனைகளுடன் செயற்படுகின்றதே ஒழிய தமிழர்களுடைய தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்வரவில்லை" என்று சாரப்பட பெரியளவிலான நீண்ட அறிக்கை ஒன்றை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கையொப்பத்துடன் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வனால் இக்குழுவிடம் கையளிக்கப்பட்டதுடன், "நாங்கள் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக பேசுவதற்கு நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தை மேசைக்கு வருவோம். இல்லையென்றால் கலந்து கொள்ளப்போவதில்லை" என்று புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் தெட்டத்தெளிவாக கூறியபோது,

இதற்குப் பதிலளித்த இராஜதந்திரிகள், "நீங்கள் நினைப்பது போன்று தற்போதைய உலகம் ஒழுங்கு இல்லை எனவும் நீங்கள் இருதரப்பும் முரண்டுபிடிக்காமல். அனுசரித்துப் போவதே சிறப்பானது எனவும், இல்லையென்றால் இருதரப்புமே பெரிய அபாயங்களை சந்திக்க வேண்டிவரும் என்றும் அழிவுகளை சந்தித்துவரும் யுத்தங்களை தடுக்க முடியாத அளவிற்கு எல்லைகளை மீறிச்சென்றால் அந்த யுத்தத்தை நாங்கள் தணிப்பதோ, தடுப்பதோ முடியாத காரியம் ஆகிவிடும்.

எனவே, இந்த விடயத்தில் நீங்கள் நிதானமாக சிந்தித்து முடிவெடுப்பதே பொருத்தமானது. இதைவிட இலங்கை அரசாங்கம் பல நாடுகளுடன் யுத்தம் ஆரம்பித்தால் உதவிகளைப் பெற்றே போரை நடத்தும். இதன்போது தனியாக உங்களால் இலங்கை அரசாங்கத்தை வரும் நாட்களில் எதிர்ப்பது கடினமாக இருக்கும். எனவே இந்த விடயத்தில் நீங்கள் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்து பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

உங்களது நிபந்தனைகளை தளர்த்தவேண்டும். முதலில் இலங்கை அரசாங்கம் சொல்வதைக் கேட்டு நடவுங்கள். நீங்கள் இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசையிலே சந்திக்கின்ற பொழுது நாங்கள் உங்கள் இரு தரப்பையும் ஒரு வழிக்குக் கொண்டு வந்து நீங்கள் சொல்லுகின்ற விடயங்களை அரசாங்கத் தரப்பினரிடம் நாங்களும் வலியுறுத்த முடியும்" என்று ஆலோசனை கூறப்பட்டபோது இதற்கு சிரித்தவாறே பதிலளித்த புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன், "எங்களுக்கு சொல்வதைப் போன்று இலங்கை அரசாங்கத்திற்கு சொல்லி அரசாங்கத் தரப்பை ஒருவழிக்குக் கொண்டு வாருங்கள்.

அப்போது நீங்கள் சொல்வதையும் கேட்டு அனுசரித்துப்போவதாக இருக்கும் எமது தலைவர் கொள்கை விடயங்களில் உறுதியாக இருப்பவர் பேச்சுவார்த்தை தொடர்பான சமரசங்களுக்கோ அல்லது விட்டுக்கொடுப்புகளுக்கோ தலைவர் இனிமேல் செல்லவேண்டாம் என்று உறுதியாக கூறிவிட்டார்" என நோர்வே குழுவிடம் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் திட்டவட்டமாக கூறியபோது நோர்வே குழுவினர் மற்றும் சமாதான ஏற்பாட்டாளர்கள் என்ன செய்தனர்?, இவர்களின் நகர்வுகள் முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை எவ்வாறு சென்றது? எனத் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

■ தொகுப்பு: வேணு கிருஸ்ணா

ஐரோப்பிய ஒன்றியம் மாதிரி, மோடி தலைமையில் ஒரு தெற்காசிய ஒன்றியம் உருவாகுமா? ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. நூறு வருடங்களுக்கு முன்னர், "ஐரோப்பிய ஒன்றியம் என்ற ஒரு பொது அரசு" உருவாகும் என்று சொன்னால், யாரும் நம்பியிருக்கமாட்டார்கள். அப்படிச் சொன்னவருக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று நினைப்பார்கள். ஏனென்றால், ஐரோப்பிய நாடுகளுக்கு இடையில், அந்தளவு தூரம் பகைமை நிலவியது.

மொழியால், கலாசாரத்தால் மாறுபட்ட ஐரோப்பிய இனங்கள், சதா சர்வகாலமும், ஒருவருடன் ஒருவர் சண்டை போடுவதிலேயே காலம் கழித்துவந்தன. ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையிலான வெறுப் புணர்வு, இன்றுள்ள இந்திய, பாகிஸ்தான் பிரச்சினையைவிட மிகத் தீவிரமாக இருந்தது. சிங்களவர்களும், தமிழர்களும் மோதிக்கொண்டதைவிட மிகவும் மோசமாக, ஐரோப்பிய இனங்கள் தமக்குள் மோதிக்கொண்டன. ஈழப்போரில் இறந்ததைவிட, பல மடங்கு அதிகமான ஐரோப்பிய மக்கள் இனப் பகையால் மாண்டனர். இன்று அவை எல்லாம் பழங்கதைகள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதாரணத்தை, இன்று பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பின்பற்ற விரும்புகின்றன. ஆபிரிக்க ஒன்றியம், சார்க் நாடுகள் போன்ற அமைப்புகள், அந்த நோக்கத்திற்காக இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அண்மையில் இந்தியப் பிரதமராக தெரிந்தெடுக்கப்பட்ட நரேந்திர மோடி, சார்க் நாடுகளின் தலைவர்களை தனது பதவிப் பிரமாணத்திற்கு அழைத்ததின் பின்னணிக் காரணமும் அதுவாக இருக்கலாம். சார்க் நாடுகள், ஐரோப்பிய நாடுகள் மாதிரி, தமக்கு இடையிலான பகையை மறந்து, பொதுவான வர்த்தக அமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டம் ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகவே, உள்நாட்டு தீவிரவாதத்தை ஒழிப்பது சார்க் நாடுகளின் தலையாய கடமையாக இருந்துவந்தது. அதனால்தான், இலங்கையில் புலிகளை அழிக்கும் போரில், இந்தியாவும், பாகிஸ்தானும் கை கோர்த்துக்கொண்டு, இலங்கை அரசுக்கு உதவின. உண்மையில், ஈழப்போரின் முடிவானது, தெற்காசிய நாடுகளில் முன்னெப்போதும் நடந்திராத முன்னுதாரணமாக திகழ்ந்தது. அந்த உதாரணம், இனி வருங்காலத்தில், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பின்பற்றப்படலாம்.

"மன்மோகன் சிங்கின் காங்கிரஸ் அரசுதான் தமிழர்களை அழித்தது. மோடியின் பா.ஜ.க. அரசு அமைந்தால், தமிழர்களுக்கு சாதகமாக அமையும்." என்றெல்லாம் பரப்பப்படும் கதைகள், பூகோள அரசியல் குறித்த அறியாமையில் இருந்து எழுகின்றது. இந்திய அரசின் வெளிவிவகார கொள்கை, எந்தக் கட்சி ஆட்சிவந்தாலும் மாறப் போவதில்லை. மன்மோகன் சிங் தொடக்கி வைத்ததை, நரேந்திர மோடி முடித்து வைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

**அரசாங்கம் உள்நாட்டு நுகர்வோர்களை நம்பியிருக்க முடியாது. இந்தியாவின் உள்நாட்டு நுகர்வோர்களின் அதிசயப்படத்தக்க வளர்ச்சி என்பது ஒரு மிகைப் படுத்தல். நீண்டகாலமாகவே, இந்தியாவின் பொருளாதாரம், சீனாவுடையதைவிட நான்கு மடங்கு சிறியதாக இருந்து வருகின்றது. இந்தியாவின் பொருளாதாரம் பல பற்றாக் குறைகளின் மேலே கட்டியெழுப் பப்பட்டது. வணிக நிலுவையில் பற்றாக்குறை. அதிகரித்துச் செல்லும் கடன் சுமை. இதைவிட அரசாங்கத்தின் பற்றாக்குறை தனியானது.**



# இந்தியா தெற்காசியாவின் பெரியண்ணா?

ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகப் பெரிய பொருளாதார பலம் மிக்க நாடான ஜெர்மனிதான் ஆதிக்கம் செலுத்துகின்றது. அதேபோன்று, தெற்காசிய ஒன்றியம் உருவானால், அங்கே இந்தியாவின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும். இங்கே பாகிஸ்தானின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. பல நூறு வருடங்களாக, ஜெர்மனியுடன் யுத்தம் செய்துகொண்டிருந்த பிரான்ஸ், இறுதியில் இணங்கிப்போன மாதிரி, இந்தியாவும், பாகிஸ்தானும் ஒன்று சேருமா?


தெற்காசிய நாடுகள் ஒன்று சேர்வதற்கு அடிப்படையாக உள்ள பொதுவான குணாம்சம் என்ன இருக்கிறது? அந்தக் கேள்வி ஐரோப்பாவிலும் எழலாம். ஐரோப்பியர்கள், இனத்தால், மொழியால், கலாசாரத்தால் வேறுபட்டவர்கள் மட்டுமல்ல. பொதுவானதாக கருதப்படும் கிறிஸ்தவ மதம்கூட அவர்களை ஒன்றுசேர்க்காமல், பிரித்து வைத்திருந்தது. கத்தோலிக்க கிறிஸ்தவர்களும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் ஒருவரை ஒருவர் கண்டால் இரத்தம் குடிக்கும் அளவிற்கு வெறுப்புக் கொண்டிருந்தார்கள். கிரேக்க (ஓர்தொடக்ஸ்) கிறிஸ்தவ மரபை பின்பற்றுவோருடனும் அப்படித்தான்.

உண்மையில், இருபதாம் நூற்றாண்டில் பரவிய முதலாளித்துவ லிபரல் கலாசாரம் தான், அனைத்து ஐரோப்பிய நாடுகளையும் ஒன்று சேர்த்தது. 2ஆம் உலகப் போருக்குப் பிந்திய ஐரோப்பாவில், மத - இனப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. புதிய தலைமுறை ஐரோப்பியர்கள், வாழ்க்கைக்கு பொருளாதாரமே முக்கியம் என்று உணர ஆரம்பித்தனர்.

இதே மாதிரியான முதலாளித்துவ லிபரல் கலாசாரம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளிலும் மிக வேகமாக பரவிவருகின்றமையால் மோடி தலைமையில், ஒரு தெற்காசிய ஒன்றியம் உருவாகுமா? பல்லின, மத வேறுபாடுகளைக் கொண்ட மக்களை ஒன்று சேர்க்கும் வல்லமை முதலாளித்துவத்திற்கு உண்டு என்கிறார்களே? உண்மையா? ஆனால் மோடியால் இந்தியாவிற்குள் சாதிக்க முடிந்தால்தான் வெளிவிவகாரத்தை வெல்லமுடியும்.

## மோடியால் எதையும் சாதிக்க முடியாது

நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராக தெரிவானதற்கு, மேற்கத்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. அது ஏன் என்ற காரணத்தையும் பகிரங்கமாகக் கூறிவிடுகின்றன.



அதாவது, மேலைத்தேய மூலதனம் போடும் தாளத்திற்கு ஏற்றவாறு, மோடி ஆடுவார் என்று கணிப்பிடுகின்றன. நிதி மூலதன நிறுவனங்கள்கோரும் பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவார். 'இந்தியாவின் மார்க்கிரட் தாட்சர்' ஆக வருவார் என்றெல்லாம் புகழாரம் சூட்டுகின்றன.

மோடியால் எந்தளவுக்கு சாதிக்க முடியும் என்பது பற்றி, NRC Handelsblad பத்திரிகையில், புருசல்ஸ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் Jonathan Holslag மிகவும் ஆழமான ஆய்வொன்றை செய்துள்ளார். அவர் கூறுவதன்படி, மோடி பெரிய சாதனை எதையும் நிகழ்த்திக் காட்டப்போவதில்லை. பெரிதும் எதிர்பார்க்கப்படும், பொருளாதார சீர்திருத்தம் வெற்றியடையப் போவதில்லை. மறுபக்கம், இந்திய தேசியவாதிகளையும் அவர் திருப்திப்படுத்தப் போவதில்லை.

"இந்திய மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டால், இந்தியா மாற்ற மடையும்" என்று வெற்றிவிழாவில் மோடி கூறினார். அது ஒரு கனவு. காங்கிரஸ் கட்சி தோல்வி அடைந்திருக்கலாம். பாராளுமன்றத்தில், பா.ஜ.க. 51வீதம் ஆசனங்களை கைப்பற்றி இருக்கலாம்.

ஆனால், வெறும் 31வீதம் வாக்காளர்களின் ஓட்டுக்களைப் பெற்றுத்தான், பா.ஜ.க. பெரும்பான்மை ஆசனங்களை வென்றது என்பதை மறந்துவிடலாகாது. கிட்டத்தட்ட அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள், பிராந்திய மட்டத்திலான சிறிய கட்சிகளுக்கு ஓட்டுப்போட்டுள்ளனர். இதன்மூலம், இந்திய வாக்காளர்கள் மிகவும் ஆழமாக பிளவுபட்டிருக்கின்றமை தெளிவாகின்றது.

## மோடிக்கு முன்னால் உள்ள முக்கியமான சவால்: பொருளாதாரம்

அடுத்த பத்து வருடங்களில், இந்தியாவில் 15 மில்லியன் பேர், புதிதாக வேலை தேடி தொழிற் சந்தையில் நுழையப் போகிறார்கள். அவர்களுக்காக ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டி இருக்கும். இந்தியாவின் இரண்டு முக்கியமான பாரம்பரிய பொருளாதார ஆதாரங்கள் சரிவர இயங்குவதில்லை. அளவுக்கு மிஞ்சிய செயற்கை உரங்களின் பாவனை காரணமாக, விவசாய உற்பத்தி துறை பெரிதும் நலிவடைந்துள்ளது. நகரங்களுக்கு தேவையான மலிவு விலைப் பொருட்களை விநியோகித்துவந்த, ஒழுங்கமைக்கப்படாத சிறு வணிகம் தற்போது இல்லை.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்காக, உள்கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்தப்போவதாக மோடி அறிவித்துள்ளார். நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள், மின்சாரமயமாக்கல், தொழிற்சாலைகள் எல்லாம் உடனடித் தேவைகள். ஆனால், அதற்காக உள்ளூர் அதிகார பீடங்களுடன் மல்லுக்கட்ட வேண்டியிருக்கும். ஊழலை ஒழிக்க முடியாத அளவிற்கு, அவரது சொந்தக் கட்சியினரே ஊழலில் மாட்டிக்கொண்டு உள்ளனர். உலகளாவிய பொருளாதார வளர்ச்சி இன்னமும் மீளவில்லை.

அரசாங்கம் உள்நாட்டு நுகர்வோர்களை நம்பியிருக்க முடியாது. இந்தியாவின் உள்நாட்டு நுகர்வோர்களின் அதிசயப்படத்தக்க வளர்ச்சி என்பது ஒரு மிகைப்படுத்தல். நீண்டகாலமாகவே, இந்தியாவின் பொருளாதாரம், சீனாவுடையதைவிட நான்கு மடங்கு சிறியதாக இருந்துவருகின்றது. இந்தியாவின் பொருளாதாரம் பல பற்றாக்குறைகளின் மேலே கட்டியெழுப்பப்பட்டது. வணிக நிலுவையில் பற்றாக்குறை. அதிகரித்துச்செல்லும் கடன் சுமை. இதைவிட அரசாங்கத்தின் பற்றாக்குறை தனியானது.

மொத்த தேசிய உற்பத்தியில் 5 சதவீதத்தை, இந்திய அரசுமானியங்களுக்காக செலவு செய்கின்றது. அதன் உதவியால்தான், வறிய குடும்பங்களை தலைநிமிர வைக்கமுடிகின்றது. மோடி அதில் மாற்றம் கொண்டுவர விரும்புகிறார். ஆனால், வேறு மாற்றீடு எதுவும் இல்லாமல், மானியங்களை குறைப்பது ஒரு அரசியல் தற்கொலை செய்வதற்கு சமமானது. ஆனால், மானியங்களை தொடர்ந்தும் வைத்திருந்தால், மோடி வாக்குறுதி அளித்த கட்டுமானப் பணிகளை நிறைவேற்றமுடியாது.

இந்தியாவின் புதிய அரசியல் நட்சத்திரம், அந்த நாட்டை சூழவுள்ள சிக்கலான பாதுகாப்பு நிலவரங்களுக்கு வாரிசு உரிமைபெற்றுள்ளது. அவரது கட்சியினர் எதிர்பார்ப்பதுபோல, பாகிஸ்தானுக்கு எதிராக மிகவும் கடுமையாக நடந்துகொள்ள முடியாது. பங்களாதேஷ் விஷயத்திலும் அதுவே நடக்கும். சீனா மென்மேலும் சவால் விட்டுக் கொண்டிருக்கிறது. அத்தகைய கொந்தளிப்பான சூழ்நிலையில், வாக்குறுதி அளித்த பொருளாதார மாற்றம் எதுவும் நடைமுறைக்கு வராத நிலையில், அவரால் தேசியவாத உணர்வுகளை எதிர்த்து நிற்கமுடியுமா?

**பதில்:** "முடியாது, அது அவரால் முடியாது."

'தெற்காசிய ஒன்றியம்': மோடியின் எதிர்காலக் கனவு மட்டுமே?





# கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்

அண்மைக் காலங்களாக வீதி விபத்துக்கள் பெருமளவிலே அதிகரித்துச்செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது! எங்கும் விபத்து எதிலும் விபத்து விபத்து என்று தினசரி நடைபெற்றவண்ணமே உள்ளன. இந்த விபத்துக்களை வைத்துப் பார்க்கும்போது மனித குலத்தின் தினசரி மரணம் வாகனங்களினாலும், வாகனங்களை இயக்குகின்ற மனிதர்களினாலுமே உண்டாகின்றது! இதை உரியமுறையில் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான பணிகள் நடைபெறுவதாகவே தெரியவில்லை.

தினசரிப் பத்திரிகைகளை திறந்தால் விபத்து, மரணங்கள் இல்லாத நாட்களே இல்லை என்று சொல்லாம். அந்தளவுக்கு விபத்துக்கள் மரணங்கள், சொத்தழிவுகள் காயங்களை உண்டு பண்ணிவருகின்றது!

குறிப்பாக, மதுபோதையினால் பெருமளவு வீதி விபத்துக்கள் நடைபெற்றாலும், தொலைபேசிப் பாவனைமூலம் உண்டாகும் வீதி விபத்துக்களே அதிகம் என்ற தகவல்கள் ஒரு கணம் எல்லோரையும் திக்குமுக்காட வைக்கின்றது! தொலைபேசிப் பாவனைமூலம் எவ்வளவோ நன்மைகள் இருந்தபோதிலும், அதே அளவுக்கு தீமைகளும் இல்லாமல் இல்லை. ஆனாலும் தொலைபேசிமூலம் பேசிக்கொண்டு வாகனங்களைச் செலுத்துவோர் தொகையும் நாளுக்கு நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே உள்ளன. தொலைபேசிமூலம் புலன்களின் கவனம் போய்க் கொண்டிருக்கும்போது வாகனங்கள் சரியாகச் செலுத்தமுடியாது என்பது உண்மையே!

இது ஒருபுறமிருக்க, தற்போது மோட்டார் சைக்கிள் ஓடுவோர் செய்யும் கூத்தடிப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. அதாவது மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திக்கொண்டு கெல்மட்டுக்கு இடையிலே அலைபேசியினை காதுகளுக்கு இடையிலே செருகி வைத்துக்கொண்டு பேசிக்கொண்டே செலுத்துவதனால் எவ்வளவோ விபத்துக்கள் உண்டாகிவருகின்றது. இது இப்போது ஒரு பசனாகிவிட்டது! ஆண்களும், ஏன் பெண்களும்கூட இவ்வாறுதான் செய்கின்றார்கள். செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளில் பெருமளவானோர் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திவருகின்றனர். மது என்பது ஒருவரை மயக்கக் கூடியது! அப்படியான மதுவின் மயக்கத்துடன் வாகனங்களை ஓட்டும்போது, சாரதிகளுக்கு வீதியிலே கவனம் இருக்க வாய்ப்பு இல்லாது போகும். இதன்மூலம் விபத்துக்கள் மிக மிக இலகுவாக நடைபெறுகின்றது. நடைபெற்றும் வருகின்றது. வீதி விபத்துக்கள்மூலம் உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கு சாரதிகளின் மது மயக்கமும் காரணமாய் இருக்கின்றது. மதுவின் தாக்கம் அதிகரிக்க அதிகரிக்க சாரதி வாகனங்களை வேகமாக, நிதானமின்றி செலுத்தலாம். அந்த நிதானமின்மையே வீதி விபத்தாக அமைந்துவிடுகின்றது.

தமிழர்களின் பண்டிகை காலங்கள் வந்தால்போதும், பண்டிகை நாளன்று, அதற்கு முதல் நாள், மறுநாளன்று பாரிய அளவிலே வீதி விபத்துக்கள் உண்டாகிவருகின்றது. இதற்கு காரணங்களை தேடினால் பண்டிகைக்காக வென்றே குடித்துக் கும்மாளம் அடிக்கும் சாரதிகள், மது மயக்கத்துடன் வாகனங்களை ஓட்டி, வீதிகளில் பயணிக்கும் பொதுமக்களைப் பற்றி சிறிதளவேனும் சிந்திக்காமல் அவர்களை இடித்துத் தள்ளி விபத்துக்களை உண்டாக்கிவருகின்றனர்.

வீதி விபத்துக்களைப் பற்றி சிந்திக்கும் போது தற்போது குடாநாடு உள்ளிட்ட வடபகுதிகளில் பெருமளவு விபத்துக்கள் டிப்பர் வாகனங்கள்மூலமே ஏற்பட்டு வருகின்றது. ஏ9 வீதி புனரமைப்பு, வவுனியாவின் ஓமந்தைப் பகுதிதொடங்கி இன்றுவரை காங்கேசன்துறை வரை அண்மித்துள்ள புகையிரதப் பாதைப் புனரமைப்பு பணி மற்றும் பெரிய வீதிகள் புனரமைப்பு என்று புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் பாரிய அளவிலான டிப்பர் வாகனங்களின் தேவைகள் பெருமளவிலே அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த டிப்பர் வாகனங்கள் மிகப் பெரியவை, இரும்பு வாகனம், இந்த வகையான வாகனங்கள் வீதியிலே பயணித்தால், இத்தகைய

**அளவெட்டி, ப.உதயகுமார்.**

வாகனங்களின் பின்னால் வரும் வாகனங்களுக்கு முன்னால் வரும் வாகனங்கள் பற்றி தெரியவராது. இதன் பயனாக இத்தகைய டிப்பர் வாகனங்களை முந்திச்செல்ல, முற்படும்போதும் பக்கத்தினால் விலகிச் செல்ல முற்படும் போதும் விபத்துக்கள் எளிதாகவே நடைபெற்றுவிடும்.

இவ்வாறான டிப்பர் வாகனங்களைப் பெரும்பாலும் சகோதரமொழி பேசுபவர்களும், இந்தியாவின் சாரதிகளுமே செலுத்திவருகின்றனர். இவர்களுக்கு வடபகுதியின் வீதி விபரங்கள் உட்பட களநிலைமைகள் தெரிய வாய்ப்பில்லை. அத்துடன் கொழும்பின் பிரதேசங்கள், மற்றும் இந்தியாவின் பகுதிகளிலுள்ள மிகத் தரமான வீதிகளிலே ஓடி அனுபவப்பட்டவர்கள், இங்குள்ள குண்டும் குழியுமான வீதிகளிலே ஓடும்போது விபத்துக்கள் உண்டாகிவருகின்றது என்பதுடன் பார வாகனங்களை ஓட்டுகின்ற சாரதிகள் மதுப்பாவனையுடன் ஓட்டுவதும் தவறுகளுக்குக் காரணமாய் அமைந்துவிடுகின்றது.

இது ஒருபுறமிருக்க, வீதிகளின் விபரக்குறியீடுகள் பற்றிய அறிவு, தெளிவு என்பனவும் சாரதிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், வீதிகளில் போடப்பட்டுள்ள மஞ்சள் கடவையின் மகிமை பற்றி தெரியாதவர்கள் மஞ்சள் கோட்டின்மீது வாகனங்களை நிறுத்தி வைத்துச் செல்கின்றனர். இப்படியானவர்களுக்கு எவ்வாறு சாரதி அனுமதிப் பத்திரம் கிடைத்தது என்பதெல்லாம் மிகப்பெரும் கேள்வியாக உள்ளது.

தற்போது மூலை முடுக்கெல்லாம் புதிது புதிதாக வாகன சாரதி அனுமதி பெற்றுக்கொடுக்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுவருகின்றன. இந்த நிலையங்களின் தேவை என்பது பண முதலீட்டுக்குரிய வருமானம் தேடல் என்பதாகும். எனவே தகுதி, கல்வித் தகைமைகள் பற்றி எவருமே கேட்பதில்லை. மிகவும் இலகுவாக காரியங்களைச் சாதித்து அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். அனுமதிப்பத்திரம் உள்ளவர்களெல்லாம் சாரதிகள் என்று எண்ணிவிட முடியாத நிலையிலேயே உள்ளது காலம்.

வீதி விபத்துக்கள் பெருமளவிலே நடைபெறுவதற்கு மற்றுமொரு காரணியாய் அமைவது போட்டி ஓட்டமாகும். தனியார் சிற்றூர்திகளும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளும் இப்போது போட்டி ஓட்ட முன்னெடுப்புக்களைச் செய்துவருகின்றனர்.

குறிப்பிட்டுச் சொல்லவதென்றால், தனியாரின் சிற்றூர்திகள் பெருமளவு ஓடுகின்றது. இவர்களே பயணிகளை ஏற்றும் பெரும் பணிகளைச் செய்து வருகின்றனர். இடையிடை ஓடும் இ.போ.ச. பஸ்வண்டிகளும், தனியார் பஸ் வண்டிகளுக்கும் இடையே பெரும் போட்டிச் சமர் வீதிகளிலே நடைபெற்றுவருகின்றது. இவர்களின் போட்டிச் சமர்களும் விபத்துக்களுக்குப் பெரும் காரணிகளாய் அமைகின்றன.

இவ்வாறு போட்டிகளுக்கான தொடரிலே சிக்கிச் சாவடைவது, காயமடைவது அப்பாவிப் பொதுமக்கள் மக்கள்தான் என்பதனை சாரதிகள் உணரவேண்டும். பாடசாலை மாணவர்கள், கர்ப்பவதிகள், குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் என்றெல்லாம் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றனர். இவற்றுக்குத் தீர்வுகாண வேண்டிய பெரும் பொறுப்பு காவல் துறையிடமே உள்ளது! போக்குவரத்து பொலிசாரின் கண்காணிப்பு தீவிரமானால் வீதி விபத்துக்களைத் தடுக்கலாம். தடுக்கமுடியும்.

ஆனாலும் உரிய ஆவணங்கள், பத்திரங்கள் என்பன இல்லாமல் வாகனம் செலுத்துபவர்கள் போக்குவரத்துப் பொலிசாரின் கண்ணிலே மண்ணைத் தூவுவது போன்று கையூட்டல்கள்மூலம் தப்பித்து வருகின்றனர். இப்படியான கொடும் செயல்கள்மூலம் 2014ஆம் ஆண்டின் தை மாதம் முதல் ஐப்பசி வரை நடைபெற்ற விபத்துக்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வீதி விபத்துக்களில் சிக்கி இவ் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் யாழ்.குடாநாட்டில் மட்டும் 17 பேர் சாவடைந்துள்ளனர். 37 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்பதுடன் 61 பேருக்கு சிறுகாயங்களும் உண்டானது. சொத்துக்கள் என்றவகையில் 06 சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

இது இவ்வாறிருக்கும்போது, கடந்த 10 மாதங்களில் மட்டும் 8228 வீதிப் போக்குவரத்து தொடர்பான சிறு குற்றங்கள் பதிவுமூலம் கண்டறியப்பட்டுள்ளன.

பாதுகாப்பற்ற முறையில் போக்குவரத்துச் செய்தல் தொடர்பாக 206 குற்றங்களும் குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 123 குற்றங்களும் போக்குவரத்து சட்டங்களை மீறியவர்களின் கணக்கே பெருமளவு பதிவாகியுள்ளது. வாகனங்களை செலுத்துவோர்கள் அதற்கான சட்டங்களை மதிக்க வேண்டும். சட்டங்களை மீறிய குற்றவாளிகளாக 4423 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வேறு சிறு விபத்துக்கள் தொடர்பாக 3476 குற்றங்களும் பொலிசாரின் பதிவேடுகள்மூலம் நிரூபணமாகியுள்ளது. இவற்றிலே முக்கியமான விடயம் என்னவென்றால் பொலிசாருக்கு கையூட்டல் கொடுத்து தப்பிக்கொள்பவர்கள்தான் அதிகம். ஆனாலும் வெளியிடப்பட்டுள்ள பொலிசாரின் அறிக்கையைப் பார்த்தால் குற்றவாளிகளின் தொகை இன்னும் அதிகரிக்கும் என்பது உண்மையே.

இதைவிட வீதி விபத்துக்களுக்கு இன்னுமொரு வகையான காரண, காரணிகள் கண்டறியப்பட்டுள்ளது! இரவுநேர நீண்டதூரச் சேவையில் ஈடுபடும் சாரதிகள் நித்திரை முழித்துச் சேவையாற்றுகின்றனர். சுமார் பத்து மணித்தியாலங்களுக்கு மேலாக சாரதி ஆசனத்திலே அமர்ந்திருந்து வாகனங்களை செலுத்தும்போது கண் அயர வேண்டியேற்படும். இதனால் வீதி விபத்துக்கள் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றது.

எனவே, மனிதனே மனிதனைக் கொல்லும் வீதி விபத்தினைத் தவிர்க்க வேண்டுமாயின் பொலிசார் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

ஆக, வீதி விபத்துக்கள் நடைபெறுவதற்கு ஏதாவதொரு வகையில் காரணமாக ஒவ்வொருவரும் இருக்கின்றோம். ஆனால், அதுபற்றி அக்கறையில்லாமல் இருந்துவிட்டு பாதிக்கப்படும்போது கூக்குரல் இடுவதும் ஏனையவர்மீது சேறுவாரி பூசுவதும் கண்கெட்ட பின்னரான சூரிய நமஸ்காரம் செய்வது போன்றதே.




## பொது அறிவு

தன் வாழ்நாளில் ஒரேயொரு முறை பூக்கும் தாவரம் எது?
கோனகாம்பிக்.

பறவை இனங்களில் மிகச் சிறியது எது?
ரீங்காரப் பறவை

பறக்கம்போது தூங்கும் பறவை எது?
ஆல்பற்றாஸ்

உலகின் ஆகக்கூடிய பதிப்பினைப் பெற்ற புத்தகம் எது?
கின்னஸ்

அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்?
திருக்குறள்

உலகில் அதிகமான ஏரிகளைக் கொண்ட நாடு?
பின்லாந்து

இலங்கையில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட ஆண்டு எது?
1960 ஆம் ஆண்டு.

உலகில் மிக உயரமான எரிமலை எது?
கோட்டாபாக்கி.

மிக உயரத்தில் பறக்கும் பறவை எது?
டெர்ன்.

பூகம்பத்தை அளக்கும் கருவி எது?
றிச்ரர்

மருத்துவத்தின் தந்தை யார்?
கிப்போகிரட்டிஸ்

சி.அனுசியா, சங்கானை



வாரம் ஒரு திருக்குறள்

## கேள்வி 412

**செவுக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.**

காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது (அதற்கு துணையாக உடலை ஒப்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.



## திறமை!!

உரோமில் நானூற்றைம்பது தேவாலயம் உள்ளன. அவற்றில் பாந்தியன் என்ற கோயில் மிகவும் பழமையானது.

கி.மு.27ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. வட்டவடிவமாக அமைக்கப்பட்டுள்ள இக்கோயிலின் கதவுகள் பித்தளையால் உருவானவை. கோயிலில் உச்சிக் கூரை கிடையாது. ஆலயத்தில் நடுவட்டப் பகுதியைச் சுற்றி சுவரில் பன்னிரண்டு ஜன்னல்கள் உள்ளன.

மேற்கூரையின் இடைவெளி ஒளி எந்த ஜன்னல்மீது விழுகிறதோ, அது அப்போதைய நேரத்தைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஏழாம் எண் ஜன்னல்மீது ஒளிவிழுந்தால் அப்போது மணி ஏழு, நம் முன்னோர்களுக்கு என்ன திறமை பாருங்கள்பூ


## பாப்பா முரசு சிறுகதை

அக்பர் சபையில் அமர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும்போது ஒரு விநோதமான எண்ணம் தோன்றியது.

உடனே அமர்ந்திருந்த அமைச்சர்களை நோக்கி, பொதுவாக ஒருவர் தானம் கொடுக்கின்றார் என்றால் அவரது கை உயர்ந்தும், வாங்குபவரின் கை தாழ்ந்தும் இருப்பது உண்மையூ ஆனால், தானம்தரும் சமயத்தில் கைதாழ்ந்தும் பெறுபவரின் கை உயர்ந்தும் இருப்பது எந்த சமயத்தில்? இதற்கு சரியான விளக்கம் கூறுங்கள் என்றார் அக்பர்.

சக்கரவர்த்தி கேட்ட கேள்விக்கு அமைச்சர்கள் எவ்வளவு யோசித்தும் விடை சரியாகக் கிடைக்கவில்லை. ஆதலால்

# கொடுக்கும் கை கீழே வாங்கும் கை மேலே!



மன்னனின் கேள்விக்கு பதில் சொல்லாது மவுனமாக இருந்தனர்.

அச்சமயம் பீரப்பால் சபையில் வந்து அமர்ந்தார். மற்ற அமைச்சர்களிடம் கேட்ட அதே கேள்வியை பீரபாலிடம் அக்பர் கேட்டார். பீரபால் சிரித்துக்கொண்டே சக்ரவர்த்தி அவர்களே எல்லோரும் எளிதாகப் பதில் சொல்லிவிடுவார்கள். இதற்கு விடையளிக்க வேண்டும் என்பதினால் விடையளிக்கிறேன்.

ஒருவர் மூக்குப்பொடி டப்பியைத் திறந்து மூக்குக்குப் பொடி போடும்போது மற்றொருவர் கொஞ்சம் மூக்குப்பொடி தாருங்கள் என்று கேட்கிறார் என்று வைத்துககொள்ளுங்கள். அச்சமயம் அவர் அந்த டப்பியை அவர்முன் நீட்டுவார். மூக்குப்பொடியை எடுப்பவர் கொடுப்பவரின் கையைவிட எடுப்பவரின் கை சற்று மேலே இருக்கும்.

ஆகையினால் மூக்குப்பொடி தானம்தரும் சமயம் கொடுப்பவரின் கை கீழேயும் உ வாங்குபவரின் கை மேலேயும் உயர்ந்திருக்கும் என்றார் பீரபால்.

இந்த சின்ன விஷயம்கூட நமது அறிவுக்கு எட்டவில்லை என்று மற்ற அமைச்சர்கள் வருத்தப்பட்டனர். தன்னுடைய கேள்விக்கு சட்டென்று பதில்சொன்ன பீரபாலை அக்பர் மிகவும் பாராட்டினார்.

## பிள்ளையார்!

பெரும்பான்மையான ஜப்பான் கோவில்களில் பிள்ளையார் விக்கிரம் இருக்கும். அங்கு அவருடைய பெயர் ஷகேஷா டேன்.□





## உலகில் உள்ள எரிமலைகள்

| நாடு | எரிமலையின் பெயர் | உயரம் [அடி] |
|---|---|---|
| ஆர்ஜென்டீனா | அகோன் காகுவா | 22,834 |
| சிலி | கு ஆலதிரி | 19,882 |
| சிலி | லாஸ்கர் | 19,652 |
| ஈக்வடார் | கோடபாக்ஸி | 19,347 |
| ஈக்வடார் | சங்கே | 17,749 |
| ஈக்வடார் | துங்குராவுவா | 16,512 |
| ஈக்வடார் | கோடகாஸி | 16,197 |
| ஈரான் | நேமாவெண்ட் | 18,934 |
| மெக்ஸிகோ | ஒரிஜாபா | 18,701 |
| கொலம்பியா | புரேஸ் | 15,604 |
| ரஷ்யா | கிலையுசிவ்ஸ்க்யா | 15,584 |
| காங்கோ | கரிஸிம்பி | 14,786 |
| அலாஸ்கா | ராங்கெல் | 14,004 |
| குவாதிமலா | தஜீமுல்கோ | 13,812 |
| பெய்ரூட் | மிஸ்தி | 19,051 |
| சிசிலி, இத்தாலி | எட்னா | 10,705 |
| அமெரிக்கா | லஸ்ஸன் | 10,547 |


## அதிசயக் கோயில்

தாய்லாந்தில் புத்தருக்கென வெண்மை நிறத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. சலர்மசெய் கோசிட்டாபாட் என்ற கலைஞரால் 1997உ ஆம் ஆண்டில் கோயில் வடிவமைக்கப்பட்டது. கடந்த மே மாதத்தில் ஏற்பட்ட பு'கம்பத்தினால் கோயில் சேதமடைந்தது.

இதர நாடுகளில் உள்ள வசதியுள்ளவர்கள் அளித்த நிதி உதவியை வைத்து கோயில் பொலிவு'ட்டும் தோற்றத்தில் எழுப்பப்பட்டது. பார்வையாளர்கள் கோயிலுக்கு வெளியில் இருந்து புகைப்படம் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 22.12.2014

**வர்ண்ணம் தீட்டும் போட்டி இல.1074**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1072**

ர.சாதனா,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


பரிசுக்குரியவர்: 1072

பாராட்டுக்குரியவர்கள்

01. S.யெஸ்மினி, தினேஸ்நகர், கைவேலி, புதுக்குடியிருப்பு.
02. க.சாவிதா, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
03. வ.பாமினி, மடு, மன்னார்.
04. ஞா.கௌரிமலர், கண்டி வீதி, சாவகச்சேரி.
05. எம்.ஷாருணி, பிரதான வீதி, காலி.
07. ச.அபி, ஜின்னாநகர், திருகோணமலை.
08. வி.அம்புஜன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

புன்னகை நாடு என்று சிறப்பாக, செல்லமாக அழைக்கப்படுவது தாய்லாந்து நாடு ஆகும். உலகிலே வெள்ளை யானைகள் உள்ள நாடும் இதுவே. பழங்காலத்தில் இந்நாட்டில் புதிதாக, அரசர் பதவியேற்கும் நாளில் திருவாசகம் பாடப்படுவது சம்பிரதாயமாக இருந்தது என வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## புன்னகை நாடு



## உண்மைத் தொடர்

அதிர் இடி 68

> “மிகப்பெரிய பொறுப்பை உங்களை நம்பி ஒப்படைத்து இருக்கிறேன். எனக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள்?” என்று கேட்டான்.
> “என் விசுவாசமான உழைப்பை பரிசாகத் தருகிறேன்!” என்று பகாயா சொன்னதும், அமீனுக்கு அலுப்பாக இருந்தது.



# அற்புதன் எழுதிய இடி அமீன்

இனி...

வெளிநாட்டமைச்சராக இருந்த ஒண்டேகாவின் உடல் நைல் நதியில் மிதந்து கரையைத் தொட்டது. அதனையடுத்து உகண்டா வானொலியில் அறிவிப்பு ஒன்று வெளியானது.

“ஆத்திரம்கொண்ட கும்பல் ஒன்றால் கொல்லப்பட்ட வெளிநாட்டு அமைச்சர் ஒண்டேகாவின் உடலை எமது இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர்.

“பிரேத பரிசோதனை முடிந்ததும் அரச மரியாதையுடன் அரச செலவில் உடல் அடக்கம் செய்யப்படும்”

ஒண்டேகாவின் உடலைப் பார்வையிட அவர் மனைவிக்கும். மகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

ஒண்டேகாவின் மனைவி அமீனைச் சந்திக்க பல முயற்சி எடுத்தும். அமீன் சந்திக்க மறுத்துவிட்டான்.

எப்படி. எங்கே நடந்தது என்று கூறாமல். ஒண்டேகாவின் இறுதிச்சடங்குகள் நடந்து முடிந்ததாக வானொலி அறிவித்தது.

அமீன் அவனது அலுவலகத்தில் பகாயா சந்தித்தாள்.

“வாருங்கள் புதிய வெளிநாட்டு அமைச்சரே! மறுநாள் காலையில் வருவதாகக் கூறிவிட்டு நான்கு நாள் தாமதித்து வந்திருக்கிறீர்கள். பதவி ஆசை இல்லாத உங்களைப் போன்றோரைத்தான் எனக்குப் பிடிக்கும்!” என்று சிரித்தான்.

“மன்னிக்கவேண்டும். முன்னாள் வெளிநாட்டமைச்சரின் இறுதிச் சடங்குகள் முடிவதற்கு முன்பாக பதவியேற்பது முறையல்ல என்றுதான் வரவில்லை!” என்றாள்.

“அதுதான் நான் பாராட்டி விட்டேனே!” என்று குழைந்தவன். சட்டென்று கேட்டான். ஒண்டேகாவின் வீட்டுக்குப் போய் ஆறுதல் எல்லாம் சொன்னீர்களாமே?”

தன் கண்ணுக்குத் தெரியாத சிறையில் தன்னை அமீன் வைத்திருக்கிறான். தன் ஒவ்வொரு நடமாட்டமும் கண்காணிக்கப்படுகிறது என்பதை பகாயா முன்கூட்டியே உணர்ந்திருந்தாள். அதனால் அமீனின் கேள்விக்கு ஆச்சரியப்படவில்லை.

“ஆம். ஒண்டோகாவின் குடும்பத்தினருக்கு. அவரது உடலைக்கூட காண்பிக்கவில்லையாமே. மனிதத் தன்மையில்லாத செயல் இது!” என்று சற்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறிவிட்டாள் பகாயா. அவ்வாறு கூறிவிட்டுத்தான். ஏன் வார்த்தைகளைக் கொட்டினோம்” என்று நொந்துகொண்டாள்.

வேறு யாராக இருந்தாலும் அமீன் தன் கோபத்தைக் காட்டியிருப்பான். ஆனால். பகாயாவிடம் அவனுக்குக் கோபம் வரவில்லை. துணிச்சலான பெண்ணாக இருக்கிறாளே என்று நினைத்தான். உடனே நடித்தான்.

“அப்படியா? இது எனக்குத் தெரியாதே! என்னைச் சுற்றி சில முட்டாள்கள் இருக்கிறார்கள். சிலசமயம் எனது அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்”

அமீனின் விளக்கம் கலப்படம் இல்லாத பொய் என்பது பகாயாவுக்குத் தெரியும். அதனைக் காட்டிக் கொள்ளாமல். நம்புவதுபோல முகபாவனை செய்தாள்.

“இன்னொன்று தெரியுமா பகாயா? மைக்கேல் ஒண்டேகா இந்த நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்தார். என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அவர்தான் இறந்துபோனாரே. இனி [illegible]கு அந்த ஆதாரங்களைத் தூக்கி நெருப்பில் போட்டுவிட்டேன். நான் அவரை மலையாக நம்பினேன். அவர் ஒரு எலி மாதிரி நடந்து கொண்டார்!” என்று கூறினான் அமீன்.

தன்மீது அளவற்ற ஆசை வைத்திருக்கிறான் அமீன் என்பதை அவனது பேச்சில் தெரிந்த குழைவிலும். அடிக்கடி உதிரத்த இழிப்பிலும் இருந்து பளிச்சென்று புரிந்துகொண்டாள் பகாயா.

வெளிநாட்டமைச்சராகத் தன் பெயரை அமீன்கூறிய பின்னர் நான்கு நாட்களாக தீவிரமாகச் சிந்தித்த பகாயாவின் மனதில். பல திட்டங்கள் தோன்றியிருந்தன.

அமைச்சர் பதவி என்னும் எலும்புத்துண்டை வீசி தன்னை வளைக்க அமீன் மேற்கொள்ளும் முயற்சியிலிருந்து மெல்ல மெல்லத் தான் தப்பவேண்டும் என்று தீர்மானித்தாள்.

உடனடியாக நாட்டைவிட்டு தப்பியோடவும் முடியாது. ஒவ்வோர் அசைவையும் அமீனின் உளவாளிகள் கண் கொத்திப் பாம்பாக கவனிக் கிறார்கள். அதனால் அமீனுக்கு [illegible] நம்பி[illegible]க ஏற்படுத்தி [illegible] சரியா[illegible] நணத்தில் [illegible] கொள்[illegible] ண்டும் [illegible] முடி[illegible] ள்ணிக் [illegible] ாள் [illegible] ாதுதான் [illegible] ரப்பட [illegible] விட்ட [illegible] த்தைச[illegible]க வருத்தப் பட்டாள்.

“தே[illegible]ரோகம் என்றால் மன்னிக்க முடியாததுதான். அப்படியானால் நீங்கள் செய்தது சரிதான்!” என்றாள்.

அமீனுக்கு அவள் அவ்வாறு கூறியது பிடித்திருந்தது. அதனைவிட அவளை அணுவணுவாகப் பிடித்திருந்தது. அன்றே பதவியேற்பு வைபவம் நடந்தது.

“மிகப்பெரிய பொறுப்பை உங்களை நம்பி ஒப்படைத்திருக்கிறேன். எனக்கு என்ன பரிசு தரப்போகிறீர்கள்?” என்று கேட்டான்.

“என் விசுவாசமான உழைப்பை பரிசாகத் தருகிறேன்!” என்று பகாயா சொன்னதும். அமீனுக்கு அலுப்பாக இருந்தது.

ஆனாலும் பகாயா விடயத்தில் கட்டாயப்படுத்தாமல். அவளாகவே கனிந்து மடியில் விழவேண்டும்



என்று நினைத்தான் அமீன். அதனால் விட்டுப் பிடிக்கத் தீர்மானித்தான்.

“இதுவரை பல பெண்களை என் அதிகாரத்தைக் காட்டித்தான் கட்டிலில் சாய்த்து இருக்கிறேன். பகாயாவை அவளாகவே என்னை நாட வைக்கப்போகிறேன்” என்று தனக்குள் பேசிக்கொண்டான். புகழ்ச்சிக்கு ஆண்களும் அடிமைகள். **(தொடரும்)**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 603

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 601 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ரு | 3 ணா | 4 க | 5 ர | 6 ன் |
| 7 தி | 8 த் | 9 அ | 10 ர் | 11 க | 12 ய |
| 13 ர் | 14 து | | | 17 பி | |
| 19 கா | 20 தி | | 22 ம் | 23 ப | 24 ல |
| 25 ம | | 27 ஏ | 28 ற | 29 ற் | 30 ம் |
| 31 ம் | 32 ற | 33 ன் | 34 ம | 35 தி | 36 நீ |

### மேலிருந்து கீழ்

01. புள்ளடிக்குறி.
02. அஞ்சனையின் மகன். (குழம்பியுள்ளது)
03. இடப்பக்கம் (குழம்பியுள்ளது)
06. உலகின் முக்கிய இலக்கிய விருதுகளில் ஒன்று.
11. தூளி.
22. மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)
29. மிக : அதிக. (திரும்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

01. சூரிய. சந்திர கிரகங்கள் சுழற்சி முறையில் ஒரே ராசியில் சேர்வது இப்படி அழைக்கப்படும்.
07. இருப்பிடம். வீடு. (குழம்பியுள்ளது)
11. அதிகமாகப் பிரயோகிக்கப்படும் கேள்வி.
13. இயமன் ; சீவன். (குழம்பியுள்ளது)
17. மரக்கலம்; மூங்கில். (திரும்பியுள்ளது)
19. துரியோதனனின் மனைவி.
27. குடம்; கும்பம். (குழம்பியுள்ளது)
31. தேசம் ; தித்திப்பு. (திரும்பியுள்ளது)
34. ஆசைப்பெருக்கு; இளவோலை. (குழம்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **22.12.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 603
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 601 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.

வ.ஸ்பூர்த்தி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. மு.சர்மிலன், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு.
02. து.ஜஸ்மிலன், கரவெட்டி, நெல்லியடி.
03. எம்.இஸ்மாயில், பிரதான வீதி, வவுனியா.
04. என்.எம்.எம்.நு:.மான், தர்ஹாநகர்.
05. வ.கவியரசி, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
06. எல்.பானுமதி, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
07. பா.யோகேஸ்வரி, பரந்தன், கிளிநொச்சி.
08. எஸ்.யூடிற் லொசியா, தும்பளை, பருத்தித்துறை.
09. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

# குடும்பத்திற்காக...!

அஜித் எப்போதும் தன் குடும்பத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கும் நடிகர். படப்பிடிப்பில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், எப்படியாவது தன் மனைவி, குழந்தைக்கு என நேரத்தை ஒதுக்கிவிடுவார். தற்போது ஷாலினி கர்ப்பமாக இருக்கிறார். இதற்காக அஜித் வீட்டை மிக அழகாக அலங்கரித்து வருகிறாராம். ஏனெனில் பிறக்கப் போகும் தன் குழந்தைக்காக பார்த்து பார்த்து செதுக்கிவருகிறார். இதனால் அந்த வீட்டில் வேலை நடப்பதால் வாடகை வீட்டில் தான் தற்போது இருக்கிறாராம்.

# மீண்டும் அஜித்

அஜித் மீண்டும் தன் என்ட்ரியை கொடுத்து நேற்று அசத்திவிட்டார். என்னை அறிந்தால் டீசர் வெளிவந்த நொடியில் இருந்து தல ரசிகர்கள் டுவிட்டர், பேஸ்புக் என ட்ரண்ட் செய்து அசத்திவிட்டனர். தற்போது இந்த டீசர் 13 இலட்சத்தை தாண்டி ஹிட்ஸை தொட்டுள்ளது. மேலும் 24 மணி நேரத்திற்குள் 10 லட்சம் ஹிட்ஸை தொட்டது. மேலும் லைக்ஸில் 40 ஆயிரத்தை தாண்டி - ஐ, லிங்கா, கத்தி என அனைத்தையும் பின்னுக்குத் தள்ளியது.




# அழகு தேவதை திரிஷா!

ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்புக்கு மத்தியில் வெளியாகி மிகுந்த பாராட்டைப் பெற்றுள்ளது என்னை அறிந்தால் டீசர். கௌதம் மேனன் இயக்கத்தில் தல அஜித் நடித்துள்ள இப்படத்தில் அனுஷ்காவும், த்ரிஷாவும் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இப்படத்தில் விவேக் காமெடியனாக அசத்தியுள்ளாராம்.

டீசரில் த்ரிஷா இன்னும் அழகாக அப்படியே லேசா லேசா படத்தில் உள்ளதைப் போலவே இருக்கிறார் என விவேக் புகழ்ந்துள்ளார். இருவரும் பல படங்களில் ஒன்றாக இணைந்து நடித்துள்ளனர். 12 வருடத்திற்கு முன்பு த்ரிஷா அறிமுகமான லேசா லேசா படத்திலும் விவேக் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சினிமாவில் விளையாட்டு பையனாக வலம் வருபவர் நடிகர் சிம்பு. திரையில் காதலிக்கும்போதே நிஜத்திலும் காதலில் விழுந்துவிடுவார். இதுவரை நயன்தாரா, ஹன்சிகாவை காதலித்தவர் பின்பு கருத்து வேறுபாட்டால் பிரிந்தார்.

இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் தனது காதல் தோல்விகளை பற்றி மனம்திறந்துள்ளார். இவருக்கு இரண்டு காதல் இல்லையாம், மூன்று காதல் இருந்ததாம். ஆனால் அந்த பெண் பற்றி வெளியில் சொல்ல விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். ஒவ்வொரு முறையும் இந்த காதல் கடைசிவரை வரும் என்றுதான் நினைத்தேன். ஆனால் காதலிக்கறவங்க ஒண்ணு சேரமுடியாதுங்கற மனநிலைக்கு வந்துட்டேன் என்றும் காதல் தோல்விகள் தன்னை பக்குவப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

# கர்வத்தில் ஸ்ருதி

தென்னிந்திய சினிமாவில் நம்பர் 1 என்ற இடத்திற்கு வந்துவிட்டார் ஸ்ருதி. இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் தன் அழகு குறித்து மனம் திறந்துள்ளார். சில தினங்களுக்கு முன் இவர் தன் உடல் தனக்கு கோவில்போல என்று கூறியிருந்தார். தற்போது "சிலர் அந்தந்த வயதில் அழகாக மாறுவார்கள், ஆனால், எனக்கு அந்த பிரச்சினை இல்லை. நான் இயற்கையாகவே அழகு தான் இதை கர்வத்துடன் சொல்லிக்கொள்கிறேன்" கூறியுள்ளார்.




## ஸ்டாலினின் அடுத்த ஜோடி எமி ஜாக்ஸன்

உதயநிதி ஸ்டாலின் தற்போது நண்பேண்டா படத்தில் பிஸியாக நடித்துவருகிறார். இப்படத்தை முடித்த கையோடு அடுத்து 'மான் கராத்தே' திருக்குமரன் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக எமி ஜாக்ஸன் நடிக்க, அனிருத் இசையமைக்க உள்ளார். ஆனால், பிரச்சினை இப்படத்தின் டைட்டிலில்தான். இந்த தலைப்பை பிரபல இயக்குனர் ஒருவர் ஏற்கனவே புக் செய்ய, அவர் கேட்டதற்கு இனங்க டைட்டிலை விட்டுக் கொடுத்துள்ளாராம்.



# ஈகோ இல்லாத ஹீரோ

சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்து வெற்றிக்கொடி கட்டியவர் சிவகார்த்திகேயன்.

ஒரு சிலர் வெற்றிகள் வந்துவிட்டால், அவர்களுக்கு உதவிசெய்தவர்கள், பழைய நண்பர்கள் என அனைவரையும் மறந்துவிடுவார்கள். ஆனால், சிவகார்த்திகேயன் இன்றும் தன் பழைய நண்பர்களை எங்கு பார்த்தாலும் முன்பு எப்படி கலாய்ப்பாரோ அதேபோல் ஜாலியாகத்தான் பேசுவாராம். அதிலும் குறிப்பாக தன் சின்னத்திரை நண்பர்களுடன் எந்த ஒரு வேறுபாடு இல்லாமல் பழகுகிறார் என அனைவரும் கூறுகின்றனர்.

# அடுத்த ரஜினி?

சிம்பு எப்போதும் சூப்பர் ஸ்டார் பட்டத்திற்கு ஆசைப்படுபவர் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால், சில காலங்களாக எனக்கு சூப்பர் ஸ்டார் பட்டம் எனக்கு வேண்டாம் என்று கூறிவந்தார். இந்நிலையில் வாலு படத்தின் இயக்குனர் சமீபத்தில் ஒரு முன்னணி வார இதழ் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளார். இதில் படம் குறித்து பல சுவையான தகவல்களை கூறியுள்ளார். அவர் கூறுகையில், "படத்தில் நீங்கள் எதிர்ப்பார்க்கும்போதும் சிம்பு அடிக்கமாட்டார், எதிர்ப்பார்க்காமல் இருக்கும்போது அடித்து தூள் கிளப்புவார், சிம்பிளா சொல்லனும்ன்னா அவர்தான் அடுத்த ரஜினி" என்று கூறியுள்ளார்.





மனம் மகிழும்
பண்டிகைக் காலத்தில்
மனநிறைவாய் ஷொப்பிங் செய்யுங்கள்
20% தள்ளுபடி
இப் பண்டிகைக் காலத்தில் பீப்பள்ஸ் VISA கடனட்டையினைப் பயன்படுத்தி ஷொப்பிங் செய்வோருக்கு சிறப்புமிகு தள்ளுபடிகள்
மக்கள் வங்கியின் பீப்பள்ஸ் VISA கடனட்டை உரிமையாளர்கள் கீழ்காணும் விற்பனை ஸ்தானங்களில் 20% தள்ளுபடியைப் பெற்றுக்கொள்ளலாம்.
டிசெ. 11 - டிசெ. 12 COOL PLANET
டிசெ. 1 - டிசெ. 15
டிசெ. 1 - டிசெ. 20 SUPUL
டிசெ. 18 - டிசெ. 19 FASHION BUG
டிசெ. 11 - டிசெ. 20 CIB SHOPPING CENTRE
டிசெ. 9 - டிசெ. 10 NOLIMIT Sri Lanka's biggest fashion chain
டிசெ. 1 - டிசெ. 31 LAKE HOUSE BOOKSHOP
டிசெ. 1 - டிசெ. 31 Samudra Book Shop
டிசெ. 10 - டிசெ. 31 elanka
டிசெ. 1 - டிசெ. 20 KAMILI BEACH VILLA
டிசெ. 16 - டிசெ. 20 LOON TAO
டிசெ. 11 - டிசெ. 20
டிசெ. 16 - டிசெ. 20 TSING TAO
டிசெ. 1 - டிசெ. 20 KASSAPA Lions Rock
டிசெ. 14 - டிசெ. 20 Chamathka NEVER TO FORGET
டிசெ. 10 - டிசெ. 20 GIGI SHOES
டிசெ. 1 - டிசெ. 7
டிசெ. 16 - டிசெ. 20 CHOICE PARK
டிசெ. 1 - டிசெ. 7 Chamathkara Exclusive clothing store for party wear
*நிபந்தனைகளுக்குட்பட்டது
மக்கள் வங்கியின் பீப்பள்ஸ் VISA கடனட்டையைப் பயன்படுத்தி, நாடெங்கிலுமுள்ள எமது விற்பனைப் பங்காளர்களிடம் உங்கள் கொள்வனவுகளுக்கு 20% தள்ளுபடியைப் பெற்று மகிழுங்கள்.
(C/3924)
AA- Brand Finance Rating, AA+ Fitch Rating
மேலதிக விபரங்களுக்கு:
0112 490 440 / 0112 490 441
0112 490 406 / 0112 490 490
www.peoplesbank.lk
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி



# தேன் கிண்ணம்

என் உயிர் நீ என்றேன்
உயிரும் ஓர் நாள் பிரியும் என்றாய்
என் சுவாசம் நீ என்றேன் – அதுவும்
ஓர் நாள் தன் பணியை நிறுத்திவிடும்
என்றான்...!
என் வாழ்வே நீ என்றேன்
உயிர் உள்ளவரைதான்
வாழ்க்கை என்றான்
புரியவில்லை என்றேன்
நீதானே நான் என்றான்
தன் அன்னைப் பரிமாறி
என்னைத் தானாகச் சுமப்பவன்
உங்களுக்கும் புரியவில்லையா...?
அவன்தான் எனக்காகப் பிறந்தவன்
என் அன்புக் கணவன்.

## அன்பின் பரிமாற்றம்



புதுக்குடியிருப்பு, ந.பிரசன்னா



திலக்ஸ், கட்டைக்காடு.

## வளர்க இவள் குழந்தை!!

எனக்கு விபரம் தெரிந்த
நாளில் இருந்து நான் அழுததே
இல்லை.
ஆனாலும் அழுதேன்....
அவள் என்னை மறந்து
இன்னொருவருடன் சேர்ந்து
வாழும்போது.

ஒரு நாள் தெருவின் ஓரமாய்
நடையுடன் சென்றேன்
அப்பொழுது அவள் தனது
குழந்தையை
மேலே தூக்கினாள்...
இது பாசத்தினால் அல்ல
பைத்தியமாக்குவதற்கு
என்று புரிந்துகொண்டேன்.

நான் அவளை தாண்டிச்
செல்லும் போது திரும்பிப்
பார்த்தேன்...
அவளையல்ல
அவள் தோளில்
சாய்ந்துபோகும்
அவள் குழந்தையை....

அக்குழந்தை நான்
மறையும்வரை என்னையே
பார்த்து தனது மொழியில்
ஏதோ பேசிக்கொண்டிருந்தது
உடனே குழந்தை தனது
தாயின் சட்டையை இழுத்தது...
தனது பாணியில்
(மொழியில்)
தாயிடம் ஏதோ வினவியது.

நான் நினைக்கிறேன்!

அம்மா! நீ கைவிட்டுச் சென்ற.
நீ ஏமாற்றிய
காதலன் தெருவின் ஓரமாய்
நடந்து
செல்கின்றானம்மா...
அவன் உனக்குச்
செய்த நன்மைகளுக்காக
அவனை ஒருமுறை
அவனது முகத்தின்
வாட்டத்தை
ஒரு முறை
தலைநிமிர்ந்து பாரம்மா?

என்று அக்குழந்தை
சொல்லியிருக்கும்
என எண்ணி கற்பனையில்
மிதந்து கண்களில் இருந்து
வழிந்த
கண்ணீரைத் துடைத்து....
குழந்தையின் பார்வையில்
இருந்து மறைந்தேன்.

வாழ்க! இவள் வையகத்தில்
வளர்க! இவள் குழந்தை!



## வீணான எண்ணங்கள்

அன்று உன்னைக் கண்டதும்
என்றும் உன் பார்வை
என்னைப் பரவசப்படுத்தும்
உன் தேன் மொழி
என்னை இனிமையாக்கும்
உன் ஸ்பரிசம்
என்னில் மின்னேற்றும்
உன் உறவில் என்றும்
என் உயிர் துடிக்கும்
என்றெல்லாம் எண்ணி
மகிழ்ந்தேன்.
ஆனால் எல்லாமே
வீணான எண்ணங்களாயின
உன்னை யின்று கண்ட போது
உன் காதலனுடன்...

அ.சந்தியாகோ, கண்டி.

## செந்தூரப் பூவே!

இளம்பிறை யோகன்,
புத்தளம்.

நந்தி வனச் சோலையிலே
மந்த மாருதம் வீசுகையிலே
நந்திபோல் நானும் - உன்னை
சந்திக்க வேண்டுமென
சிந்தித்துக் கொண்டு இருக்கேனடி.
சுந்தரமான இந்த வேளையிலே
சந்திர முக நங்கையே - நீ
இந்திர லோகத்து தேவதைபோல்
வந்திடுவாய் சீக்கிரமாய் என்னிடம்
தந்திடுவாய் காதல் கடிதம்
தந்திபோல் என இருக்கேனடி.
சந்தனம் பூசிய இந்த
அந்தி வானம் கருகுமுன்
பிந்தி விடாமல் நீயும்
முந்தி வந்து என்னருகில்
குந்திடுவாயோ என் காதல்
பூந்தோட்டத்திலே பூத்து விட்ட
செந்தூரப் பூவே.



## புதைந்த காதல் சரித்திரம்

கன்னியவள் சொன்ன
மொழியில் சிக்கி காதல்
எனும் வலையில் விழுந்தேன்.

காப்பாற்ற யாருமே
இல்லை – எழவும்
மனம் இல்லை.

தானாகவே விலகிச் சென்றாள்
கன்னியவள் புரிந்து கொள்ள
முடியவில்லை காரணத்தை...

உடைந்து போனேன்
அழுது புலம்பினேன்
நினைவுகள் என்னை
தொந்தரவு செய்தன.

அவள் செய்கையை
ரசித்த எனக்கு
அவளை மறக்க முடியவில்லை.

இன்னும் அவள் நினைவுகள்
என் மனதில்
அழியாத பொக்கிஷமாக
புதைந்த காதல் சரித்திரமாக.



யாழ். ஹனா



# அமைதியாக உறங்கு...

அவுஸ்திரேலிய இளம் வீரர் பில் ஹியஸ் இனி நம்முடன் இல்லை. ஆனால் அவன் நினைவுகள் என்றும் மங்கப்போவதில்லை. உலகளாவிய ரீதியில் சாதாரண மனிதர்களில் இருந்து. மிகப்பெரும் பிரபலங்கள்வரை ஹியஸின் மரணம் பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிவிட்டது. வளர்ந்து வந்துகொண்டிருந்த இந்த வீரன் எப்படித் திடீரென மறைந்தான். அந்த மறைவு சகல தரப்பையும் எதிர்பாராத அளவிற்கு எப்படி உலுக்கியது என்பது புரியாத புதிராகவே இருக்கிறது..

இறுதிச்சடங்கின்போது எவ்வளவோ நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் மிகவும் மனமுடைந்துபோன அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க்கின் கருத்துக்கள் மிகப் பிரபல்யம் அடைந்ததுடன்; அவரைப் பற்றி மிகப்பெரிய மரியாதைக்குரிய பிம்பத்தையும் உருவாக்கியுள்ளன. இருபத்தைந்து வயதில் அவனை இழந்து துயருறும் குடும்பத்திற்கு ஆறுதல்கூறுவது இயலாது. மற்றவர்கள் என்ன நினைக்கிறீரகளோ தெரியவில்லை, ஆனால் நான் அவனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

நான் கடந்த வியாழன் அன்று இரவு சிட்னி மைதானத்தின் மையப் பகுதிக்குச் சென்றிருந்தேன். நானும் பில் ஹியசும் ஒன்றாக விளையாடிய, அவனும் இன்னும் பல நண்பர்களும் ஒன்றாக விளையாடிய எங்கள் எதிர்காலக் கனவுகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்த அந்தப் புற்தரை, புல்லின் இதழ்கள் அப்படியே இருந்தன. நான் அவ்விடத்தில் அப்படியே நின்றேன். பின்னர் முழந்தாழிட்டு அந்தப் புற்களைத் தடவிக் கொடுத்தேன். அப்போது அவன் என்னுடனேயே இருப்பது எனக்குள் உறுதிப்படுத்திக்கொண்டேன் என்று கண்ணீரவிட்டு உருகியிருக்கிறார்.

மேலும் அந்த இறுதி யாத்திரையில் மெழுகுதிரி ஏந்தியிருந்த சிறுமியில் இருந்து, உலக ஜாம்பவான்கள்வரை அவனுக்காக துயரப்பட்டது என்னை உருக்கிவிட்டது. இதுதான் கிரிக்கெட்டை இந்தளவிற்கு சிகரத்தில் வைத்துள்ளது. நாங்கள் அடுத்த கட்டத்திற்குப் போகவேண்டும். தொடர்ந்து விளையாடவேண்டும். முடிக்கும்போது, அமைதியாக உறங்கு என் இளைய சகோதரனேயூ நான் உன்னை மீண்டும் சந்திப்பேன் என்று முடிக்கிறார்.

இவனது கிராமம் மெக்ஸ்வெல். 2500 மக்களை மட்டும் கொண்டது. இவனது மறைவு பிரைறன் லாறா, சேஷன் வோர்ண் கிளென் மெக்ரா, விராட் கோலி, ஹியசின் முதல் டெஸ்ட் தலைவர் ரிக்கிபொன்ரிங் போன்ற மிகப் பிரபலங்களை அந்தக் கிராமத்துக்கு வரவழைத்துவிட்டது. அந்தக் கிராமம் முழுவதுமே பில் ஹியசுக்காக அழுது கொண்டிருக்கிறது.






# மாற்றி யோசியுங்கள்

உலகக் கிண்ணப்போட்டிகள் முடிவடையும் தறுவாயில் நிச்சயமாக குமார் சங்கக்காரா சனத் ஜயசூரியாவை முந்திவிடுவார் என்று நம்பலாம். அத்தனை உறுதியான வீரர் அவர். எனினும் அவர் காலத்தில் சச்சினை எட்டமுடியாது என்பது நிதர்சனமான உண்மை.

இருந்தாலும் அவசரப்பட்டு, உலகக் கிண்ணத்தின்பின் ஓய்வை அறிவிக்காமல் விட்டால் றிக்கி பொன்ரிங்கின் 13704 கடப்பது கடினமல்ல. ரசிகர்கள் இதைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். சங்கா இதனை மறுக்கமாட்டார் என்றே நம்புகிறோம்.

சங்காவின் இப்போதைய 13000 பிளஸ் இல் 19 சதங்களும் அடக்கம். மேலாக விக்கெட் காப்பாளராக கில்கிறிஸ்ட் வைத்திருந்த 472 பேரை ஆட்டம் இழக்கச் செய்த சாதனைஉயை தற்போது மேவி 473 பேரை விக்கெட் காப்பாளராக ஆட்டம் இழக்கச் செய்துள்ளார்.

**13000 பிளஸ்**

| பெயர் | ஓட்டங்கள் | போட்டிகள் |
|---|---|---|
| சச்சின் டெண்டுல்கார் (இந்தியா) | 18426 | 452 ஒருநாள் |
| றிக்கி பொன்ரிங் | 13704 | 365 |
| சணத் ஜயசூரியா | 13430 | 433 |
| குமார் சங்கக்கார | 13050 | 363 |

மேற்கண்ட தரவுகள் எல்லோருமே அறிந்ததுதான். இப்போதுள்ள கேள்வி 13000+ என்று ஓடிக்கொண்டிருககும் சங்கக்கார ஒருநாள் போட்டிகளில் இரண்டாவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை எட்டியவர் என்ற சாதனையைப் படைப்பாரா என்பதுதான். அவர் ஒருநாள் ஆட்டத்தில் நீடிக்க நினைத்தால் அது முடியும் என்பதே உண்மை.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள

# திறமை மட்டுமே தேவை



கடந்த மாதம் நடைபெற்ற LSR கொழும்பு மரதன் ஓட்டப்போட்டிகளில் இலங்கை அளவிலான நேரச் சாதனையுடன் வென்றவர் நிலூகா கீத்தானி ராஜசேகர. இராணுவத்தைச் சேர்ந்த இவர் 2 மணி 47 நிமிடம் 55 செக்கன்களில் தூரத்தை ஓடிமுடித்து கிண்ணம் வென்றார். இதேவேளை இவரை ஓரங்கட்டி, அமெரிக்காவில் இருக்கும் ஹிருணி விஜேசிங்கவை முதன்மைப்படுத்த முயற்சிக்கிறார்கள் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் நிலூகா. அவரது திறமையை நான் மதிக்கிறேன். ஆனால் எனது திறமையை ஏன் கண்டுகொள்கிறார்கள் இல்லை என்று தெரியவில்லை என்று குமுறுகிறார். இதேவேளை இதே நிகழ்வில் ஹிருணி இவரைவிட 4 நிமிடங்கள் குறைவாகவே எடுத்துக்கொண்டதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



இந்தச் சர்ச்சை பற்றி உரிய அதிகாரிகளிடம் வினவியபோது, ஹிருணி 24 வயது மட்டுமே நிறைந்தவர். அவரைத் தொடர்புகொண்டு இலங்கை சார்பாகப் பங்குகொள்ள விருப்பமா என்று கேட்டபோது அவர் சம்மதித்தார். அதைவிட வேறு காரணங்கள் இல்லை. இருவருமே தங்கள் திறமையை வெளிக்காட்டலாம். அது நாட்டுக்குத்தானே நன்மை பயக்கும் என்று கூறுகிறார்.

ஆனால், முன்னதாக வெளிநாடுகளில் இருந்து இங்கு அழைத்துவரப்பட்ட நம்மவர்கள் எதிர்பார்த்த அளவு சோபிக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கது. அதில் ஒருவர் யு.எஸ்.சி.இல் இருந்துவந்த தடை தாண்டல் வீராங்கனை சோணாலிமெரில். இன்னொருவர் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கோலூன்றிப் பாயும் வீரர் முதித் ஜயசேகர. இவர்கள் இருவருமே திறமைசாலிகளாக இருந்த போதும், இலங்கை அணியின் தேவ்வகள் என்று வரும்போது, தங்கள் திறமையை முழுமையாகக்காட்டி தகுதி பெறமுடியாமல், போய்விடுகிறார்கள். என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் உள்ளூராயினும், வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நம்மவராக இருந்தாலும்சரி எமக்கு வெற்றிகளைப் பெற்றுத்தருபவர்களாக இருந்தால் அவர்களுக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்.



உலகின் அதிசிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான தெரிவுகள் நெருங்கிவிட்டன. வீரர்களின் பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டு, படிப்படியாகக் குறைக்கப்பட்டு தற்போது மூன்றே மூன்று பெயர்களில் வந்து நிற்கின்றது. ஒன்று லயனல் மெஸ்ஸி, அடுத்தது கிறிஸ்ரியானோ றொனால்டோ, மூன்றாமவர் ஜேர்மனியின் கோல் காப்பு வீரர் மனுவேல் நூயர். பீபாவின் இந்தத் தெரிவின் முடிவு ஜனவரி 12ஆம் திகதி அறிவிக்கப்படும்.

மெஸ்ஸி இந்த விருதை முன்னதாக நான்கு முறை வென்றவர். ஆனால் பார்சலேனாவிற்காகவோ, ஆர்ஜென்ரீனாவிற்காகவோ இம்முறை ஒரு கிண்ணம்கூட இவரால் வெல்ல முடியாமல் போயிற்று. இருந்தும் உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு இறுதி ஆட்டம் வரை அணியைக் கொண்டு வந்தவர் என்பது இவருக்கு மேலதிகத் தகுதி.

அடுத்து கிறிஸ்ரியானோ றொனால்டோ. இவர் 2008 இல் இந்த விருதைப் பெற்றவர். தற்போது இந்த விருதை இவரே தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

மனுவெல் நூயர் உலகின் அதிசிறந்த கோல் காப்பு வீரராகக் கருதப்படுபவர். உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆகட்டும், அவரது கழகமான பெயார்ன் மியனிக் அணிக்காக இருக்கட்டும், அவர்களின் வெற்றிகளின் முக்கிய பங்கு இவருக்குண்டு. குறிப்பாக ஜேர்மனி, ஆர்ஜென்ரீனாவை உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் சந்தித்தபோது, இவரது அதீத திறமை வெளிப்பட்டது. இம்மூவருமே விருதுக்குத் தகுதியானவர்கள்தான். ஆனால் தெரிவு என்பது ஒருவராக மட்டும் தானே இருக்க முடியும்.



# இருவரில் ஒருவரா?



# லேடிஸ் ஸ்பெஷல்



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.





## பெண் மலட்டுத்தன்மை நீங்க...

வயதுக்குவரும் பெண் பிள்ளைகள் நல்லெண்ணெய், உளுந்தங்களி, லேகிய வகைகள் சாப்பிடாமல் விட்டுவிடுகிறார்கள். இதுவும் மலட்டுத் தன்மைக்கு காரணமாகிறது.

மாதவிலக்கு 28 நாட்களுக்கு ஒருமுறை வரவேண்டும். இதில் ஒருநாள் மாறுபடலாம். மாதவிலக்கு 3 நாட்கள் இருக்கவேண்டும். வயிற்றில் வலி இருக்கக்கூடாது. அப்படி வலியிருந்தால் மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும்.

நிறையப் பெண்களுக்கு வெள்ளைபடும். அதை தடுக்க சித்த மருத்துவத்தில் மருந்துகள் இருக்கின்றன. இரத்தப்போக்கு பிரச்சினை வந்தாலும் அதையும் உடனே சரிப்படுத்தவேண்டும்.

**பெண்கள் மலட்டுத்தன்மையை போக்க வழி:**

மலட்டுத்தன்மை கொண்ட பெண்கள் உணவு வகையிலும் கவனம் செலுத்தவும். கசப்பு, துவர்ப்பு, இயற்கையான இனிப்பு... இந்த மூன்றையும் உணவில் மூன்றில் ஒரு பங்கு குறையாது பார்த்துக்கொள்ளவும்.

அதாவது பாகற்காய், சுண்டைக்காய், வெந்தயம், கேரட், பீட்ரூட்டை தாராளமாக உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். வெந்தயக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை, வல்லாரைக்கீரை, தூதுவளை, இப்படி ஏதாவது ஒரு கீரையை தினமும் உணவுடன் காலை அல்லது மதியம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மாதுளம் பழம், அத்திப்பிஞ்சு, திராட்சை, எலுமிச்சம் பழம், ஒரேஞ்சு நலம் தரும். பூ வகைகளில் ரோஜா, மாதுளம் பூ, ஆவ்ரம் பூ, செம்பருத்தி பூ நல்லது.

**கர்ப்பப்பை கோளாறுகள் நீங்க:**

வெண்பூசணியை தினம் உணவில் சேர்த்துவந்தால் கர்ப்பக் கோளாறுகள், மாதவிலக்கு பிரச்சினை நீங்கும்.

## பெண்கள் உடல் எடை அதிகரிப்பதை தவிர்க்க....

பெண்கள் உடல் எடையினை எளிதாக குறைக்க முடியாது. எனினும், பெண்கள் இந்த வாழ்க்கை முறை மாற்றங்கள் மற்றும் உணவ பழக்கத்தை செயற்படுத்தி நீங்கள் விரைவில் உங்கள் எடையை குறைக்க உதவும்!

- ✔ தொடர்ந்து ஒரு குறைந்த கால உணவுத்திட்டம்
- ✔ பசிக்கும்போது மட்டும் உணவு. அதுவும் சரியான இடைவெளியில்.
- ✔ நல்ல உணவு பழக்கம் மற்றும் தேவையற்ற உணவு பழக்கத்தில் இருந்து விலகி இருத்தல்.
- ✔ தினமும் எடையை பதிவு செய்து வைத்திருப்பது மற்றும் அதன் முன்னே ற்றத்தை அளவிடுதல்.
- ✔ மது மற்றும் காற்றடைக்கப்பட்ட பானங்களை தவிர்ப்பது.
- ✔ செயற்கை இனிப்பாலான சர்க்கரைகளை தவிர்த்தல்.
- ✔ தினமும் உடற்பயிற்சி - மருந்துகள் மறுஆய்வு.
- ✔ குறைந்தது 8 மணி நேரம் தூக்கம், தியானம் செய்தல்.



- ✔ பேக்கரி மற்றும் பால் பொருட்களை குறைவாகாது உட்கொள்ளுவது.
- ✔ போதுமான குடிநீர்.
- ✔ கனிமங்கள் மற்றும் விற்றமின்கள் நிறைந்த உணவுகள் அல்லது கூடுதல் உணவு.
- ✔ இன்சுலின் அளவு குறைவாக உள்ள உணவுகள்.
- ✔ அடிக்கடி ஹோர்மோன்கள் சரி பார்க்கப்படவேண்டும்.

பெண்களின் ஹோர்மோன் ஏற்றத்தாழ்வு மற்றும் அதையொட்டிய உடல் எடையை அதிகரிப்பு இதை கொண்டே கண்டறியப்பட்டது. எனவே விரைவில் நீங்கள் ஹோர்மோன் ஏற்றத்தாழ்வு அறிகுறிகளை கண்காணிக்கலாம்.

சிகிச்சை வாழ்க்கை முறை மாற்றங்கள், மருந்துகள் அல்லது செயற்கை ஹோர்மோன் களும் இதில் அடங்கும். எடை அதிகரிப்பு மற்றும் ஹோர்மோன் பிரச்சினைகளால் பெண்களுக்கு அதிகளவில் பாதிப்படைவீர்கள். நீங்கள் உங்கள் ஹோர்மோன் பிரச்சினை எல்லா இடத்திலும் இருக்கும் என்று சந்தேகம் இருந்தால், மருத்துவரிடம் உங்கள் உடல்நிலையை காட்டி ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு விழிப்புடன் இருங்கள்.

## கண்களைக் கவரும் மேக்கப்



கவரும் கண்களைப் பெற எளிதான சில விஷயங்களை செய்தாலே போதும். பலரும் முகத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை கண்களுக்குக் கொடுப்பதில்லை. சிலருக்கு நமது கண்ணுக்கு எந்தவிதமான மேக்கப்பை போடவேண்டும் என்று தெரிவதில்லை.

கண்களின் அழகை அதிகரிக்க ஐ ஷேடோ, ஐ லைனர், மஸ்கரா போன்றவை தேவை. சரி இப்போது கண்களை எவ்வாறு அழகாக காட்டலாம் என்பதை பார்க்கலாம். மேக்கப் போட ஆரம்பிக்கும் முன் முகத்தை சுத்தம் செய்யுங்கள். ஏற்கனவே கண்களில் போட்ட மேக்கப் பொருட்களை முழுமையாக அகற்றுங்கள்.

அதற்கு ஈரமான தண்ணீரில் அல்லது லோஷனில் நனைத்த பஞ்சினை பயன்படுத்தலாம். மாய்சுரைசரை உங்கள் கண்களைச் சுற்றி தடவுங்கள். ஆனால், இமைகளின்மீது தடவவேண்டாம். அவ்வாறு தடவிவிட்டால், இமைமீது போடும் ஐ ஷேடோக்கள் வழிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஒருவேளை கருவளையம் இருந்தால் கருவளையத்தை மறைக்கும் வகையில் கன்சீலர் பயன்படுத்தலாம்.

கன்சீலரை உங்கள் சருமத்துக்கு பொருந்துகிறதா என்பதை பரிசோதித்து வாங்கவேண்டியது அவசியம். கன்சீலரை போட்டு அதன்மேல், நீங்கள் பயன்படுத்தும் பவுடரை லேசாக தடவுங்கள். பிறகு, கண் இமையின்மீது, ஐ ஷேடோவை உங்கள் ஆடையின் அல்லது லிப்ஸ்டிக் நிறத்துக்கு இல்லையென்றால் பொதுவாக பிரவுன் நிறத்தில் போடலாம்.

சிலர் இரண்டு நிறங்களை கலந்து ஐ ஷேடோவாகப் பயன்படுத்துவார்கள். இதுவும் இயற்கையான நிறத்தை ஏற்படுத்தும். அவ்வாறு செய்யும்போது, கை விரல்களைக் கொண்டு ஐ ஷேடோ போடலாம். இதனால் உங்களுக்கு விருப்பமான இடத்தில் மட்டும் போடுவதற்கு வசதியாக இருக்கும். இப்போதுதான் மிக முக்கியமானதான ஐ லைனரை போடவேண்டும்.

ஐ லைனர் போடுவது கண்களின் அழகை இருமடங்காக்கும். எனவே, விலை குறைந்த மலிவான ஐ லைனரை விட, சற்றுத் தரமான ஐ லைனரை பயன்படுத்துவது நல்லது. இதனால், விரைவாக அழிவது, வியர்வையில் கரைவது போன்றவற்றை தவிர்க்கலாம்.

ஒரு இமையை மூடி இமை முடிகளை கைகளால் முகத்தில் அழுத்தி பிடித்துக்கொண்டு ஐ லைனரை போடலாம். இதனால், இமை அசைந்து ஐ லைனர் கோணலாகும் வாய்ப்பு தவிர்க்கப்படும்.

பிறகு, கீழ் இமைகளுக்கு ஐ லைனரை போடவும். மஸ்கரா, இது கண்களுக்கான இறுதிக்கட்ட மேக்கப் ஆகும். கண் இமைகளை நன்கு சுருட்டிவிட்டு மஸ்கரா போடவேண்டும். மேலும், கண்களை நன்கு திறந்தபடியும் அல்லாமல், மூடியபடியும் அல்லாமல், பாதி திறந்தநிலையில் மஸ்கராபோட்டு சிறிது நேரம் கண்களை இமைக்காமல் வைக்கவேண்டும்.

அவசரப்பட்டு இமைத்துவிட்டால், மஸ்கரா கண் இமைக்கு மேல் ஒட்டிக்கொள்ள வாய்ப்பு உண்டு. இவ்வாறு எளியமுறையில் கண்களுக்கு மேக்கப் செய்துகொண்டால் பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

## பிங்கர் பிஷர்



**தேவையானவை**

வஞ்சர மீன் - 1/2 கிலோ (முள், தோல் நீக்கி விரல் வைக்கவும் வெட்டிவாங்கவும்) இஞ்சி, பூண்டு விழுது - 1 மேசைக்கரண்டி, மிளகாய்தூள் - 1 மேசைக்கரண்டி, மஞ்சள் தூள்-1/2 கரண்டி, சோளமா - 3 மேசைக்கரண்டி, முட்டை - 2 எலுமிச்சை சாறு - 2 கரண்டி, எண்ணெய் - பொரிக்க உப்பு - தேவையான அளவு

**செய்முறை:** மீனை சுத்தம் செய்து மேலே குறிப்பிட்ட எல்லா பொருட்களையும் சேர்த்து நன்றாக பிரட்டி 1 மணிநேரம் ஊறவைக்கவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி மீனை கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். சூடாக பரிமாறவும்.

---

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-449

**கேள்வி: கண்களின் அழகை அதிகரிக்கத் தேவையானவை எவை?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 22. 12. 2014

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 449
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 447 இற்கான விடை :-
**எலன் ஜோன்சன் சேர்லீப்**
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
எம்.காமினி,
தென்னக்கும்புர, கண்டி.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

449

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
..............................
கையொப்பம் : ..............................




## புதுமையாக்கம் ஊடாக

# நிலைத்திருக்கும் அபிவிருத்தி!

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கல்வி, கட்டமைப்பு, உட்கட்டமைப்பு, உள்ளிட்ட அனைத்து துறைகளினதும் அபிவிருத்திகள் எதிர்கால கிழக்கின் கல்விப் பொருளாதார மேப்பாடுகளில் பெரும்பங்காற்றும் என்றால் அது குறைவில்லாத வார்த்தையாகும். ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு கல்வித் துறை எவ்வளவுக்குப் பங்காற்றுகிறது என்பதற்கு அப்பிரதேசத்தின் பல்கலைக்கழகம் பதில் சொல்வதாகவே இருக்கவேண்டும். அதில் இந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடும் ஒரு மைல்கல்லாகும்.**

கிழக்குப் பல்கலைக்கழகமானது கடந்த சில வருடங்களாக பல வளர்ச்சிப் படிகளை அடைந்துவருகிறது. அந்தவகையில் கடந்தவாரத்தில் நடைபெற்ற புதுமையாக்கம் ஊடாக நிலைத்திருக்கும் அபிவிருத்தி (Sustainable Development through Innovations) என்ற தொனிப்பொருளில், நடைபெற்ற 3ஆவது சர்வதேச ஆய்வாளர்கள் மாநாடு முக்கியமானது ஆகும்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் 4ஆம் திகதி நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் இந்த ஆய்வு மாநாடு நடைபெற்றது.

இந்நிகழ்வு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தலைமையில் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக மதுரை காமராஜர் பல்கலைகழக (நாட்டுப்புறவியல் துறை) பேராசிரியர் இருளாண்டி முத்தையா கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வின் பிரதான உரையினை மொறட்டுவ பல்கலைக்கழக தகைசார் பேராசிரியர் தயானந்த எஸ்.விஜயசேகர நிகழ்த்தினார். அத்துடன் நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது சர்வதேச ஆராய்ச்சி மகாநாடு வெள்ளிக்கிழமை நிறைவுபெற்றது.

இம்முறை, விவசாயம் மற்றும் உணவு ஊட்டச்சத்து, பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், வியாபாரம் மற்றும் தொழிற்துறை, காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச் சூழல், மருத்துவம், மனித நலன் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை இவ்வருட மாநாட்டில் சமர்ப்பித்தனர்.

இதற்கிணங்க விவசாயம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பாக பதினைந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிக்கை செய்யப்பட்டன.

பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள், வியாபாரம் மற்றும் தொழிற்துறை சார்ந்து ஏழு ஆராய்ச்சிக் கட்டுரைகள், மருத்துவம் தொடர்பாக பத்தொன்பது ஆய்வுக் கட்டுரைகள் ஒன்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் , மனிதநலன் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் சார்பாக நாற்பத்தி இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மனித நலன் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் தொடர்பாக அறிக்கை செய்யப்படவுள்ள ஆய்வுக்கட்டுரைகளில் கல்வி, மெய்யியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், நுண்கலை, பொருளியல், மொழி, நாடகமும் அரங்கியலும், சமூகவியல், வரலாறு ஆகிய துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளும் உள்ளடங்கியுள்ளன.

இவ்வாய்வுக் கட்டுரைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டுள் ளதுடன், துறைசார்ந்து நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர்களால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள்மூலம் பெறப்பட்ட முடிவுகளை முன்னிலைப் படுத்துகின்றன.

இம்மகாநாடு தேசிய, சர்வதேசிய மட்டத்திலுள்ள அறிவியலாளர்கள், புலமையாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர் கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை அரங்கப்படுத்துவதற்கு களத்தினை அமைத்துக் கொடுத்திருப்பதுடன், இவ்வாறான புலமைசார் ஆராய்ச்சியின் மூலம் கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் தேசிய அபிவிருத்திக்கும், பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் தனது பங்களிப்பினை நீடித்துக் கொண்டுள்ளது.

இலங்கையில் கடந்த 30 வருடங் களாக நடைபெற்ற யுத்தம் மக்களது வாழ்க்கை, பொருளாதாரம், கல்வி என அனைத்துத் துறைகளையும் சிக்கலுக்குள் தள்ளியது என்பதனையும் விட நாசமாக்கிறது என்றே சொல்ல வேண்டும். அவற்றில் நல்லவிதமான மாற்றம் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதன் பின்னரே உருவாகத் தொடங்கியது.

இவ்வாறான சிக்கல்களில் சிக்காமல் கிழக்குப் பல்கலைக்கழகம் தப்பியிருக்கவில்லை. ஆனால், யுத்தம் நிறைவடைந்து அதன்பின்னர் உருவான புதிய நிருவாகக் கட்டமைப்புகள் அப்பல்கலைக் கழகத்தினை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்சென்றது.

**- கிழக்கான் -**

ஒரு கல்விச்சாலையில் முரண்பாடு களையும், அரசியல் பேதங்களையும் உருவாக்கி குழப்பங்களை ஏற்படுத்தி விட நினைக்கும் ஒவ்வொருவரும் தமது சமூகம் வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்கமைவாக பல்வேறுபட்ட முயற்சிகளின் பயனாக கிழக்குப் பல்கலைக்கழகம் சிறந்ததொரு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

தமிழ்பேசும் என்றும் சிங்களம் பேசும் என்றும் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடை பெற்றுக் கொண்டிருந்தாலும், சிங்கள, முஸ்லீம், தமிழ் மாணவர்கள் ஒற்றுமையாகக் கல்வி கற்று வருகின்றனர்.

பல்கலைக்கழகம் என்பது கல்வி நிலையில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பதாகும். அந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு கல்வியாளர்களையும், புத்திஜீவிகளையும் கொண்டிருப்பதுடன், உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. கிழக்குப் பல்கலைக்கழகம் என்பது, வந்தாறுமூலையில் உள்ள பிரதான பல்கலைக்கழகம், திருகோண மலையிலுள்ள வளாகம், கல்லடியில் உள்ள விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், அரசடியிலுள்ள சௌக்கிய பராமரிப்பு பீடம் என்பவற்றினை உள்ளடக்கியதாகும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்திகளோ, பௌதீக அபிவிருத்தி களோ சிறப்பாக அமைந்திருக்க வில்லை. ஆனால் யுத்தம் நிறைவு பெற்றபின்னர் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

புதிய உபவேந்தரர் கலாநிதி கிட்னன் கோபிந்தராஜா நியமிக்கப்பட்ட பின்னர் பெரியளவான அபிவிருத்தி களும், ஜனாதிபதியின், அரசாங்கத்தின் நேரடி ஆசீர்வாதத்தில் அனைத்து விதமான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. தற்போதுகூட பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை விரைவில் ஜனாதிபதியால் திறந்தும் வைக்கப்படவுள்ளன.

அந்தவகையில், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் கல்வி, கட்டமைப்பு, உட்கட்டமைப்பு, உள்ளிட்ட அனைத்து துறைகளினதும் அபிவிருத்திகள் எதிர்கால கிழக்கின் கல்விப் பொருளாதார மேப்பாடுகளில் பெரும்பங்காற்றும் என்றால் அது குறைவில்லாத வார்த்தையாகும். ஒரு சமூகத்தின் மேம்பாட்டுக்கு கல்வித் துறை எவ்வளவுக்குப் பங்காற்றுகிறது என்பதற்கு அப்பிரதேசத்தின் பல்கலைக் கழகம் பதில் சொல்வதாகவே இருக்க வேண்டும். அதில் இந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாடும் ஒரு மைல் கல்லாகும்.

இந்த ஆராய்ச்சி மாநாட்டில், கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு பங்களிப்பினை வழங்கி வரும் விரிவுரையாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இது ஒரு வகை யான மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில், கல்வியாளர்கள் சிறப்பான சிந்தனைகளை உருவாக்கக் கூடியவர்கள். பௌதீக அபிவிருத்தி மற்றும் உள்ளக அபிவிருத்தி பலவற்றினை அவர்களால் நிகழ்த்தமுடியும்.

ஆராய்ச்சி மாநாடுகள் எப்போதும் எதிர்கால சந்ததியினருடைய முன் னேற்றம் சார்ந்தும் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். வெறுமனே ஆய்வுகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்துவிட்டு அவற்றின் பிரயோசனங்கள் பற்றியும் தொடர்ச்சி பற்றிய எண்ணமும் இல்லாமல் இருந்துவிடக்கூடாது.

மொத்தத்தில், கிழக்கின் எதிர்கால அபிவிருத்தி, மேம்பாடுகளுக்கு சான்றாகவும் வழிகாட்டியாகவும், இம்முறை நடைபெற்ற கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 3ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு அமையவேண்டும் என்பதுடன், தொடர்ந்தும் இவ்வாறான முயற்சிகள் மக்கள் நலன்சார்ந்தும் பிரதேசத்தினதும் நாட்டினதும் எதிர்கால முன்னேற்றம் சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். ■

**ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி நாட்டில் கலவரமொன்றினை ஏற்படுத்த பலர் முயற்சிக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்தினால் நாட்டில் ஜனநாயக ஆட்சியொன்று ஏற்படும் என எதிரணியினர் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தில் உள்ள ஒருசிலர் இன்று வெளிநாட்டு கறுப்புப் பணத்திற்கும் வெளிநாட்டு கொள்கைப் பத்திரத்திற்கும் அடிமையாகிவிட்டனர். யாரை ஆதரித்தால் நாடு காப்பாற்றப்படும் என்பதை மக்கள் அறிவுபூர்வமாக சிந்திக்கவேண்டும்.**

# பொதுபலசேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 34

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



### யார் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றாலும் அது பௌத்த பிக்குகளை பாதிக்காது - ஞானசாரர்

இம்முறை ஜனாதிபதி தேர்தல் மிகவும் தீர்மானம் மிக்கது. மக்கள் மதிநுட்பத்துடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

யார் தேர்தலில் தோற்றாலும் அது பௌத்த பிக்குகளை பாதிக்காது. நாட்டை பிளவுபடுத்தும் சதித் திட்டத்தை முறியடிக்கவேண்டும்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கிறார்கள். பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 03 ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

நாட்டில் நிலவும் அரசியல் குழப்ப நிலைமையைப் பயன்படுத்தி சிலர் தங்களது நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

சந்திரிக்கா குமாரதுங்க, மைத்திரி என்ற பெயரைப் பயன்படுத்தி அகே வைரய திரைப்படத்தின் மூன்றாம் பாகத்தை அரங்கேற்ற முயற்சிக்கின்றார்.

(அகே வைரய என்ற திரைப்படம் வயது வந்தவர்களுக்கு மட்டுமான ஓர் திரைப்படமாகும். பாலியல்ரீதியாக வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் ஆண்களை பழிவாங்குவதே இந்தத் திரைப்படத்தின் கதைப் பின்னணியாகும். இந்த திரைப்படம் பற்றியே கலகொடத்தே ஞானசார தேரர் செய்தியாளர் சந்திப்பில் உதாரணம் காட்டினார்.)

அரசிலிருந்து வெளியேறிய ஜாதிக ஹெல உறுமய கட்சியைப் பற்றியும் ஞானசாரர் விமர்சித்தார். நாட்டை பாதுகாத்த தலைவரை சிறைப்படுத்தி வெளிநாட்டு சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கப்படுகின்றது. இதற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி துணை போகின்றது.

ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொள்ளாது நாடாளுமன்றத் தேர்தலை கருத்திற்கொண்டு தீர்மானம் எடுத்துள்ளது ஜாதிக ஹெல உறுமய கட்சி. அக்கட்சியின் தீர்மானம் அரசியல் ரீதியானது. ராஜபக்ஷ பற்றி நல்லதோ, கெட்டதோ தெரிவிக்கக்கூடிய காலம் இதுவல்ல எனவும் ஞானசாரர் தெரிவித்தார்.

### தமிழ், முஸ்லிம் தீவிரவாத சக்திகளில் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும் - பொதுபலசேனா

சர்வதேச சூழ்ச்சி வலையில் நாடும், நாட்டு மக்களும் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். தமிழ், முஸ்லிம் தீவிரவாத சக்திகளில் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டுமாயின் தனித்துவமான தலைமையினை மக்கள் ஆதரிக்க வேண்டும், மைத்திரிபாலவின் கூட்டணியினை ஆதரித்தால் 1915 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள, முஸ்லிம் கலவரத்தைப் போல் 2015ஆம் ஆண்டிலும் மிகப்பெரிய கலவரமொன்று ஏற்படும் எனப் பொது பலசேனா எச்சரித்துள்ளது.

பொதுபலசேனா பௌத்த அமைப்பின் சங்க சம்மேளன மாநாடு 05ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் இடம்பெற்றது. இங்கு அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி நாட்டில் கலவரமொன்றினை ஏற்படுத்த பலர் முயற்சிக்கின்றனர். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்தினால் நாட்டில் ஜனநாயக ஆட்சியொன்று ஏற்படும் என எதிரணியினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்திற்கு போட்டியாக களமிறங்கியுள்ள பொது எதிரணியின் கொள்கைப் பத்திரம் சர்வதேசத்தின் பிரிவினைவாத கோட்பாட்டினை ஒத்ததாகவே உள்ளது.

அரசாங்கம் யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்ததையடுத்து இந்த நாட்டில் அபிவிருத்தி மற்றும் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளது. ஆட்சி மாறினால் நிலைமை மாற்றமடைந்து மீண்டும் குழப்பகரமானதொரு சூழ்நிலை ஏற்படும்.

யாரை ஆதரித்தால் நாடு காப்பாற்றப்படுமென்பதை மக்கள் அறிவுபூர்வமாக சிந்திக்கவேண்டும். அரசாங்கத்தில் உள்ள ஒருசிலர் இன்று வெளிநாட்டு கறுப்புப் பணத்திற்கும் வெளிநாட்டு கொள்கைப் பத்திரத்திற்கும் அடிமையாகிவிட்டனர்.

மறுபுறம் நாட்டில் முஸ்லிம் தீவிரவாத செயற்பாடுகளும் தமிழ் பிரிவினைவாத மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகள் பரவி வருகின்றன.

இந்த நாட்டில் 1915 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரம் மிகப் பெரிய விளைவினை ஏற்படுத்தியது.

அந்தக் கலவரத்தினைவிட பல மடங்கு பெரிய மிகமோசமான இனக் கலவரங்களை ஏற்படுத்துவதே இப்பொழுது பொது எதிரிகளின் நோக்கமாகும்.

மைத்திரிபால சிறிசேனவின் பின்னணியில் முழுமையாக செயற்படுவது பிரிவினைவாதிகளும் இஸ்லாமிய, கிறிஸ்தவ தீவிரவாதிகளுமேயாவர்.

இவர்களின் கைகளில் நாடு செல்லுமாயின் வெகுவிரைவில் சிங்கள பௌத்த இனம் அழிந்துவிடும்.

எனவே, 1915ஆம் ஆண்டு கலவரத்தைப் போல் 2015 ஆம் ஆண்டில் ஒரு இனக்கலவரம் வருவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. இந்த நாட்டின் சிங்கள, பௌத்த தன்மையினை காப்பாற்றவும் நாட்டில் மக்களை காப்பாற்றவும் நாம் இம்முறைத் தேர்தலை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

வீட்டில் சண்டை, சச்சரவுகள் ஏற்படுவது வழக்கமானது. அதற்காக வீட்டையாரும் எரிப்பதில்லை. அதேபோல் அரசாங்கத்தினால் பல குழப்பங்கள் வரலாம். அதற்காக நாட்டை காட்டிக் கொடுத்து துரோகம் விளைவித்துவிடக் கூடாது எனவும் ஞானசாரர் குறிப்பிட்டார்.

### நாட்டின் நல்லாட்சி சீர்குலைந்தமைக்கு பயங்கரவாதமே காரணம் - கோத்தபாய

நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படாமையினால், இன்று நாட்டின் நல்லாட்சி சீர்குலைந்துள்ளது என பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த 04 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், “அரசாங்க மற்றும் தனியார் துறைகளின் வேலைத்திட்டங்கள், சரியான திட்டமிடலின்கீழ் கொண்டு செல்வதன்மூலமே நல்லாட்சியை ஏற்படுத்தமுடியும். நல்லாட்சி இல்லை என்றுகூறி, அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதால் எவ்வித அர்த்தமும் இல்லை” என அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நல்லாட்சி சீர்குலைந்தமைக்கு பயங்கரவாதமே பிரதான காரண-மாக அமைந்தது. அரச மற்றும் தனியார் துறைகளில் நடைமுறைரீதியான செயற்பாடுகள்மூலம் நல்லாட்சியை கட்டியெழுப்பவேண்டும் என பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மேலும் கூறினார்.

### ஜாதிக ஹெல உறுமயவால் சிறுபான்மை இனங்களுக்கு அச்சுறுத்தல் - அமைச்சர் விமல் வீரவன்ச

இனவாதிகளென எம்மை விமர்சிக்கும் எதிரணியினர் இன்று சிறுபான்மை மக்களுக்கு எதிரான வகையிலேயே தமது ஆட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவினரை பொது எதிரணியில் இணைத்திருப்பது சிறுபான்மை மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனத் தெரிவித்திருக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச சிறுபான்மை மக்கள் மிகச்சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொது எதிரணியின் தேர்தல் நகர்வுகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கம் இனவாதத்தை தூண்டுவதாகவும் சிறுபான்மை மக்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவதாகவும் எதிரணியினர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் நாட்டில் ஆயுதப்போராட்டம் ஒன்று இடம்பெற்றபோது புலிகளின் பயங்கரவாதத்தின் பக்கம் வடக்கு மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டு ஆயுதமேந்த வைக்கப்பட்டனர்.

கிழக்கு முஸ்லிம்கள் புலிகளினால் கொல்லப்பட்டனர். அவ்வாறானதொரு சூழ்நிலையில் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களை காப்பாற்றியது நாங்கள்தான்.

ஐக்கிய தேசியக் கட்சி 2004ஆம் ஆண்டு புலிகளுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டபோது நாடு சீரழியும் அபாயம் நிலவியது. அவ்வாறானதொரு நிலையில் புலிகளுடன் போராடி நாட்டை ,மீட்டெடுத்தது நாங்களே.

ஆனால் இன்று எம்மை இனவாதிகளாக சித்தரித்து மக்களை எமக்கு எதிராக திசை திருப்புகின்றனர்.

இன்று பொது எதிரணியினர் தமது இனவாதக் கொள்கையில் அவர்களின் செயற்பாடுகளை முன்வைக்கின்றனர். சிறுபான்மை சமூகம் பொது எதிரணியினரை நம்பி அவர்களுக்கு ஆதரவினை வழங்கத் தயாராகின்றது.

ஆனால் ஜாதிக ஹெல உறுமய எனும் இனவாதக் கட்சி இன்று அக்கூட்டணியுடன் செயற்பட்டு வருகின்றது என்பதை சிறுபான்மை மக்கள் மறந்துவிடக் கூடாது.

பௌத்த சிங்கள கொள்கையினை அடிப்படையாக வைத்து அவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். இவர்களை நம்பி சிறுபான்மை மக்கள் பொது எதிரணியினருக்கு வாக்களிப்பது அச்சுறுத்தலாகவே அமையும்.

எனவே தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் மிகத் தெளிவான சரியான முடிவினை எடுத்து தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் எதிர்காலம் கேள்விக்குறியாகவே அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### நாட்டின் சுதந்திரத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பங்கிருக்கிறது - முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன

யுத்தம் முடிவுக்கு வந்ததும் நாட்டு மக்கள் எதிர்பார்த்திருந்த எதிர்பார்ப்புகள் எதுவும் நிறைவேறவில்லை. நாட்டில் சமயங்களுக்கு எதிரான சம்பவங்களே நடந்து கொண்டிருக்கின்றன என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், நான் நாட்டில் இல்லாதபோது அளுத்கமையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்றன. யுத்தத்தின்பின் சமாதானம் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்தும் தமிழர்கள் பாதைகள் கேட்கவில்லை. அபிவிருத்தி கேட்கவில்லை. தொழில் கேட்கவில்லை. உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழலையே கேட்கிறார்கள்.

முஸ்லிம்கள் நாட்டுப்பற்றுடையவர்கள். அவர்கள் இங்கு தனியாக வந்து எமது பெண்களை மனைவியாக்கிக் கொண்டார்கள்.

முஸ்லிம்கள் எமது சகோதரர்கள் நாட்டின் சுதந்திரத்தை சிங்களவர்கள் மாத்திரம் தனித்துப் பெற்றுக் கொள்ளவில்லை.

நாட்டின் சுதந்திரத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பங்கிருக்கிறது. எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டும்.

(தொடரும்)

# கோப்பி அருந்துபவரா?



கோப்பியில் பொதுவாகக் காணப்படும் இரசாயனம் ஒன்று உடல் எடை கூடுவதைத் தடுப்பதுடன், உடல் பருமன் தொடர்பான நோய்களையும் எதிர்ப்பதாக புதிய ஆய்வு ஒன்று கோரியுள்ளது.

அந்த இரசாயனம் குளோரோஜெனிக் அமிலம் ஆகும். இது இன்சுலின் தடுப்பைக் குறைப்ப தோடு, ஈரலில் கொழுப்பு சேர்வதையும் தடுப்பதாக எலிகளிடத்தில் மேற்கொண்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக இந்த ஆய்வு கோரியுள்ளது.

குளோரோஜெனிக் அமிலம் அழற்சியையும் குறைப்பதாக இந்த ஆய்வின் தலைவர் யாங்ஜி மா என்பவர் தெரிவித்துள்ளார்.

உடல்பருமனின் பிரதான விளைவுகள் இரண்டு: உடல் எடைகூடுவது ஒருபுறம் இருந்தாலும், அதிகரிக்கும் இன்சுலின் தடுப்பு மற்றும் ஈரலில் கொழுப்பு சேர்வது ஆகிய இரண்டும் மிக முக்கியமான விளைவுகளாகும்.

இந்த ஆய்வாளர்கள் எலிகள் சிலவற்றிற்கு உயர் உ கொழுப்பு உணவுகளை 15 வாரங்களுக்கு கொடுத்ததுடன், குளோரோஜெனிக் அமிலத்தையும் வாரம் இருமுறை ஊசிமூலம் செலுத்தியுள்ளனர். அப்போது குளோரோஜெனிக் அமிலம் உடல் எடைகூடுவதை தடுத்ததுடன், இரத்தத்தில் சீனியின் அளவை சகஜ நிலையில் வைத்திருந்ததும், ஈரலின் ஆரோக்கியமும் பாதுகாக்கப்பட்டதாகவும் கண்டறிந்தனர்.

சாதாரணமாக மனிதர்கள் உட்கொள்ளும் கோப்பி மற்றும் பழங்கள், காய்கறிகள் அளவைக் காட்டிலும் அதிக அளவிலான குளோரோஜெனிக் அமிலம் எலிகளுக்கு கொடுக்கப்பட்டது.

இதற்காக மக்கள் அதிகளவில் கோப்பி குடிக்க வேண்டும் என்று நாங்கள் அறிவுறுத்துவதாக நினைத்து விடக்கூடாது. ஆனால், ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மாறுபவர்களிடத்தில் குளோரோஜெனிக் அமிலம்மூலம் உடல் எடை, மற்றும் பருமன் பிரச்சினைகளுக்கு பயனுள்ள சிகிச்சையை வளர்த்தெடுக்க முடியும் என்றே கூறுகிறோம் என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# குறைகிறது ஞாபக சக்தி!



இரவு வெகுநேரம் கழித்து சாப்பிடுவோருக்கு ஞாபகசக்தி குறைவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வழக்கமான நேரத்தில் சாப்பிட்டு, தூங்கும் சுண்டெலி ஒன்றின், உணவு நேரம் மாற்றப்பட்டது. அதன்பின்னரும், சுண்டெலியிடம் எந்த மாற்றமும் தென்படவில்லை. அதன் தூக்கம், எடை உள்ளிட்டவை சீராக இருந்தன. ஆனால், அதற்கு ஏற்கனவே அறிமுகமான ஒரு பொருளை காண்பித்தபோது, அதை உடனடியாக அடையாளம் காணமுடியாமல், சுண்டெலி தயங்கி நின்றது.

அதேசமயம், வழக்கமான நேரத்தில் உண்டு, உறங்கிய மற்றொரு எலி, அந்த பொருளை உடனடியாக ஓடிச்சென்று தூக்கியது. மற்றொரு சோதனையில், அச்சமூட்டும் ஒரு பொருளை கண்டு இரு எலிகளும் பயப்பட்டன.

அதன்பின், சில நாட்கள் கழித்து, நேரம் கழித்து உணவு உண்ட எலியிடம் மீண்டும் அந்த பொருள் காண்பிக்கப்பட்டது. அப்போது, அந்த எலி முன்போல் அச்சமடையவில்லை. ஞாபகமறதி காரணமாக, குறிப்பிட்ட பொருள்மீதான அச்சம் குறைந்திருந்தது.

அதேசமயம், நேரம் தவறாமல் உணவு உண்டு வந்த எலியிடம், அந்த பொருளை காட்டியதும்; பீதியில் அலறி ஓடியது. இதில் இருந்து, இரவில் தாமதமாக சாப்பிட்டால் மூளையில் சேமிக்கப்பட்ட, பதிவுகள் பாதிக்கும் என்பது நிரூபணமாகியுள்ளது.



# தொடரும் சவால்!

எச்.ஐ.வி வைரஸ் வரவர தீவிரம் குறைந்துவருவதாக முக்கிய விஞ்ஞான ஆய்வு ஒன்று கூறுகிறது.

அந்த ஆய்வின்படி, எச்.ஐ.வி வைரஸானது தான் உயிர்வாழ்வதற்காக மேற்கொள்ளும் உயிரியல் மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக எயிட்ஸ் நோயை ஏற்படுத்த நீண்டநாட்கள் பிடிக்கிறது என்று அந்த விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளது. இந்த முடிவுகள் ஓரளவு ஊக்கத்தை தந்தாலும், இன்னமும் இந்த வைரஸ் ஒரு குணப்படுத்த முடியாத சவாலாகவே தொடர்வதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.



அளவெட்டி, ப. உதயகுமார்

வாரமொரு சிறு கதை

# இணைய முடியாத தண்டவாளங்கள்

**"எனக்கொரு மணிப்புறா**
**ஜோடி என்று இருந்தது**
**தனக்கொரு துணை வர**
**நீண்ட தூரம் பறந்தது**
**மனமெல்லாம் அந்த நினைவுதான்..."**

மன ஆறுதலுக்காக தொலைக்காட்சி நிகழ்வொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த நிகழ்ச்சி முடிந்து அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்பாக இந்தப் பாடல் ஒளிப்படமாக திரையிலே தோன்றியது.

இந்தப் பாடல் என்னை சித்திரவதை ய்ட்டியது. அவளுடைய ஞாபகங்களை மூட்டை கட்டிவைக்க முயன்று தோற்றுப் போனவன் நான். காதல் என்பது இரண்டு இதயங்கள் சங்கமிக்கும் வகுப்பறை. கண்ணும் கண்ணும் பேசிக்கொண்டு அன்பை நேசிக்கும் பள்ளிக்கூடம், என்றுதான் என் காதலையும் நேசித்தேன்.

பெண்களின் இதயம் பு்ப்போன்றது, மென்மையானது என்றெல்லாம் வர்ணித்து கவிதையும், கதையும் எழுதிய நான் இன்று எல்லாவற்றினையும் வெறுத்து பெண்கள் இரக்கமற்ற அரக்கர்கள். (என் காதலியை மட்டுமே இவ்வாறு இரக்கமற்ற இதயம் கொண்டவள் என்று எழுதுகின்றேன்.) என்று எண்ணி என் மனம் வெம்பி வெதும்பி கண்ணீர வடித்துக் கொண்டிருக்கிறேன்.

காதல் என்பது ஒரு பொய்வேஷம் என்று என் மனம் இன்று கல்லாகிவிட்டது. 'அவள் என்னை ஏமாற்றுவாள் என்று கனவில்கூட எண்ணியிருக்கவில்லை. நான் ஏழை என்பதனால் என்னை எளிதாகவே கழற்றிவிட்டு சென்றுவிட்டாள். காதலுக்கு சாதி, மத பேதம் இல்லை என்று சும்மா வெறும் பேச்சுக்காக மட்டுமே சொல்கின்றனர். இல்லை என்றால் என் அன்பின் ஆழம்புரியாமல், என்னை நட்டாற்றில் தவிக்கவிட்டிருப்பார்களா??

அந்தக் கொடியவளின் நினைவுகளால் நான் என்னையே இழந்துவிட்டேன். தாடி வைத்து தண்ணி அடித்து திரிய என்னால் முடியவில்லை. நான் ஒரு கௌரவமான அரச பணியாளன் என்பதால் தாடியும் தண்ணியும் எனக்குத் தூரமாகியது. மனம் அழுகின்றது... இதயம் அவளை எண்ணி அழுகின்றது. மனதுக்குள் எல்லாவற்றினையும் பு்ட்டிவைத்து மௌனமாக அழுதுகொண்டு இருக்கிறேன்.

முடிந்துபோன காதலுக்கு மூன்று வயதாகிவிட்டது. மூன்று வருடங்களாகவே நிம்மதியை இழந்துவிட்டேன். பெண்களுக்கு காதல் என்பது இலகுவான காரியமாக இருக்கலாம். ஆண்களுக்கு அதுதான் அத்திபாரமாக உள்ளது.

சமூகம் என்னை எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்த்தது. பெரிய எழுத்தாளனாக வருவான் என்று ஆசீர வதித்து நின்றதுயூ முடிந்துபோன காதலுடன் என் எழுத்துப் பணியும் குறைந்துவிட்டதுயூ பேனாவை எடுத்து கவிதையோ, கதையோ எழுத முற்பட்டால் அந்தப் பாவி என் கண்முன் வந்துநின்று சிரிக்கிறாள்போல் தோன்றும். தோற்றுப்போன என் காதலின் ஞாபகங்கள் வந்து என்னை சித்திரவதை செய்யும். அதனால் இப்போது எழுதுவதனை யும் பெருமளவு குறைத்துவிட்டேன். காதலில் விழுந்தாலும் கவிதை வரும், தோற்றலும் கவிதைவரும். தோற்றுப்போன என் காதலைப் பற்றி கவிதைகளும், கதைகளும் எழுதி உள்ளேன். ஆனாலும் நான் அதை பத்திரிகைகளுக்கு அனுப்புவதில்லை. மீண்டும் ஒரு பிரிவை தாங்கக்கூடிய சக்தி என்னிடம் இல்லை.

மூன்றாண்டுகளுக்கு முன்பதாக எழுத்து உலகிலே எனக்கென்று ஒரு இடத்தை வைத்திருந்தேன். வாரம்தோறும் வெளிவரும் வார இதழ்கள் பலவற்றுக்கு ஆக்கங்களை எழுதிக் கொண்டிருந்தேன். என் எழுத்துக் கள் மூலம் நிறைய வாசகர்களுக்கு சொந்தக் காரனானேன். வாசகர்களின் பாராட்டு மழையிலே நனைந்தவாறு தொடர்ந்து எழுதினேன். ஒரு வாரம்கூட தவறாமல் என் ஆக்கங்கள் வெளிவந்தவண்ணமிருந்தது.

என்னுடைய எழுத்துக்களைப் பாராட்டி நிறைய கடிதங்கள் வரும். அப்படி அறிமுகமான ஒருத்திதான் அமீனா.

அவள் எப்படி வந்தாள், எவ்வாறு ஒட்டிக்கொண்டாள் என்பதை உங்களுக்கு சொல்லவேணும். அதுக்காக உங்கள் எல்லோரையும் மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்கின்றேன். பழைய நினைவு அலைகளால் அள்ளிச் செல்லப்படுகின்றேன்.

☆☆☆☆☆☆☆☆

அப்போது ஏ.எல். பரீட்சை எழுதிவிட்டு முடிவுகளுக்காக காத்திருந்த காலம். பரீட்சை முடிவுகள் வெற்றியாக அமையும் என்பது என் நம்பிக்கை. ஆனாலும் மேற்கொண்டு படிக்க குடும்ப வறுமை என்னைத் துரத்தியது. அப்பா இல்லாத குடும்பம். அம்மா கூலி வேலைக்குப் போய்த்தான் சாப்பாடு தரும் நிலை.


நாட்டுக்காக போராடப் போய் மாவீரராகி விட்ட அண்ணனும் நானும்தான் பிள்ளைகள். அண்ணாவும் இறந்துவிட்டதால் குடும்பப்பாரம் என்மீது சுமத்தப்பட்டது. எனது குடும்ப வறுமை என் எழுத்தாணிக்கு அத்திவாரமானது. நிறைய எழுதினேன். காதல், தோல்வி, வறுமை, பெண்களுக்கு எதிரான வன்முறை, சமூகங்களிலே புரையோடியிருக்கக்கூடிய விடயங்கள் எனக் கருப்பொருளாகியது. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பன எழுதினேன்.


பாராட்டுக்கள் குவிந்தன. நிறையக் கடிதங்கள் வந்தன. ஒவ்வொருவரும் என் எழுத்தின் ஆழங்களை வார்த்தைகளாக்கி வர்ணித்தனர். இந்த நிலையிலே ஷஇணைய முடியாத இருகோடுகள்□ என்ற ஒரு கதை வெளியானது. அது முற்றிலும் இரண்டு உள்ளங்களை வைத்து உருவாக்கிய காதல் கதை.

அந்தக் கதையைப் படித்துவிட்டு பலரும் பாராட்டத் தவறவில்லை. ஆனால், ஒருத்தி மட்டும்,

அன்பான எழுத்தாளர் இனியவனுக்கு,

உங்கள் எழுத்தின் தீவிர ரசிகை நான். நன்றாக எழுதுகின்றீரகள். அதேவேளை காதலை மதிக்கத் தெரியாத மனிசனா நீங்கள்? இரண்டு காதல் ஜோடிகளை உங்கள் கதையில் கண்ணீரசிந்த வைத்துவிட்டீர்கள்.





காதலின் தன்மை புரியுமா உங்களுக்கு? அல்லது காதலித்தாவது பார்த்தீரகளா?? இனிமேலும் இப்படியான கதைகள் எழுதினால் உங்களை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாதுயூ

இப்படிக்கு,
முகம்தெரியாத வாசகி,
அமீனா.

அமீனா ஏன் இப்படி எழுதினாள் என்று எனக்கு அதிசயமாயிருந்தது. என்னைத் திட்டி எழுதியவளின் எழுத்து எனக்கு பிடித்திருந்தது.

அவளின் துணிவு எனக்கு பிடித்துப்போனது. உடனே பதில் எழுதினேன். அந்தக் கதையிலே நான் எடுத்துக்கொண்ட கதையின் தன்மையை விளங்கப்படுத்தி கடிதம் போட்டேன். போன உடன் பதிலும் வந்ததுயூ

இப்படியாக எழுத்தின் தன்மைகள் பற்றிப் பேசினோம். பின் குடும்ப நிலவரங்கள் பற்றி எழுதினோம். நாளடைவில் மனங்கள் பற்றி சிந்தித்தோம். அதுவே காதலாக மாறியது. இத்தனைக்கும் இருவரும் முகம் காணவில்லை. முகம் காணாமல் காதலிக்கவும் செய்தோம்.

இனியவன் உங்களைப் பார்க்கவேணும். இனியும் என்னாலை இருக்கமுடியாது. எங்கை பார்க்கலாம்?? கேள்வி கேட்டு கடிதம் எழுதினாள் அமீனா.

எனக்கும் அவளை நேரிலே பார்க்க ஆசை யாகவும் ஆவலாகவும் இருந்தது. அவள் எப்படி இருப்பாள். கறுப்பா?, சிவப்பா?, அழகியா? என் மனம் ஏங்கியது. இருவரும் சேர்ந்து நாளொன்றினை தெரிவுசெய்து யாழ்ப்பாணம் பஸ் தரிப்பு நிலையத்திலே சந்திப்பது என்று முடிவுசெய்யப்பட்டது.

இருவரும் பேசிக்கொண்டதன் மூலம் யாழ்ப்பாணத்திலே சந்தித்துக்கொண்டோம். இருவருடைய கைகளிலும் கைத்தொலை பேசிகள் இருந்தமையினால் அடையாளம் கண்டுபிடிக்க இலகுவாகியதுயூ

அமீனா கறுப்பிதான். கட்டழகியாக இருந்தாள். அவளைக் கண்டநேரம் முதல் என்மனம் துடித்துக்கொண்டிருந்தது.

என்ன இனியவன் என்னை பிடிச்சிருக்கா உங்களுக்கு கேட்டாள்.

என்னைப் பிடிச்சிருக்கா உங்களுக்கு இது என் கேள்வி.

வாட்டசாட்டமான வடிவான ஆம்பிளை. உங்களை ஆரன் பிடிக்காது என்று சொல்லுவினமா??

நீங்களும் வடிவாயிருக்கிறியள். அமீனா உ உங்கடை உள்ளம்தான் எனக்குப் பிடிச்சிருக்கு

அப்பிடி எண்டால் என்னைப் பிடிக் கேல்லையா சொல்லியவள் விம்மி விம்மி அழத்தொடங்கினாள். எனக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. சும்மா விளையாட்டாக சொன்னதை தாங்கமுடியாமல் அழுதது என்னாலை தாங்கமுடியாமல் போயிற்று. அவளின் கண்ணீரை கைக்குட்டையால் துடைத்தேன். அவள் இதனை துளியேனும் எதிர்பார்த்திருக்கமாட்டாள். கண்ணீரை துடைத்தது அவளுக்கு சந்தோசமாயிருந்த தாக சொன்னாள்.

இப்படியாக நாளும் பொழுதுமாக எங்களின் காதல் செடி வேகமாக வளர்ந்துகொண்டது. கான்போனிலே காதல் இனிமை கண்டது. காலை முதல் இரவு தூங்கப்போகும்வரை அவளின் நினைவாகவே நாட்கள் ஓடிக் கொண்டிருந்தது.

அடிக்கடி இருவரும் சந்தித்துக்கொண்டோம். ஒருநாள் அமீனா தன் தோழி ஒருத்தியையும் கூட்டிக்கொண்டு என் வீட்டுக்கே வந்துவிட்டாள். என் வறுமை நிலையை நான் அமீனாவிடம் ஏற்கனவே சொல்லிவைத்தேன்.

என்ன இனியவன் நான் எப்படியோ உங்கடை வீட்டிலை வாழப்போறவள்தானே. அதுதான் வீட்டை வந்தனான் அமீனா சொன்னாள்.

அம்மாவும் வருங்கால மருமகளைக் கண்டு சந்தோசப்பட்டுக்கொண்டது எனக்கு ஆனந்தமாகியிருந்தது. காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. எங்களின் காதலுக்கும் இரண்டு வயதாகிவிட்டது. இந்தக் காதல் விடயம் எப்படியோ அமீனாவின் தகப்பனின் காதுகளுக்கு எட்டியது.

அன்று முதல் அமீனாவுடன் தொடர்பு கொள்ளமுடியாமல் போனது. கான்போன் நம்பரும் இயங்கவில்லை, அவளைக் காணாமல் தொடர்பில்லாமல் தவித்தேன், துடித்தேன். இரண்டு வாரங்கள் ஓடி ஒழிந்துவிட்டது.

அமீனாவுடன் என் வீட்டுக்கு வந்த அவளின் தோழியை நாடினேன். விடயத்தை சொல்லி அவள் அமீனாவின் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு பதிலுக்காகக் காத்திருந்தேன்.

சொரி இனியவன் அண்ணா. இனிமேலும் நீங்கள் அவளை எண்ணிக் கொண்டிருக் காமல் உங்கடை வேலையைப்பாருங்கோ. அவளுக்கும் லண்டன் மாப்பிள்ளைக்கும் கல்யாணம். வாற கிழமை அமீனா கொழும்புக்கு போறாள்

அமீனாவின் தோழி சொன்ன விடயங் களைக் கேட்டு என்னையே நான் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துகொண்டிருக்கிறேன். பணம் படைத்தவள் என்னை எளிதாகவே விட்டுவிலகி ஓடிவிட்டாள்.

இனியவன், இனியவன் கூப்பிட்டபடி வந்தாள் என் அம்மா அம்மாவின் குரல் என்னை பழைய நினைவுகளிலிருந்து மீட்டெடுத்தது.

நானும் கேட்டுக்கொண்டே இருக்கிறன். நீ இப்படியே இருந்து என்னதான் செய்யப் போறாய்?? இந்தக் கலியாணத்தையாவது வேண்டாம் எண்டு சொல்லாதை. அம்மாவுக் காக நல்ல முடிவைச் சொல்லு அம்மா மன்றாடினாள்.

அமீனா என்னை விட்டுப்போய் மூன்று வருடம் முடிந்து விட்டதுயூ எனக்காக இல்லாவிட்டாலும் அம்மாவின் மனது ஆறுதலுக்காக மாமாவின் மகளைக் கலியாணம் கட்ட சம்மதம் தெரிவித்தேன்.

அம்மாவின் முகத்திலே உண்டான மகிழ்ச்சியை எப்பிடிப் சொல்வது?? அம்மா உடனடியாகவே கலியாண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பத்திரிகை எடுப்பதற்காக கடைநோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

இனியவன்... இனியவன் நில்லுங்கோ. ப்ளீஸ் நில்லுங்கோ அழைப்புவந்த குரல் பெண்குரல். அந்தக் குரல் எனக்கு பழக்கமான குரல் போல்தெரிய. குரல்வந்த திசையைப் பார்த்தேன் அவள் வேறு யாருமில்லை அமீனாதான்.

இனியவன் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ

உன்னோடை எனக்கென்ன கதைக்க வேண்டிக் கிடக்குது

நான் உங்களை ஏமாத்திப்போட்டன் எண்டு நீங்கள் நினைக்கிறியள். உண்மை அது இல்லை. ஏமாத்தினது என்ரை அப்பா தான். உங்களுக்கு வேறை இடத்திலை கலியாணம் நடக்கப்போகுது என்று அப்பா எனக்குச் சொன்னார். உங்களைப் பற்றித் தப்புத் தப்பாக சொல்லி என்னை லண்டனுக்கு அனுப்பிவைச்சார். நான் துடியாய் துடிச்சன். லண்டனுக்குப் போய் அக்காவேடை இருந்தன்.

என்னை இனிமேலும் நம்ப வைக்கலா மெண்டே நினைக்கிறாய். என்னை நம்ப வைச்சு ஏமாத்தின துரோகி வார்த்தைகள் எல்லைமீறி வெளிவந்தது. என்னைத் திட்டுங்கோ, அடியுங்கோ. நான் துரோகி இல்லை.

வெளிநாட்டுக்குப் போயும் உங்கடை நினைவோடைதான் இருந்தன். கலியாணம் கட்டுறதில்லை எண்ட முடிவோடை இருந்தன். கடைசியில அக்கா, கட்டாயப்படுத்தி ஒருத்தனைக் கட்டிவைக்க ஏற்பாடு செய்தா. அவனோ ஒரு பொம்பிளைப் பொறுக்கி, குடு அடிக்கிறவன். எண்டது கலியாணத்துக்கு இரண்டு நாளுக்கு முன்னர்தான் தெரிய வந்தது. கலியாணத்தை நான் குழப்பிப் போட்டன். இதாலை பெரிய பிரச்சினை உருவானது. ப்கம்பமேவெடிச்சுது. அந்த நேரம்தான் அக்கா சொன்ன வார்த்தைகள் மூலம் உண்மை தெரியவந்தது.

அமீனா அப்பா உன்னைஏமாத்தி. பொய் சொல்லித்தான் இனியவனிட்டை இருந்து உன்னைப் பிரிச்சவர். இனியவன் நல்லவனடி. நீ உடனே நாட்டுக்குப்போ என்றதுடன் முழு உண்மைகளையும் கக்கினாள். இது தான் நடந்தது. என்னை நம்புங்கோ. என்னைக் கைவிட்டிடாதையுங்கோ அமீனா முழு உண்மைகளையும் சொல்லியழுதாள். அவள் குற்றமற்றவள் என்பதை புரிந்து கொண்டேன்.

அமீனா நீ என்னை விட்டுப்போய் மூன்று வருசம். நான் கலியாணத்துக்கு சம்மதம் சொல்லி மூண்டு நாள்தான் என் நிலைமைகளை எடுத்துச்சொன்னேன்.

உண்மைக் காதல் என்றும் தோற்றுப் போகாது எண்டு சொல்லுவினம். மூன்று நாட்கள் வித்தியாசத்திலே காதலுக்கு முடிவுரை வந்துவிட்டதுயூ இருவரும் அழுதோம். இனியவன் நாங்கள் சேர்ந்து வாழமுடியாதா கண் கலங்கினாள்.

நான் என்ன செய்யிறது அமீனா... மூண்டு வருசம் காத்திருந்தேன்... மூண்டு நாளிலை முடிஞ்சுபோகும் எண்டு நான் கனவிலைகூட எண்ணேல்லை. நான் யாரை இழக்கிறது எனக்கு விளங்கேல்லை அமீனா கத்தினேன். கதறி அழுதேன். இருவரும் சேர்ந்து அழுதோம், இப்பவும் அழுது கொண்டிருக்கிறம்.


ரயில் தண்டவாளங்கள் பக்கத்திலை பக்கத்திலை இருக்கும். ஆனால் அவை ஒருபோதும் இணைய முடியாமலே இருக்கும். அதைப் போலவே எங்கடை காதலும்...யூயூயூ

**(உண்மை பாதி கற்பனை பாதி)**



துறையினையும் வர்த்தக அபிவிருத்தியினையும் மேற்கொண்டது. இது தமது நாட்டினை அபிவிருத்தி செய்வதாக அமைந்திருந்தது. அதேசமயம் தமது நாட்டிணைக் காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தி அதனூடாக நாட்டையும் நாட்டு மக்களையும் கொள்ளையடித்துக் கொண்டிருந்த குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிராக இருந்த அதேசமயம் நவீன கொள்ளைக்காரர்களான ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் அது செயற்பட்டமை அதன். பிரதானமான அம்சமாகும். இதன் தாக்கத்தை நாம் இலங்கையிலும் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தவிர்க்கமுடியாத வகையில் முன்னணிக்கு வந்தபோது ஏகாதிபத்தியம் எனும் சர்வதேச முதலாளித்துவத்திற்கு




## பேராசிரியர் கைலாசபதியின் பார்வையில்

# உலகமயமாக்கலின் ஊடுருவலும் இனப்பிரச்சினையும்

கைலாசபதி பற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுகள், அறிமுகக் குறிப்புகள், மதிப்பீடுகள் என்பனவற்றை ஒப்பு நோக்குகின்றபோது ஒரு உண்மை புலனாகாமல் போகாது. கைலாசபதியின் தமிழியல் துறைசார்ந்த பங்களிப்புகள் வெளிக்கொணரப்பட்ட அளவிற்கு அவரது அரசியல் துறைசார்ந்த பங்களிப்புகள் வெளிக்கொணரப்பட வில்லை என்றே கூறவேண்டும். அவர் செம்பதாகை, றெட்பனர் முதலிய பத்திரிகையில் சர்வதேச விவகாரங்களை ஒரு பக்கத்தில் தொடர்ச்சியாக எழுதிவந்தது போன்றே வேறொரு பக்கத்தில் இலங்கை விவகாரத்தை எழுதிவந்திருக்கின்றார். அன்னாரின் சர்வதேச அரசியல் விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு "சர்வதேச அரசியல் நிகழ்வுகள் பற்றி 1979-1982" (வெளியீடு: புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்) வெளிவந்தது.

இதுபோன்று இலங்கை அரசியல் விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்படாமை துரதிர்ஷ்டமான தொன்றே. இன்று அன்னாரின் சர்வதேச விவகாரங்கள் பற்றி அறிய முடிந்தளவிற்கு உள்விவகாரங்கள் பற்றி அறிய முடியாதுள்ளது.

எனவே அக்கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட்டு வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும். அவை வெளிவராதவரையில் இது தொடர்பிலான மயக்கநிலை நீடிக்கவே செய்யும். அத்தொகுப்பு முயற்சி கைலாசபதியை மதிப்பிடுவதற்காக மட்டுமன்று, தமிழ் தேசியத்தின் இரு வழிப்பாதைகள் இடையான மோதுகையின் தோற்றமும், எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றி அறிந்து கொள்ளவும் அது அவசியமாகும்.

இக்கட்டுரையில் கவனத்தில் கொள்ளப்படும் கட்டுரைகள் எவையும் 1979-1982 காலப்பகுதியில் செம்பதாகையில் வந்தவையாகும். றெட்பனரில் வெளிவந்த கட்டுரைகள் யாவும் எனது பார்வைக்குக் கிடைக்காமையால் அவை பற்றி எவ்வித கருத்தும் கூற முடியாதுள்ளது. இனிவரும் காலங்களில் அவை தொடர்பிலும் கவனம் செலுத்துவதன்மூலம் இத்துறையில் காத்திரமான ஆய்வுகளை வெளிக்கொணர முடியும் என்பதையும் இவ்விடத்தில் எடுத்துக்கூறுவது அவசியமாகும்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டு திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலிலே போட்டியிட்டு வெற்றிபெற்றதிலிருந்து தேசிய முதலாளித்துவம் இந்நாட்டில் நிலைகொள்ளத் தொடங்கியது. இவ்வம்சம் இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. தேசிய முதலாளித்துவம் வரலாற்று அரங்கில் பிரவேசிக்கின்றபோது அது தன்னகத்தே சில முற்போக்கான பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதை வரலாறு புதிய படிப்பினையாக எமக்கு தந்துள்ளது. அந்நிய முதலீட்டின் பிடிப்பும் அதன் தாக்கமும் தமக்குப் பாதகமாக இருப்பதனைத் தேசிய முதலாளிகள் இனங்கண்டனர். இதற்கு மாறாகத் தேசிய முதலாளித்துவம் தத்தமது நாட்டில் கைத்தொழில்

> ***உலகமயம் மூன்றாம் உலக நாடுகளை அடிமைப்படுத்துவதற்காக அது மேற் கொள்கின்ற தந்திரோபாயங்களில் ஒன்றுதான் அந்நியப் பொருளுதவியாகும். அதனை இரண்டு விதங்களில் சாதிக்கின்றன. ஒன்று, அதிகார சக்திகள் தமது இருப்பையும் அதுசார்ந்த நிறுவனங்களையும் பாதுகாப்பதற்காகப் பொருளுதவி என்ற பெயரில் அந்த நாடுகளில் நுழைகின்றன. அவ்வாறு நுழைந்த பின்னர் அவர்கள் அந்நாடுகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்து மக்களைச் சுரண்டுவதற்கும் அவர்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காகவும் அந்நாடுகளில் இனம், மதம், மொழி, சாதி சார்ந்த முரண்பாடுகளையும் மோதல்களையும் தோற்றுவிக்கின்றனர்.***

எதிராகப் போராட்டத்தை அது முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே அவ் அரசாங்கம் சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிராக, அதற்கு எதிரான சகலரையும் அணி திரட்டிக்கொண்டது.

தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரையும் அவ் வியக்கம் தன்னுள் வரித்திருந்தது. இலங்கையில் மூன்று தசாப்த காலமாக இடதுசாரிகள் மேற்கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் இவ்வியக்கத்திற்கு மேலும் வலுவூட்டின. இந்தப் பின்னணியில் உருவானதே மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடாகும்.

இந்நாட்டில், தேசிய முதலாளித்துவம் தமது இருப்பை நிலைநிறுத்தியபின் அது தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வர்க்கநலன் காரணமாகச் சர்வதேச முதலாளித்துவத்துடன் கைகோர்த்துக் கொண்டது. மேலும் அது தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியையும் அதன் போர்க்குணத்தையும் கண்டு அஞ்சியது. தேசிய முதலாளித்துவம் என்பது

"வெகுசனங்கள் மாறுதல் விரும்பாது இருக்கும்பொழுது அவர்களின் மூடத்தனத்தைக் கண்டு முதலாளித்துவ வர்க்கம் கவலைகொள்கின்றது. அவர்கள் புரட்சிகர உணர்வு பெறுங்காலத்தில் அவர்களது நுண்ணறிவுத் திறனைக் கண்டு பேரச்சம் கொள்கின்றது" (கார்ல் மார்க்ஸ்).

இந்தவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் தேசிய முதலாளித்துவம் ஏற்படுத்திய தமது வர்க்கநலனை வெளிப்படுத்தியபோது அது மக்கள் நலனிலிருந்து அந்நியப்பட்டதாக இருந்தது.

மேலும், 1977ஆம் ஆண்டுகாலப் பகுதியில் முன்னர் பதவிலியிருந்த ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்ட மக்கள் விரோதச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி சுதேச விதேச பிற்போக்குச் சக்திகளின் ஆதரவுடன் ஆட்சிப்பீடமேறியது.

இக்காலச் சூழலில் உலகமயப் பொருளாதாரத்தை அமுலாக்கம் செய்வதற்கான முயற்சிகள் மிகத் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டன. விவசாய நிலங்கள் கைவிடப்பட்டு சுதந்திர வர்த்தக வலயங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. இம்முயற்சிகள் யாவும் வெளிநாட்டு, உள்நாட்டு உயர் வர்க்கத்தினரின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதாக அமைந்திருந்தன. இவ்விடயம் தொடர்பில் கைலாசபதியின். பின்வரும் கூற்று அவதானத்திற்குரியது.

**"சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை இந்நாட்டில் ஸ்தாபிப்பதற்காக பெரும் முதலாளிகளைக் கை தூக்கிவிடுவதற்காக சுதந்திர வர்த்தக வலயத்திற்கெனப் புறம்பான சட்டமே தயாரித்துத் தொழிலாளர்களின் உரிமைகளை நசுக்கிவருகின்ற இவர் (ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா – கட்டுரையாசிரியர்) முதலாளித்துவத்தில் நம்பிக்கை இல்லை எனக்கூறுவது விந்தைக்குரியதொன்றாகும். "நாம் இனிமேல் எந்தவொரு கம்பனியையோ அல்லது ஸ்தாபனத்தையோ தேசியமயமாக்கப் போவதில்லை" என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். இது உண்மையில் அவரதும் யூ.என்.பி.-யினதும் வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவ நண்பர்களை வாழ வைப்பதற்கேயாகும். மாறாக அவர் கூறும் தொழிலாள விவசாய நண்பர்களும் அல்ல. யூ.என்.பி. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்துள்ளது. இக்காலத்தில் யூ.என்.பி.யும் ஜனாதிபதியும் செய்த சகல வேலைகளும் நடவடிக்கைகளும் முதலாளித்துவத்தில் நம்பிக்கை வைத்து முதலாளித்துவத்தையே வளர்த்துள்ளது. மாறாக இந்நாட்டில் தொழிலாள – விவசாயிகளை அடக்கி ஒடுக்கிவருகின்றது."**


**(சித்திரை–வைகாசி 1980)**

முதலாளித்து அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கத்தினர் ஒரு வலைப்பின்னலாகத் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு செயற்படுகின்றனர். இவர்களின் முயற்சிகள், செயற்பாடுகள் யாவும் அந்நிய முதலாளிகளுக்கான கொள்ளைக்காடாக நமது நாட்டைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கானவையாகவே உள்ளன. அவர்களுடைய கவனத்தைப் பெறவும் அவர்களிடம் இருந்து சலுகைகளைப் பெறவும் ஆளும் மேட்டுக்குடியினர்தன்மானம் இழந்து, கூனிக்குறுகி அவர்கள்முன் நிற்கின்ற நிலைமையைக் கைலாசபதி சிறப்பாகவே அடையாளம் காட்டியுள்ளார்.

பொதுத்துறை நிறுவனங்களை இல்லாதொழித்து தனியார் மயப்படுத்தல் யூ.என்.பி.-யின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும் என்பதை யாவரும் நன்கு அறிவர். இதற்காக அவர்கள் பல்வேறுபட்ட மக்கள் விரோத தந்திரோபாயங்களைக் கையாண்டுள்ளனர். அவற்றில் பிரதானமானது, பொதுத்துறை நிறுவனங்கள் பெரும் நட்டத்தில் செயற்படுகின்றன எனப் பொது மக்களிடத்தில் எடுத்துக்காட்டுவதற்காக அத்துறை சார்ந்த நிறுவனங்களில் ஊழல்களை அதிகரிக்கச்செய்தன.

பின் தனியார் துறையின் சிறப்புகள் மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தப்பட்டன. இவ்வாறாகப் பொதுத்துறை நிறுவனங்கள் பற்றிய அவநம்பிக்கையை ஏற்படுத்தியபின்னர் தனியார்மயமாக்கத்தை மேற்கொண்டனர். அன்றைய சூழலில் இலங்கையில் ஜே.ஆர். ஆட்சி தனியார் துறையின் சொர்க்கமாக விளங்கிய அமெரிக்காவையும் விஞ்சி தனியார் துறை நிறுவனங்கள் மட்டுமே இருக்கவேண்டும் என்ற வெறியில் செயற்பட்ட நிலையினை கைலாசபதி இவ்வகையில் வெளிப்படுத்தி இருந்தார்.

**(தொடரும்...)**






# மனிதப் பாம்பு

மன்னவனுக்கு மாமன் முறை!
மற்றவர் அவனிடம் அஞ்சினர்.
கற்றவர் யாவரும் வெறுத்தனர்.
நற்றவர் யாவரும் ஒதுங்கினர்!

உறவல்ல மன்னா – அவன்
உள்ளேயிருக்கும் ஒரு பாம்பு!
துறந்துவிடு மன்னா அவன் உறவை!
இரந்து மன்றாடினார் அமைச்சர்.

"நல்லவனல்ல, எனக்கும் தெரியும்
வல்லவனல்ல,அதுவும் தெரியும்.
எனவே அவனிடம் என்ன பயம்?
விட்டுத்தள்ளும், பிழைத்துப் போகட்டும்"
மன்னன் பதிலில் அலட்சியம் தெறித்தது.

மங்கையரை கூட்டிவைத்து
மாமன் போட்டி நடத்தினான்.
"சுந்தரிகளே! உங்களில் என்னை
சொக்கவைப்பது யாரடி?"

நரை விழுந்தது முடியில் மட்டும்
திரை விழவில்லை ஆசையில் மட்டும்
வரை முறையில்லாமல் மாமன் ஆடினான்.
விரைவாகச் செய்தி மன்னனைச்
சேர்ந்தது.

"வாரும் மாமா, தாரும் விளக்கம்.
யாரும் துணியாத காரியம் செய்கிறீர்.
பேரும், புகழும் மூழ்கிப் போகுமோ?
தாரும். விளக்கம் தகுந்த முறையில்?"

"நாட்டுக்கு நீ மன்னனாயிருக்கலாம்,
வீட்டுக்குள் நீ எனக்கு மருமகள்!
கேட்டுக்கு வித்திடும் காரியம் செய்து
நாட்டுக்குள் உந்தன் பெயர் கெடுப்பேனா?"

மாமன் நடிக்க, மன்னன் தயங்கினான்;
"செய்திகள் பல செவியில் விழுகிறதே
சோதித்தறிவது என் முறைதானே?
மாமனுக்கு ஒரு நீதி என்று மற்றோர் நினைப்பர்
மன்னனுக்கு அது அழகாய் இருக்காதே!"

நீ என் இரத்தம், நான் உன் இரத்தம்
உனக்கொரு கேடு என்னால் வருமோ?
போய்விடு என்று சொல் – இதோ
நான் புறப்பட்டு விடுகிறேன்!"

"வேண்டாம் மாமா! பொறுத்துக் கொள்க!
தீயவர் சொல் கேட்டுவிட்டேன்
தூயவர் உங்களை சோதித்துவிட்டேன்!

மழலை உதைத்தால் மார்பு பிளக்குமா?
விரலை நகம் பிரிந்து போகுமா?
குரல்கம்ம மாமன் சொல்லிப் போனான்.

"மன்னர் உங்களைக் கண்டித்தாரோ?"
மாங்குயில் ஒருத்தி வினா தொடுத்தாள்.

"யாரடி மன்னன்? மூடடி வாயை!
பாரடி ஒருநாள் நான்தான் மன்னன்!"
மாமன் மார்பை நிமிர்த்திச் சொன்னான்.

"தகுதியும் உண்டு, தரமும் உண்டு.
பெருமதி உண்டு, பெறுமதியும் உண்டு
நாளைய மன்னா எனக்கொரு ஆசை!
எடுத்துச் சொல்லவா? ஒளித்து வைக்கவா?"

எதையும் நீதான் ஒளிப்பதேயில்லையே
இதைமட்டும் ஏனடி ஒளித்து வைக்கிறாய்?
அவிழ்த்துப் போடடி, அதென்ன இரகசியம்?
"நீர் நாட்டை ஆள வேண்டும் – நான்
எப்போதும் உம்மை ஆளவேண்டும்!"

"நாணிக்கோணாதே – உனக்கிது புதிது!
ராணியாகும் உன் ஆசையில் இல்லைப்பழுது!"
மங்கையின் அணைப்பில் மாமன் கிறங்கினான்.
காமனின் அம்புகள் மாமனை வதைத்தன.

"கொய்யாக் கனிகள் இரண்டு
கொண்டு வந்தேன் இதை உனக்கு!
உண்ணா இதழ் சிவப்பு – அதை
உனக்கெனத் தந்தேன் நீ அருந்து!
மையில் விழி எழுதி உன்னில்
மையல் கொண்டேன் பெறு விருந்து!
கையால் எனை அணைத்து – இது
மெய்யா என வியந்து – நீ
பொய்யாத சுகம் பெறுவாய்!"

"கார் குழலில் மலர் தொடுத்து
தேர் போல் அசைந்து வந்தவளே! – குழலில்
மலர்தேடி உன் பின்னால்
ஒரு கோடி வண்டுவரும்! உன்
மார்பிலிரு தாமரைகள்
என் கண்களுக்கு தூதுவிடும்
உன் மலர்மேனி பின்னாலே
இந்த வண்டும்வரும்!"
வயதான மாமன் வாலிபனானான்.

"மன்னராய் மாற – நாள்
மருந்தொன்று சொல்லவா?
"தந்த விருந்து இனித்தது – என்
வாலிபம் திரும்பி வந்தது.
தரப்போகும் மருந்தும் இனித்தால்
பெறப்போகும் பதவியில் பாதி உனக்கு!"

வளரும் வாரிசின்
வாழ்வை முடிக்கவேண்டும்!"
மங்கை விஷம் விதைத்தாள்.

என்ன சொல்கிறாய்?
மன்னனின் குழந்தையை
கொய்யவோ சொல்கிறாய்?
மாபாதகம் அல்லவோ?
மாமன் சற்றே அஞ்சினான்.

இருளோடு இருளாய் மாமன்
இரைதேடும் குறுவாள் கரத்தில்!
இமைமூடி குழந்தை தொட்டிலில்!
இடைதுவள ராணி தூக்கத்தில்!

மாமன் கரம் ஓங்கினான்
"போட்டியாய் முளைத்தாயோ
சிறு முயலே செத்துவிடு!
நரிச் சிரிப்போடு உயர்ந்த கரம்
மறுகரமொன்றால் தடுக்கப்பட்டது.
பிடித்த பிடி இரும்புப் பிடி!

"மன்... மன்னா! நீங்... நீங்களா?"

"ஆமாம் மாமா! அன்புள்ள மாமா
நான்தான் நானே தான்!
போடா பதரே! உடனிருந்து
கொல்லும் நரியே!"

விசாரணை மன்றத்தில்...
மாமன் பெற்றான் ஆயுள் தண்டனை!


"எப்படி மன்னா – மாமன்
சதியை முறித்துப் போட்டீர்கள்?"
வினா தொடுத்தவர் வியக்க
விடை சொன்னான் மன்னன்.

"உள்ளத்தால் உடன்பாடில்லாதவருடன்
வாழ்வதும் ஒன்றுதான் – ஒரு குடிசையில்
பாம்போடு வாழ்வதும் ஒன்றுதான்.
சொன்னவர் திருவள்ளுவர்
நான் மறக்கவுமில்லை, பாம்பைப்
பசுவென நினைக்கவுமில்லை"

மன்னன் சொல்ல மற்றோர் வியந்தனர்.
"விலங்கினில் பசுவும் உண்டு
மனிதரில் பாம்பும் உண்டு
இனம் தெரிந்தால் மீட்சி உண்டு"
மன்னன் சொல்லி வணங்கினான்.

மன்னன் மறக்காத திருக்குறள் இதுதான்.

"உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று"
அதிகாரம்: 89 குறள்: 890




**சிந்தியா! மைத்திரிபால போட்டியிட முன்வந்தமை சர்வதேசத்தின் சதியா?**

**த.காவேரி, வவுனியா.**

இல்லை என்று மறுப்பதற்கில்லை. சர்வதேசத்தின் சதி. உள்ளூர் அரசியலில் நீண்டகாலமாக தோற்றுப்போனவர்களின் இயலாமை. எனப் பல காரணங்களின் வேள்விக்கு பலியாகப்போகும் ஆடு மைத்திரிபால. இது அவரின் விதி.

**சிந்தியா! தேர்தலில் முஸ்லிம் மக்களின் பங்கு என்ன?**

**து.பாமினி, எட்டியாந்தோட்டை.**

தலைமைகளுக்கு வேறொரு கனவு. மக்களுக்கு வேறொரு கனவு. தலைமைகளைத் தாண்டியும் சில முடிவுகளை இம்முறை முஸ்லிம் மக்கள் எடுப்பார்கள் என்றொரு அபிப்பிராயம் தோற்றுவிக்கப்படுகின்றது.

**சிந்தியா! ஜனாதிபதி திருப்பதி செல்கிறாராமே. ஏன்?**

**எஸ்.கவி, விசுவமடு.**

அதனால் உங்களுக்கு என்ன? ஏன் இப்படி அடுத்தவர்களின் தனிப்பட்ட விவகாரங்களில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கின்றீர்கள். தமிழ் நாட்டில் இராமதாஸ், வைக்கோ, சீமான் போன்றவர்களுக்குத்தான் விவஸ்தை இல்லாமல் வயித்துப் பிழைப்புக்காக ஜனாதிபதியின் தனிப்பட்ட விவகாரத்தையும் அரசியலாக்குகின்றார்கள். நீங்களும் தமிழ் பத்திரிகைகளை மேலோட்டமாகப் படித்து ரொம்பக் கெட்டுப்போய் விட்டீர்கள்.

**சிந்தியா! கட்சித்தாவல்கள் என்று [illegible] மக்களின் அபிலாஷைகள் எப்போது நிறைவேறும்?**

**பொ.காயத்திரி, கொக்குவில்.**

மன்னிக்கவும். அதைப் பார்க்க உங்களுக்கும் எனக்கும் ஆயுள் காணாது.

**சிந்தியா! வறுமை திறமைக்குத் தடையா?**

**ச.டானியல், மன்னார்.**

எல்லாவற்றையும் தீர்மானிப்பது பணம் என்றாகிவிட்டபிறகு. வறுமை அநேகமான சந்தர்ப்பங்களில் தடையாகவே இருக்கின்றது.

**சிந்தியா! பெண்களைப் போதைப் பொருளாகப் பார்க்கும் ஆண்களுக்கு நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?**

**றொ.கபிலன், கொழும்பு –16.**

சொல்லித் திருந்தும் நோயல்ல அது.

**சிந்தியா! நடிகை தேவயானி தற்போது டீச்சராமே?**

**வி.ஜெயதாஸ், சுண்டுக்குளி.**

அதில் என்ன ஆச்சரியம் உங்களுக்கு.

**சிந்தியா! ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்குமா?**

**இ.அரவிந்தன், கிளிநொச்சி.**

ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாக கூறிக்கொண்டிருப்பவர்கள் யாரும் தமிழ் மக்களை நேரடியாக சந்திக்கும் திராணி இல்லை. அப்படி இருக்கையில் இவர்கள் எப்படி தமிழ் மக்களுக்கு எப்படி தீர்வைத் தருவார்கள்?



**சிந்தியாவிற்கு காதலித்த அனுபவம் உண்டா?**

**என்.டிலானி, புத்தளம்.**

அப்பப்பா! எத்தனை அனுபவங்கள் அத்தனையையும் உங்களுக்குச் சொல்வதென்றால் முரசின் இத்தனை பக்கங்கள் போதாது. இருந்தாலும் கொஞ்சம் சொல்கிறேன் கேளுங்கள்.

அன்னையின் கருவிற்கு விடை கொடுத்து அவள் மடியில் தவழ்ந்தபோது அவள்மீது ஏற்பட்டது தாய்மைக் காதல்.

பள்ளிப் பருவத்தில் கல்விக் கூடத்தில் புத்தகங்கள்மீது ஏற்பட்டது அறிவுக் காதல்.

பருவ வயதை எட்டிப் பிடித்தபோது துள்ளி விளையாடும் எதிர்ப்பாலினம் மீது அள்ளிவந்தது பருவக் காதல்.

தவழ்ந்து வளர்ந்த மண்ணின்மீது இருப்பது உரிமைக் காதல்.

இப்படி எத்தனையோ காதல் அனுபவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்... அதனால் இத்துடன் நிறுத்திக் கொள்வோமே.

**சிந்தியா! இந்திய அணி அவுஸ்திரேலியாவில் சாதிக்குமா?**

**கி.கொன்சன், திருமலை.**

உங்களுடைய கேள்விக்குப் பதில் எழுதும்போது முதல் டெஸ்டின் முதல் நாள் ஆட்டம் முடிவடைந்து இருக்கிறது.

அவுஸ்திரேலியர்களின் துடுப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியப் பந்துவீச்சாளர்கள் கொஞ்சம் தடுமாறுவதாகத் தெரிகிறது.

அதேபோன்று எகிறிவருகின்ற பந்துகளை சமாளிப்பது துடுப்பாட்ட வீரர்களும் சிக்கல்கள் ஏற்படும்போல் தெரிகிறது.

எனவே. இத்தொடரைப் பொறுத்த வரையில் வெற்றி. தோல்வி அற்ற முடிவைத்தக்க வைத்தாலே இந்தியாவுக்கு வெற்றிதான்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

**வணக்கமுங்கோ. ஒவ்வொரு கிழமையும் அரசியலைப் பற்றிக் கதைச்சுக் கதைச்சு அலுத்துப் போச்சுதுங்கோ. ஏதாவது வித்தியாசமாய் உங்களோட பகிர்ந்து கொள்ளவேணும் எண்டு மூளையச் சிதைஞ்சுக்கொண்டு இருக்கேக்க நண்பர் ஒருத்தர் வசமாய் வந்து மாட்டிட்டாருங்கோ. அண்ணாச்சி அவுஸ்ரேலியாவில இருந்து வந்திருக்கிறார். அவரிட்டக் கதை குடுத்து பலதும் பத்தும் கதைச்சுக்கொண்டு இருக்கேக்குள்ள சுவாரசியமான சில விஷயங்களையும் அவிட்டுவிட்டவருங்கோ.**

அதை உங்களுக்கும் சொல்லுவம் எண்டு அப்பவே நான் டிசைட் பண்ணிப்போட்டன். அது என்னண்டா இப்ப கொஞ்சநாளா திரைகடல் ஓடி திரவியம்தேட நினைக்கிற எங்கடை ஆக்கள் மீன்பிடிப் படகுகளில ஏறி அவுஸ்திரேலியக் கண்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கினம். அப்படிப் போறவையளுக்கு ஆங்கிலப் மொழி அவசியம் தேவையில்லை. அதனால பலருக்குச் சுட்டுப்போட்டாலும் ஆங்கிலம் வராது.

இந்த நிலைமையில அங்க போறவையள் ஒதுக்குப்புறங்களில இருக்கிற அந்த நாட்டு சனங்கள் தொழில்செய்யப் பஞ்சிப்படுற பக்ரறியள் வழிய [illegible]வையள் இறக்கிவிடப்படுகினமாம்.

குடும்பம், உறவுகள் ஒண்டும் இல்லாம தனிக்கட்டையளாய் அங்க தனிச்சுப்போய் இருக்கிற எங்கடை ஆக்கள் அப்பப்ப அங்கையங்கை சந்தர்ப்பம் கிடைச்சா தங்கட தாகங்களைத் தீர்த்துக் கொள்ளினமாம்.

உப்பிடித்தான் ஒருத்தர் அங்கை இருக்கிற நேர்ஸ் அன்ரி ஒராளின்ர வலையில விழுந்துபோனாராமுங்கோ. ஆனா, அண்ணாச்சிக்கு சுட்டுப்போட்டாலும் ஆங்கிலம் வராது. அந்தக் குரலுக்குத் தெரிந்ததெல்லாம் யெஸ்சும் நோவும்தான்.

ஒரு நாள் அந்த அன்ரி அண்ணாச்சிய ஒரு ஓபிசுக்குக் கூட்டிக்கொண்டு போன வாவாம். அங்கை இருந்தவையள் இவரிட்டை எல்லாம் கேட்டாப்பிறகு ஆங்கிலம் தெரிஞ்ச ஒருவரைக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லி இவரை அனுப்பி வைச்சிருக்கினம்.

இவரும் ஒரு நண்பர் ஒருத்தரோடை அங்க போயிருக்கிறார். அங்க இருந்த பதிவுகளைப் பார்த்த நண்பர் திகைச்சுப் போனாராமுங்கோ.

"என்னடா மச்சான் உன்னை அந்த நேர்ஸ் அன்ரியின்ர புருஷன் எண்டு பதிஞ்சு வைச்சிருக்கிறாங்கள்." எண்டாராம்.

திகைச்சுப்போன அண்ணாச்சி "சத்தியமா மச்சான் ஜெஸ், நோவைத் தவிர வேற ஒண்டும் உவங்களுக்குச் சொல்லேல்ல, எண்டு விழிபிதுங்கிப் போய் நிண்டாராமுங்கோ.

இருந்தாலும் சுதாகரிச்சுக்கொண்ட அண்ணாச்சி விசா இல்லாம நாதாரியளாத் திரியிறதக் காட்டிலும் நேர்ஸ் அன்ரிக்கு கஸ்பண்ட் என்ற பதவிய மெயின்ரேன் பண்ணினால் அந்த நாட்டு பாஸ்போர்ட் எடுத்துப்போடலாம் எண்டுவிழுந்தும் மீசையில மண்படாத மாதிரி கதை விட்டுக்கொண்டு திரியிறாராமுங்கோவ்.

பாத்தியளோ... காலை வைக்கேக்க ஒவ்வொரு அடியும் நிதானமாய் இருக்கோணும். ஆழம் பிழைச்சுதெண்டா தலையெழுத்தையே மாத்திப்போடும். இந்த அண்ணாச்சிக்கு சுக்கிர திசை எண்டபடியால பாஸ்போர்ட் கிடைக்குது. அட்டமத்துச் சனியன் உச்சத்தில நிண்டிருந்தா நிலைமை வேறமாதிரி இருக்குதுங்கோவ்.

**"யாவும் கற்பனையல்ல"**

## சுயவிபரக்கோவை

| | |
|---|---|
| பெயர்:- | பொது எதிரணி. |
| வயது:- | சில மாதங்கள். |
| தொழில்:- | அரசியல்வாதிகளுக்கு வலை வீசுவது. |
| நோக்கம்:- | தற்போதைய ஆட்சியைக் கவிழ்ப்பது. |
| விருப்பம்:- | எப்படியாவது ஆட்சி அதிகாரங்களை ருசிப்பது. |
| விரும்பாதது:- | எதிர்க்கட்சி வரிசையை. |
| வீசுவது:- | கோடிகளை. |
| சேர்ப்பது:- | கேடிகளை. |
| வியப்பது:- | தற்போதைய ஜனாதிபதியின் ஆளுமை. |
| வெறுப்பது:- | தாங்கள் உருவாக்கிய அரசியலமைப்பை. |
| சாதனை:- | ஆளுங்கட்சிக்குள் இருந்தே சிலரை பிடுங்கி எடுத்தது. |
| வேதனை:- | எதிர்பார்த்தளவுக்கு கட்சி தாவல் இடம்பெறாமை. |
| எதிர்பார்ப்பு:- | ஜனவரி 8 இல் மக்களின் தீர்ப்பு. |

## வரலாறு படைத்த வல்லுநனர்கள்

## நீராவிக்குக் கழவாளமிட்டவர்



கிளாஸ்கோ சர்வ கலாசாலையினர், இப்படி ஒரு திறமைசாலி, தம் ஊருக்கு வந்திருப்பதை அறிந்தால் சும்மா விடுவார்களா? சர்வ கலாசாலையினர் அங்கீகாரம் பெற்ற கருவிகள் செய்யும் கலைஞராக வாட்டை நியமித்து விட்டார்கள். ஒரு நாள் சர்வகலாசாலையில் பழுதுபட்டிருந்த நியூகோமனின் நீர் இறைக்கும் இயந்திரத்தைச் சரிசெய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார் வார்ட்.

நியூகோமனின் மாதிரி இயந்திரம் அது. சில மாணவர்கள் அதில் விளையாடப் போக, அது பழுதடைந்து கிடந்தது. முன்பே கூறியதுபோல நியூகோமனின் இயந்திரத்தை இயக்கியது உஷ்ணம்தான். நீராவியல்ல. அதில் சக்கரங்கள் ஏதும் கிடையாது.

எரிபொருள் இதனால் எவ்வளவு வீணாகிறது என்பதைக் கண்டார் ஜேம்ஸ் வார்ட். சிக்கனத்துக்குப் பெயர்பெற்ற ஸ்கொட்லாந்துக்காரரான ஜேம்ஸ் வார்ட், அப்போதைய அந்த யந்திரத்தை அவர்களுக்குச் சரிசெய்து கொடுத்தாலும்; எரிசக்தியை வீணாக்காமல் பயன்படுத்தி அந்த யந்திரத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். எரிசக்தி வீணாவதைத் தடுத்ததோடு மட்டுமல்லாமல், நீராவியின் சக்தியினாலேயே பிஸ்டனை மேலும் கீழும் இயக்க வைத்துப் பூரணமான ஒரு நீராவி யந்திரத்தை உருவாக்கிவிட்டார். வார்ட்.

டாக்டர் ஜோன் ரோபக் என்பவர் பல நிலக்கரிச் சுரங்கங்களுக்கு உரிமையாளர். அதில் திடீர் திடீரென்று நீர்பெருகிச் சுரங்கத் தொழிலாளர்களின் உயிருக்கு அபாயத்தை அளித்துவந்தது. கவலையோடிருந்த ரோபக், இளைஞர் ஜேம்ஸ் வார்ட்டின் புதிய கண்டுபிடிப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் போய்ப் பார்த்தார். ஸ்கொட்லாந்து வாலிபரின் புதிய இயந்திரம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் உற்பத்திக்குப் பொருளுதவி செய்ய முன்வந்தார். ரோபக்கின் பிரமாண்டமான அரண்மனையின் அவுட் ஹவுசில் ஜேம்ஸ் வோர்ட் தமது வேலையைத் தொடங்கினார்.

வார்ட்டின் வாழ்நாளில் இது ஓர் இருள் நிறைந்த பகுதி. அடிக்கடி நோய்வாய்ப்பட்ட வேலையில் முழுமூச்சாக ஈடுபட முடியவில்லை.

எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை. ரோபக்கின் செல்வமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரையலாயிற்று. ஒரு நிலையில் அவர் உதவுவதும் நின்றுபோனது. அவர் முதலீடும் வார்ட்டின் கண்டுபிடிப்பும் பர்மிங்ஹாமில் உள்ள ஸோஹோ என்னும் இடத்திலிருந்த மாத்யூ பௌல்டன் என்பவருக்கு உரிமைகளாயின.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(11.12.2014 தொடக்கம் 17.12.2014 வரை)

### மேடம்

கணவன், மனைவியின் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். காதல் விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் இருக்கவும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பணம் மற்றும் பொருட்செலவுகள் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களை பெறுவார்கள். நீண்டகாலமாகப் பிரச்சினைகள் உண்டாகிப் பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் திரும்ப ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும்.

### இடபம்

குடும்பத்தில் சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் செய்வதற்கான நீண்டகால முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வராத பணம் கை வந்துசேர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்து சேரும். வெளிநாடுகள் சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் வேற்று மதத்தவரால் எதிர்பாத்த ஆதாயம் உண்டாகும். வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைக்கும். கை மற்றும் கால்களில் கவனம் தேவை. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசிப் பழகுவதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம்.

### மிதுனம்

குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் துலங்க வாய்ப்பு உள்ளது. புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப்போட்டு இருந்த திட்டங்கள் நிறைவேறக்கூடிய காலமாகும். மற்றவர்களுக்காக உதவிசெய்வதாக எண்ணி சிக்கலில் மாட்டிக் கொள்ளாதீர்கள். வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும் காலமாகும். மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மன நிறைவுகளை அடைவீர்கள்.

### கடகம்

காணாமற்போன பொருட்கள் திரும்ப கை வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான வங்கிக் கடன்கள் கை வந்துசேரும். அரசியல்வாதிகளால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமணம்போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகும். குல தெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டுவீர்கள். மருந்துப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் அடைவார்கள். புதிய கடன்வாங்கினால் திருப்பிச்செலுத்த இயலாமற் போகுமாகையால் புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்க்கவும்.

### சிங்கம்

காதல் விசயங்களில் எதிர்பார்த்த செய்திகள் சற்று காலதாமதமாகவே கிடைக்கும். ரேஸ், லோட்டரி மூலம் திடீர் தனவரவுகள் ஏற்படலாம். வீடு, வாகனங்களை வாங்குவதற்கும் மற்றும் தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்காக நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவித் தொகைகள் கைக்கு வந்துசேரும் காலமாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். தாய்வழிச் சொந்தபந்தங்களின்மூலம் சில ஆதாயங்களை அடைவீர்கள். வெகுகாலமாகப் பிரிந்து போன கணவன், மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள மனக்கசப்புகள் தீர்ந்து ஒன்றுசேர வாய்ப்பு உள்ளது.

### கன்னி

தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடிச் செல்லுவீர்கள். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் சச்சரவுகளும் வந்துபோகும். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். பொருளாதாரம் சுமாராக காணப்படும். உற்றார் மற்றும் உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

### துலாம்

உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் ஒரு சில ஆதாயங்கள் அடைவீர்கள். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் தேடிவரும். ஒரு சிலருக்குச் சொத்துக்களை விற்பதன்மூலம் பணம் வந்துசேரும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவது நல்லது. புதிய வீடு மாற்றங்களைச் செய்ய முயற்சிப்பீர்கள். தொலைதூரப் பயணங்களைத் தள்ளிப்போடுதல் நல்லதாகும். உடல்நிலையில் வாய், வயிறு முதுகுவலி போன்ற சில உபாதைகள் வந்துபோகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும். கை மற்றும் கால்களில் கவனம் தேவை.

### விருச்சிகம்

வேலையில்லாத படித்தவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களையும் சலுகைகளையும் பெறுவார்கள். மாணவர்களுக்கு கல்வியல் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. உற்றார், உறவினர்களால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகக்கூடிய காலமாகும். தேவையில்லாமல் மற்றவர்களின் விசயங்களில் தலையிட்டு வீண் மனக்குழப்பங்கள் அடைய வேண்டாம். குடும்பத்தில் பலகாலமாக ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையக்கூடிய காலமாகும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்களை வாங்குவீர்கள். தொழிற்சாலைகள் மற்றும் இருப்பிடங்களை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

### தனுசு

புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்க்கும் பொருட்டு பொருட்செலவுகள் உண்டாகலாம். கணவன், மனைவி இடையே இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று காலதாமதமாகவே தீரும். மாணவர்கள் கல்வியில் நினைத்த கல்லூரிகளில் பயிலும் வாய்ப்புகள் கிடைக்கும். குழந்தைகளுக்குப் பரிசுகள் மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கலாம். நாட்பட்ட தீராத வியாதிகள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். குடும்பத்தில் திருமண விசயமாக காரணமில்லாத சிற்சில மனக்கசப்புகள் வந்துபோகும்.

### மகரம்

தந்தை, மகன் உறவுகளில் சிற்சில காரணமில்லாத பிரச்சினைகள் வந்து போகலாம். வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து நல்ல செய்திகள் வந்துசேர வாய்ப்பு உள்ள காலமாகும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பெண் சம்பந்தமான காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்து சேரும். பொருளாதாரத்தில் இதுவரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். அறநிலையத் துறை சார்ந்தவர்கள், மந்திரிப் பதவிகளை வகிப்பவர்கள் உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகலாம்.

### கும்பம்

குடும்பத்தில் தடைப்பட்டுவந்த திருமணம்போன்ற சுபகாரியங்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது. நண்பர்களால் காரணமற்ற பொருட்செலவுகள் வந்துசேரலாம். உடம்பில் வாயு வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். அரசியல்வாதிகளிடம் இருந்து ஆதாயங்களைப் பெறுவீர்கள்.

### மீனம்

குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளைச் செய்வீர்கள். உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த அரசு உதவித்தொகைகள் கிடைப்பதோடு நினைத்த இடங்களுக்குப் பணி இடமாற்றமும் ஏற்படக்கூடிய காலமாகும். செய்தொழில் சம்பந்தமாகப் புதிய கூட்டுத் முயற்சிகளைச் சிறிது தள்ளிப்போடுதல் உகந்ததாகும். தந்தை - மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மிக ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். வேண்டாத விசயங்களில் தலையிட்ட வீண் மனச்சிக்கலை விலைக்கு வாங்கவேண்டாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 25 வியாழக்கிழமை (11.12.2014) பக்கங்கள் IV ஓசை – 072

# சூடேற்றும் அரசியலுக்கு ஏமாறக்கூடாது

## வேலையற்ற பட்டதாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

இன்றைய இளைய சமுதாயம் தவறுகளுக்கோ, துஷ்பிரயோகங்களுக்கோ இடமளிக்காது எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். இதைவிடுத்து உசுப்பேற்றும், சூடேற்றும் அரசியலுக்கு நீங்கள் ஒருபோதும் ஏமாந்து விடக்கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற வேலையற்ற பட்டதாரிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களுக்கு கௌரவமான ஒளிமயமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதே எனது பிரதான நோக்கம் என்ற வகையில் அதற்கு நீங்களும் எமக்கு பக்கபலமாக இருந்து ஆதரவு அளிக்கும் பட்சத்திலேயே சாத்தியமாகும்.

உசுப்பேற்றும், சூடேற்றும் (IV) ஆம் பக்கம் பார்க்க

# யாருக்கு ஆதரவு?

# திண்டாடும் கூட்டமைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக இறுதித்தீர்மானம் எடுப்பதில் கூட்டமைப்பினரிடையே தொடர்ந்தும் குழப்ப நிலை நிலவுகின்றது.

இதனால் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக இறுதி முடிவை அறிவிப்பதில் கூட்டமைப்பினர் காலம் கடத்தி வருகின்றனர். தமது அறிவிப்பின் மூலம் தாம் தமிழ் மக்களிடம் இருந்து ஓரம் கட்டப்பட்டு விடுவோமோ? என்ற அச்சமே இந்த நிலைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்று இந்த மாத இறுதியில் தீர்மானிக்கப்படும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்று நாம் இன்னும் தீர்மானிக்கவில்லை. இந்த மாத இறுதியில் நாம் எமது முடிவை அறிவிப்போம். தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்த பின்னர் அது குறித்து நாம் தீர்மானிப்போம்.

அத்துடன், கிராமம் (IV) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில் வாக்களிக்க 4, 50, 132 பேர் தகுதி

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 பேர் தகுதிபெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் குறித்த எண்ணிக்கையானோர் வாக்களிக்க தகுதி பெற்றிருக்கின்றனர். 526 நிலையங்களும், 44 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பு இடம்பெறும்.

இதில் 8 தபால் மூல வாக்களிப்பு நிலையங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், வாக்கு எண்ணும் நிலையமாக யாழ்.மத்திய கல்லூரியைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் காலங்களில் நடைபெறும் வன்முறைகள் பற்றி முறைப்பாடு பதிவு செய்வதற்கு 5 தேர்தல் வன்முறை பதிவு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகம், (IV) ஆம் பக்கம் பார்க்க

## இராதாகிருஷ்ணன், திகாம்பரம் பிரதியமைச்சர் பதவிகளைத் துறந்தனர்

பிரதியமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்துள்ள வே. இராதாகிருஷ்ணன் மற்றும் பி. திகாம்பரம் ஆகியோர் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் கலந்து கொண்டு, கருத்து வெளியிட்டுள்ளனர்.

மலையக மக்களின் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் காலங்களில் சிறந்த தீர்வு வழங்குவதே தமது நோக்கமெனவும் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுத் தலைவரான வேலுசாமி இராதாகிருஷ்ணனுடன், அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும், 21 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதாக இதன் போது அறிவிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி பொது எதிரணியினரிடம் 11 கோரிக்கைகளை முன்வைத்துள்ளதுடன், அவற்றில் மூன்று



முக்கிய கோரிக்கைகளை பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க இணக்கம் காணப்பட்டதாக வே.இராதாகிருஷ்ணன் கூறினார்.

இதேவேளை, மலையக மக்களின் குடியிருப்புப் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே எதிரணியின் (IV) ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சரின் வசமிருந்த 7 அமைச்சுப் பொறுப்புக்கள் பகிர்வு

வடக்கு மாகாண முதலமைச்சரின் வசம் இருந்த சில அமைச்சின் கடமைகள், மேலதிக பொறுப்புக்கள் ஏனைய அமைச்சர்கள் மூவரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அமைச்சுக்களின் பொறுப்புக்களை குறித்த மூன்று அமைச்சர்களும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

முதலமைச்சரின் வசம் இருந்த உணவு கூட்டுறவுத்துறை, நீர் வழங்கல் - வடிகாலமைப்பு துறை, கிராமிய மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரம், மகளிர் விவகாரம், சமூக சேவைகள் அமைச்சு அதிகாரம் ஆகிய 7 துறைகளுமே இவ்வாறு பகிரப்பட்டுள்ளன.

இதன்படி, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு தற்போதைய சுகாதார அமைச்சு கடமைகளுடன் மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சும்,

விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடம் கூட்டுறவுத் துறை மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சும்,

மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கிராமிய வீதி அபிவிருத்தி அமைச்சு பொறுப்புக்களும் கையளிக்கப்பட்டுள்ளன. (25)



## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 2228680, 077 5925088.

(C/3589)


## ஹன்டி பேரின்பநாயகத்தின் நினைவு தினக்கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முதலாவது தலைவரும், புகழ்பூத்த கல்விமானும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ச.ஹன்டி பேரின்பநாயகத்தின் 37 ஆவது ஆண்டு நினைவு தினக்கூட்டம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 4.30 மணிக்கு இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளைத் தலைவரும், சமாதான நீதவானுமாகிய கா. கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்ட தொடக்கவுரையை சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினரும், காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆற்றுவார்.

நினைவுரையை யாழ்பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந. சிவகரன் நிகழ்த்துவார்.


## மலேசியா, கட்டார் வேலை வாய்ப்புக்கள்

மலேசியாவின், கௌரவமான, செல்வாக்கான தமிழ் இல்லங்களில், மொழி, கலாசார, சமய சிக்கலற்ற சூழலில் கவர்ச்சிகரமான சம்பளத்தில் பணிப்பெண் வேலை வாய்ப்புக்கள் முற்றிலும் இலவசம்.

வேலை ஒப்பந்த அனுமதி இல: **A/L2119/05/14**

கட்டார் நாட்டில்

| இல | தொழில் | தொகை | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | பூந்தோட்டப் பணியாளர் | 15 | QR 1200+200 |
| 02 | நீச்சல் தடாக சுத்திகரிப்பாளர் | 10 | QR 900+200+உணவு |
| 03 | ஸ்டில் கம்பனி வேலையாட்கள் | 10 | QR 800+200 |
| 04 | சமையல் உதவியாளர் | 05 | QR 800+OT |
| 05 | மேசன் | 10 | QR 1500+OT |
| 06 | நட்சத்திர ஹோட்டல் சமயல் உதவியாளர் | 02 | QR 2000+OT+Food |
| 07 | தச்சுவேலை | 10 | QR 1200+200 |
| 08 | அரண்மனை துப்புரவாக்குபவர் | 02 | QR 2500+OT+Food |
| 09 | தளபாடப் பெயின்டர் | 03 | QR 1200+200 |
| 10 | டயில் மேசன் | 04 | QR 1100+200 |
| 11 | வெல்டர் | 06 | QR 1250+200 |
| 12 | A/C இலெக்ட்ரீஷியன் | 04 | QR 1100+200 |
| 13 | இலெக்ட்ரீஷியன் | 02 | QR 1250+200 |
| 14 | பெயின்ட்டர் | 05 | QR 1200+200 |
| 15 | லேபர் | 10 | QR 900+200 |
| 16 | சாரதி | 03 | QR 1500+200 |
| 17 | விற்பனையாளர் | 02 | QR 1500+200 |

E-mail:rajagoodway@yahoo.com (C/3924)

**தொடர்புகளுக்கு:**

***ரஜரட்ட குட்வே ட்ரவல்ஸ்***

இல 561/86K மக்கள் சந்தை வீதி (புதிய பஸ் நிலையம்)
அநுராதபுரம் தொலைபேசி 025 222 4848,
077 3875718. அரச பதிவு இல 2119


## பொலிஸ் பிரிவு நேற்று ஆரம்பம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் தேர்தல் கால வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறையிடுவதற்கென பொலிஸ் பிரிவு ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலாளரினால் இப்பிரிவு நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (18)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 315 |
| திகதி - | 2014.12.09 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

**02 14 39 51 H**

பரிசுத் தொகை ரூபா **19,002,760/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| [illegible] | 50,000/- | 12 | 600,000/- |
| [illegible] | 1,000/- | 197 | 197,000/- |
| [illegible] | 1,000/- | 379 | 379,000/- |
| [illegible] | 60/- | 9109 | 546,540/- |
| [illegible] | 40/- | 4773 | 190,920/- |
| [illegible] | 20/- | 119704 | 2,394,080/- |
| [illegible] | 20/- | 17257 | 345,140/- |
| [illegible] | 19,002,760/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,652,680/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **19,236,860/-**

2014.12.12ம் திகதி வெள்ளிக்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது நீல வர்ண டிக்கட்டுகளாகும்

(C/3918)

அபிவிருத்தி லொத்தர் சபை


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

யாழ்.பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களிற்கு ஒருவருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

01. மாணவர் விடுதி, இல.11, கோணாவளை லேன், கொக்குவில்.
02. மாணவர் விடுதி, கோணாவளை லேன் கொக்குவில்.
03. மாணவர் விடுதி, கோணாவளை லேன், கொக்குவில்.
04. மாணவர் விடுதி, இல.01, பனிக்கர்லேன், திருநெல்வேலி.
05. மாணவர் விடுதி, இல.30, கோணாவளை லேன், கொக்குவில்.
06. மாணவர் விடுதி, இல.171, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.
07. மாணவர் விடுதி, இல.43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
08. ஊடக வளங்கள் பயிற்சி நிலையம், இல.84, ஜீம்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.
09. இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு (AHS), திருநெல்வேலி.
10. பட்டப்படிப்புகள் பீடம், இல.67, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
11. பட்டப்படிப்புகள் பீடம், பாலாலி வீதி, திருநெல்வேலி.
12. வணிகத்துறை, வளாக வீதி, திருநெல்வேலி.
13. மாணவர் விடுதி, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.
14. மாணவர் விடுதி, இல.02, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குழி.
15. மாணவர் விடுதி, இல.46, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
16. மாணவர் விடுதி, இல.155, பலாலி வீதி, திருநெல்வேலி.
17. மாணவர் விடுதி, கெக்கிலுப்பாய் லேன், இணுவில்.
18. மாணவர் விடுதி, 'கயிலை' நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
19. மருத்துவ மாணவர் விடுதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
20. மாணவர் விடுதி, ஊரெழு.
21. பல்கலைக்கழக விருந்தினர் விடுதி, இல.63, கலட்டியம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
22. விவசாய பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி.
23. பொறியியல் பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி.
24. அரச அதிபரின் பழைய வாசஸ்தலம், அறிவியல்நகர், கிளிநொச்சி.
25. அரச அதிபரின் விருந்தினர் விடுதி, அறிவியல்நகர், கிளிநொச்சி.
26. மாணவர் விடுதி, உதயநகர், கிளிநொச்சி.
27. மாணவர் விடுதி, கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி.
28. பெண்கள் விடுதி, அறிவியல் நகர், கிளிநொச்சி.
29. மாணவர் விடுதி, திருநகர் கிளிநொச்சி.
30. மாணவர் விடுதி, இல.48, கணேசபுரம் கிளிநொச்சி.

பொதுசன பாதுகாப்புச் சட்டம், ஒழுங்குகள் அமைச்சில் பதிவு செய்துள்ள குறைந்தது 3 வருடங்கள் அனுபவம் உள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களையும், மேலதிக விபரங்களையும் 24.12.2014 பிற்பகல் 2.30 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர், நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். முறையாக பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கான பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலைமனு 2015'** என அடையாளமிடப்பட்டு 29.12.2014 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் **பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பொ.இல.57, யாழ்ப்பாணம்.** என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம். அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலைமனுப்பட்டியில் இடலாம்.

விலை மனுக்கள் 29.12.2014 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு பரிசீலிக் கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். சம்பளச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாத சம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்குனரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.

C/3477

# ஆறுமுகநாவலரின் 135 ஆவது குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 135 ஆவது குருபூசை விழா 2014 நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவிலடி திவ்விய ஜீவன மண்டபத்தில் இந்து கலாசார திணைக்கள உதவிப்பணிப்பாளர் ம.சண்முகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சி.தில்லைநடராஜா சிறப்பு விருந்தினராக சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளாரகள்.

வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.ஆனந்தலட்சுமி, ஆசியுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நன்றியுரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜகுமார் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

சிறப்புச்சொற்பொழிவாக தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன புலவர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் நால்வர் நெறியில் நாவலர் என்னும் விடயத்தில் சொற்பொழிவாற்றவுள்ளார். மேலும் அற நெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு நடனம் பண்ணிசை கலை நிகழ்வுகளும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநவலர் பெருமானின் குருபூசையை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பிரதேச மாவட்ட மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (63)

# கிணற்றடியில் வழுக்கி வீழ்ந்த விளையாட்டு உத்தியோகத்தர் மரணம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கிணற்றடியில் வழுக்கி வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது. இதில் அளவெட்டி மாசியப்பிட்டியைச் சேர்ந்த சுரேந்திரன் சதீஸ்கண்ணா (வயது - 33) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த இவர் வழுக்கி வீழ்ந்து மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற வேளையில் உயிரிழந்துள்ளார். சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.(25)

# 43 இந்திய மீனவர்களுக்கு 22 ஆம்திகதி வரை விளக்கமறியல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 43 பேரையும எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைத்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவர்களைக் கடற்படையினர் கைதுசெய்தனர்.

அத்துடன் இவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்தி 5 றோலர்களை கடற்படையினர் கைப்பற்றினர். இவர்கள் அனைவரும் கடற்படையினரால் அழைத்துவரப்பட்டு நேற்று நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் நேற்று பிற்பகல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (25)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | PROGRAM NAME |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | HELLO DD |
| Am 10.30 | மக்கள் முகம் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | அட்டகாசம் (அதிர்டி திரைப்படம்) |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிராதான செய்தி |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | கலவரம் (திரைப்படம்) |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வாழ்வாதார உதவித்திட்டத்தின் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும்



மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். அவர்கள் கௌரவமாக வாழ வேண்டும் என்பதற்காகவே கிராம தரிசனம் நிகழ்ச்சியினூடக குக்கிராமங்கள் வரை சென்று மக்களின் பிரச்சினைகளை, குறைபாடுகளை, தேவைகளை, அறிந்து திட்டங்கள் வகுத்துச் செயற்பட்டு வருகின்றோம் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவித் திட்டத்தில் கோழிக்குஞ்சுகளும் கூடுகளும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ஒரு பத்திரிகையில் வாழ்வின் எழுச்சி உதவித் திட்டங்களில் அரசியல் கட்சியொன்று தலையீடு. கட்சி ஆதரவாளர்களுக்கு உதவி எனச் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள், மிகவும் வறுமையில் உள்ள குடும்பங்கள் எனப் பல்வேறு ஆராய்வுகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்டவர்களே பயனாளிகளாக உள்ளனர். அவ்வாறான பயனாளிகள் குறித்த கட்சியின் ஆதரவாளர்கள் என குறிப்பிட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

இத்திட்டம் மத்திய அரசாங்கத்தின் திட்டமாகும். இதனை மத்திய அமைச்சரின் பிரிதிநிதிகள் பிரதேசங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு பயனாளிகளை அடையாளம் காண்பித்து உதவுவதை கூட்டமைப்பினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஏனெனின் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள்ள மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு செயற்படுத்தாமல் அந்நிதி திறைசேரிக்கு திரும்பவுள்ளது. இதனால் கூட்டமைப்பினருக்குள்ளேயே கோஷ்டிச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை நாம் காண்கின்றோம்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் தம்பிராசா மணிதரன், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் இந்திரன் கைலாஜினி, வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் சிவானந்தஜயர் செல்வலிங்கம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் 7 மையங்களில் வைத்து பயனாளிகளுக்கு இவ்வாழ்வாதாரங்கள் வழங்கப்பட்டன.

# நத்தார் நிகழ்வு

ஜி.எப்.ஏ. முன்பள்ளி சிறுவர்களின் நத்தார் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி பிலிவோர்ஸ் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் இரவீந்தரதாஸன் கலந்துகொள்ளவுள்ளார்.

# ஆளுநர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ண உதைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.சு.சந்திரசிறி தெரிவித்தார்.

நேற்று யாழ்.பொதுநூலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ள உதைபந்தாட்ட போட்டியில், வடமாகாணத்தில் இருந்து 18 கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழகங்களுக்குள் சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், சிறந்த முன்னணி வீரர், சிறந்த பின் கள காப்பாளர்களுக்கான விஷேட பரிசில்களும், பங்குபற்றும் கழகங்களுக்குள் வெற்றி பெறும் அணிகளுக்கு பதக்கங்களும், முதலாவது அணிக்கு 1 இலட்சம் ரூபாவும், இரண்டாவது அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (25)


## தொலைக்காட்சித் துறையில் சாதிக்க வேண்டும் என கனவு காணும் திறமையுள்ள உங்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

DDTV யில் நீங்கள்

- செய்தி வாசிப்பாளராக ஆசைப்படுகிறீர்களா?
- நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஜொலிக்கவேண்டுமா?
- படத்தொகுப்புத் துறையில் கைதேர்ந்தவரா (Editor? (Adobe Premier CC, After Effect, 3 D Max/ Maya/ Cinema 4D)
- சிறந்த படப்பிடிப்பாளரா (Camera Man)?
- ஒப்பனைத்துறையில் முன் அனுபவமும் திறமையுமுள்ளவரா?
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவமும் வல்லமையும் மிக்கவரா?
- அலுவலகப் பணிகளில் ஆர்வம் மிக்கவரா?
- (தகைமைகள் க.பொ.த சாதாரணதர சித்தி மற்றும் கணனிசார் அறிவு)

உங்கள் சுயவிபரக்கோவை, அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் எம்மைச் சந்தியுங்கள்

காலம் : 13.12.2014 திகதி சனிக்கிழமை, முற்பகல் 10.00 மணி

இடம்: இல.50/57, 3 ஆம் மாடி, யாழ். மாநகரசபை கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(இ)

# வடக்கு மாகாண அதிகாரத்தில் அபிவிருத்தியை விரும்பாதவர்கள்

## மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கவலை



(ஏழாலை)

எந்த அபிவிருத்தியும் வேண்டாம் என்று பிரசாரம் செய்தவர்களைத்தான் வடக்கு மாகாண சபையின் அதிகார பீடத்தில் அமர்த்தி இருக்கின்றனர் எம் மக்கள் என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவரின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வழங்கலின் மூலம் ஏழாலை லெனின் சனசமூக நிலையத்திற்குத் தளபாடங்கள் வழங்கும் வைபவத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிவடைந்து கடந்த ஐந்து வருடங்களாகத்தான் நாம் அபிவிருத்திப்பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். இங்கு கோரப்பட்ட பல விடயங்கள், அந்த அபிவிருத்தியின் ஒரு பங்கினை சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளுக்கும் பகிரும்படியான வேண்டுகோளாகும். இதற்கான முயற்சிகளில் தான் நாம் பன்னெடுங்காலமாக ஈடுபட்டு வருகின்றோம்.

ஆனால் துரதிஷ்டவசமாக எமக்கு எந்த அபிவிருத்தியும் வேண்டாம் என்று பிரசாரம் செய்தவர்களைத்தான் வடக்கு மாகாண சபையின் அதிகார பீடத்தில் அமர்த்தி இருக்கின்றனர் எம் மக்கள். அவர்களோ செயற்றிறனற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தவறினை வருங்காலத்திலாவது தொடர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் சுன்னாகம் இணைப்பாளர் வலன்ரைன், லெனின் சனசமூக நிலைய நிர்வாகத் தலைவர் சி.சோதிலிங்கம், லெனின் சனசமூக நிலைய நிர்வாகக்குழு உபசெயலாளர் திருமதி சி.பாமினி, முன்பள்ளி ஆசிரியர்கள் திருமதி சு.சிறிபரா, திருமதி இ.மோகனா மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் கொ. ஜக்சீல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருப்பதி ஏழுமலையானை தரிசித்தார் ஜனாதிபதி



இந்தியாவின் திருப்பதிக்கு சென்று ஏழுமலையானை தரிசனம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார். திருப்பதி ஏழுமலையானைத் தரிசனம் செய்ய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு திருப்பதிக்கு சென்றார். நேற்றுக் காலை சுவாமி தரிசனம் முடிந்து அங்கிருந்து நேரடியாக இலங்கை வந்தடைந்தார்.

திருப்பதி சென்ற ஜனாதிபதிக்கு கர்நாடக அரசால் அங்கு வரவேற்பளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# இந்தியக் கடற்படைக் கப்பல் 'சுகன்யா' கொழும்பில்

(கொழும்பு)

இந்திய கடற்படைக் கப்பல் 'சுகன்யா' நல்லெண்ண விஜயத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்துள்ளது.

துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பலுக்கு இலங்கை கடற்படையினரின் பாரம்பரிய கலாசார மரியாதைகள் வழங்கப்பட்டு வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

அதன் பின்னர் 'சுகன்யா' கப்பலின் கட்டளை அதிகாரி தளபதி எம்.டி.துரைபாபு, இலங்கை மேற்கு கடற்படை தளபதியும், பிரதேச துணைத் தளபதியுமான கே.ஜி.போல் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலொன்று கொழும்பு மேற்கு கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இருவருக்குமிடையில் நல்லெண்ண கலந்துரையாடல்களும் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

# மைத்திரி வெற்றியீட்டினால் சுதந்திரக் கட்சி ஆலோசகராக சந்திரிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிக முக்கியமான பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

செய்தி ஆசிரியர்கள் மற்றும் ஊடகப் பிரதானிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் பதவியில் சந்திரிக்கா அமர்த்தப்படுவார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கண்ணி மோசடிகள் இடம்பெறவில்லை, தேர்தல் ஆணையாளர் மீது பூரண நம்பிக்கை இருக்கின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினால் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் என்ற அச்சம் கிடையாது.

நிச்சயமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட முடியும். படையினர் மீது பூரண நம்பிக்கை இருக்கிறது என்றார்.

## சூடேற்றும்...

அரசியலுக்கும், நடைமுறைச் சாத்தியமில்லாத பேச்சுக்களையும் நம்பி ஏமாந்ததன் காரணமாகவே கடந்தகாலங்களில் எமது மக்கள் பல்வேறுபட்ட அவலங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது.

இருந்தபோதிலும், இன்று அச்சமற்ற ஓர் அமைதியான சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில் இந்த அமைதிச் சூழலுக்காக எமது மக்கள் அளவிட முடியாத அர்ப்பணிப்புகளைச் செய்துள்ளனர்.

அந்தவகையில், யுத்தத்தின் கொடுமைகளையும், மக்கள் எதிர்கொண்ட துன்ப, துயரங்களையும் நான் நன்கறிவேன்.

எனவே, இன்றுள்ள இளைய சமூகம் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தவறான வழிநடத்தல்களுக்கோ, துஷ்பிரயோகங்களுக்கோ இடம்கொடுக்காது தமதும், தாம் சார்ந்து வாழும் சமூகத்தினதும் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென அமைச்சர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

சந்திப்பில் கலந்து கொண்ட பட்டதாரிகள் தமது வேலை வாய்ப்புகள் தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்திற்கு தெரியப்படுத்தினர்.

2012, 2013, 2014 ஆம் கல்வி யாண்டுகளில் பல்கலைக் கழகங்களில் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சரின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) உடனிருந்தார்.

## இராதாகிருஷ்ணன்...

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க தீர்மானித்ததாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

# இயங்க ஆரம்பித்தன 5 உப ரயில் நிலையங்கள்




யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 5 உப ரயில் நிலையங்கள் நேற்று தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன. இதன்படி உப ரயில் நிலைய அதிபர்களாக நியமனம் செய்யப்பட்ட 5 உப நிலைய அதிபர்களிடம் நேற்று பதில் ரயில் நிலைய அதிபர் (பயணப் பிரிவு) மொகமட் இஸ்மாயில் ஹாரூம் பொறுப்புக்களைக் கையளித்தார். கடந்த எட்டாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் உப நிலைய அதிபர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் தச்சன்தோப்பு உப ரயில் நிலையம், சங்கத்தானை உப ரயில் நிலையம், மீசாலை உப ரயில் நிலையம், மிருசுவில் உப ரயில் நிலையம், எழுதுமட்டுவாழ் உப ரயில் நிலையம் ஆகிய நிலையங்களுக்கே உப நிலைய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி இந்த உபநிலையங்கள் நேற்று தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன.

# மல்லாவி இளைஞன் சடலமாக மீட்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சீனி மூடைகளை பாரவூர்தியில் ஏற்றிவந்த சமயம் காணாமற்போனார் என்று தெரிவிக்கப்பட்ட இளைஞன் நேற்று முன்தினம் அநுராதபுரம் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மல்லாவியைச் சேர்ந்த ஆ. துசாந்தன் (வயது-21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 300 சீனி மூடைகளை ஏற்றிவந்த பாரவூர்தியையும், அதில் பயணித்த இருவரையும் கடந்த 30ஆம் திகதி முதல் காணவில்லையென சீனி மூடைகளின் உரிமையாளர்கள் கடந்த 2 ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் இணைந்து பாரவூர்தியொன்றில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சீனி மூடைகளை தருவித்துள்ளனர்.

இதன்போது பாரவூர்தியின் சாரதியும், உதவியாளரும் புத்தளம் வரை தொடர்பில் இருந்தனர் என்றும் அதன் பின்னர் அவர்களுடனான தொடர்பு அற்றுப் போனதாகவும் உரிமையாளர்கள் தங்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நில்லையில் அநுராதபுரம் காட்டுப்பகுதியில் 'சடலம் ஒன்று காணப்பட்டு அது மீட்கப்பட்டுள்ளது. குறித்த சடலத்தை காணாமற் போன இளைஞனின் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

# நாட்டைக் கட்டியெழுப்பும் சக்தி மைத்திரியிடம் இல்லை

## எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரணிலுக்கும், சந்திரிக்காவுக்கும் இடையில் சிறைப்பட்டுள்ள ஒருவராக மைத்திரி பால சிறிசேன காணப்படுவதாகவும், மைத்திரிபால வெற்றி பெற்றாலும் அவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனவும் நாளைய நாடு எனும் தேசிய அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாள்ர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளில் 60 வீதமானவைகள் எதிர்க் கட்சி பொது அபேட்சகருடன் இணைந்து அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என முயற்சி செய்கின்றன.

இருப்பினும் வெற்றிபெற்றால் அவருடைய நிலைமை இவ்வாறு தான் இருக்கும் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

## யாழ்.மாவட்டத்தில்....

சாவகச்சேரி பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம், வேலணை பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களில் தேர்தல் முறைப்பாடுகளை பொதுமக்களோ அல்லது கட்சிகளோ பதிவு செய்ய முடியும்.

இந்த வகையில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு கடமையாற்றுவதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். பற்றாக்குறை காணப்படும் பட்சத்தில், தென்பகுதியில் இருந்தும் அரச அதிகாரிகள் வரவழைக்கப்படுவார்கள் என்றும் மேலும் தெரிவித்தார். (25)

## யாருக்கு...

கிராமமாகச் சென்று மக்களின் கருத்துக்களை நாம் அறிந்து வருகின்றோம். எவ்வாறெனினும், இன்று வரை யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை என்றார்.

... அச்சகத்தில் 2014 டிசம்பர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.